# வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும்

## தரம் 08

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Graphic Designed by : Ravindra Tharanga

# வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

## தரம் 08

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்**

**தரம் - 08**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

முதற் பதிப்பு 2008

© தேசிய கல்வி நிறுவகம்

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புதிய நூற்றாண்டில் ஏற்படுத்தப்படும் இக்கலைத்திட்ட மறுசீரமைப்பானது தற்போது பாடசாலைகளில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு வழி முறையாகக் கருதப்பட முடியும். இக்கலைத்திட்டமானது இன்றைய இளஞ் சந்ததியினர் எதிர்நோக்கியுள்ள தனிப்பட்ட இயலாமைகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் கல்வி முறையினை நோக்கின் இற்றைக்கு பல வருடங்களுக்கு முன் இலங்கையானது கல்வித் துறையிலே மிகவும் முதன்மை நிலையிலிருந்தது. ஆனால் தற்போது ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பின்னடைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளாது நிகழ்காலத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு சீர்த்திருத்தங்களை மீண்டும் மீண்டும் முன்வைத்தமை இப்பின்னடைவுக்கான காரணிகளுள் ஒன்றாகும்.

இவ்வாறான நிலையிலிருந்து விடுபடும் நோக்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகள் தெளிவானதொரு தொலைநோக்கின் அடிப்படையில் கலைத்திட்டத்தில் மறுசீரமைப்பை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். புதிய கலைத்திட்டத்தின் நோக்கமானது மாணவர் சமூகத்தின் தேடலையும் கற்றலையும் ஊக்குவிப்பதுடன் மாணவரின் தேர்ச்சிகளை மேம்படுத்துவதுமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு ஆசிரியரின் வகிபாகத்தில் முழுமையான மாற்றம் ஏற்படுவது அத்தியாவசியமானது. இப்புதிய கலைத்திட்டமானது தற்போது நிலவும் ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து மாணவர்மையக் கல்விக்கும் தேர்ச்சிமையக் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆசிரியர் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் தயாராகுதல் வேண்டும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியரை அவ்வாறானதொரு முறைக்கு இட்டுச் செல்வதற்குப் பெருமளவு பங்களிப்புச் செய்யும் என நம்புகிறேன்.

அறிவுரைப்பு வழிகாட்டியிலுள்ள வழிகாட்டல்களை நன்கு பின்பற்றுவதனூடாக வெற்றிகரமான ஆசிரியராக மிளிர்வதற்கான ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் கற்பித்தலின் போது மாணவர்களைக் கணிப்பிடுவதற்கும் இது உங்களுக்கு உதவும். தேடலும் தர உள்ளீடுகளும் அடங்கிய வழிகாட்டலானது மாணவர்களுக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அதிபர்களுக்கு நேரசூசியைத் தயாரிக்கும் போதும் அருமையான வளங்களைப் பகிர்ந்தளிக்கும் போதும் வெளிவாரி கண்காணிப்புகளின் போதும் இவ்வழிகாட்டல்கள் பெரிதும் உதவும்.

இவ் அறிவுரைப்பு வழிகாட்டியானது விதிக்கப்பட்ட ஒன்றன்று. ஆசிரியர்களுக்கு ஆக்கத் திறனுடன் பொருத்தமான பல்வேறு செயற்பாடுகளையும் சுயமாக உருவாக்கிக் கற்பிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வறிவுரைப்பு வழிகாட்டியிலுள்ள செயற்பாடுகள் மாதிரிகளாகும். பிரதேச வேறுபாடுகளுக்கேற்ப ஆசிரியர்கள் சுயமாக செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் உதவிய கல்வியியலாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வெளிவாரியான உதவிகளை வழங்கியவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்ரமசிங்ஹ***
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

.

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்த்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச் செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்த்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங் காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்கின்ற அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றின் உருவாக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற, ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்துகொள்வதுடன், அதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நூலில் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச் செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத் தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றற் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு சென்றடையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போஷிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை வழிகாட்டியாகக் கொள்ளவும். இதனூடாக புத்தாக்கத்திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தற் செயன்முறையின் போது மாணவர்கள் எப்போதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்-

இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல்-கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

***விமல் சியம்பலாகொட***
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

.

# அறிமுகம்

வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிகைக்கல்வியும் 8 ஆந் தரத்திற்கான இப்புதிய பாடத்திட்டமானது 2009 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் பாகமானது வாழ்க்கைத் தேர்ச்சிகள் தொடர்பானதாகும். அதற்கிணங்க ஐந்து பிரதான தேர்ச்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. தேர்ச்சித் தலைப்புடன் தொழிற்படல், மனவெழுச்சிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல், முரண்பாட்டுத் தீர்வு, தலைமைத்துவத்திற்கு மதிப்பளிப்பதுடன் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்துகொள்ளல், வேலை உலகிற்கு இசைவாக்கமடைதல் போன்ற தேர்ச்சிகள் குறித்து கவனஞ் செலுத்தப்பட்டுள்ளன.

பாடத்திட்டத்தின் இரண்டாம் பாகமானது குடியுரிமைக்கல்வி பற்றியதாகும். இப்பகுதி பிரதான தேர்ச்சிகள் நான்கினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் நலன்பேணும் பொருட்டு நடாத்தப்படும் பொதுச் சேவைகளை வினைதிறனுடனும் முறையாகவும் பயன்படுத்துதல், மக்கள் சமூகத்தின் பாதுகாப்பான நிலைபேற்றிற்குப் பங்களிப்புச் செய்தல் போன்ற தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டத்தினைப் பயிலுவதனூடாக மானிடப் பண்புகள் நிறைந்த எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி தேவைகளை நிறைவேற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் செயற்பாடுகள் எழுதப்பட்டுள்ளன. எனினும் இவை விதிக்கப்பட்ட ஒன்றன்று. ஆசிரியர்கள் தமது தேவைக்கேற்ப புதிதாகச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள முடியும். அவை 40 நிமிடங்களுக்கு வரையறுக்கப் பட்டிருத்தல் நன்று.

மேற்படி பாடத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள வாழ்க்கைத் தேர்ச்சிகள், குடியுரிமைக் கல்வி ஆகிய இரு பாடப்பரப்புகளும் வாரமொன்றில் நிறைவு செய்யப்பட வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட தவணைகளில் நிறைவு செய்யப்பட வேண்டிய பாடப்பரப்புகள் பின்வருமாறு அமையும்.

| பாடம் | தவணை | தேர்ச்சி மட்டம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| வாழ்க்கைத் தேர்ச்சிகள் (பாகம் ஒன்று) | 1ம் தவணை<br>2ம் தவணை<br>3ம் தவணை | 8.1.1, 8.1.2, 8.2.1, 8.2.2, 8.3.1, 8.3.2, 8.4.1, 8.5.1, 8.5.2 | 11<br>09<br>10 |
| குடியுரிமைக்கல்வி (பாகம் இரண்டு) | 1ம் தவணை<br>2ம் தவணை<br>3ம் தவணை | 8.1.1, 8.1.2, 8.1.3, 8.2.1, 8.2.2, 8.2.3, 8.2.4, 8.3.1, 8.3.2, 8.3.3, 8.4.1, 8.4.2, 8.4.3 | 08<br>12<br>10 |

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் மூன்றாம் பகுதி கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீடுகள் குறித்து கவனஞ் செலுத்துகிறது. தவணையொன்றுக்கு ஒரு மதிப்பீட்டு கருவி வீதம் மூன்று தவணைகளுக்குமான மதிப்பீட்டுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக மதிப்பீட்டுக் கருவிகள், தேவையெனின் உங்களால் தயாரித்து வகுப்பறையில் நடைமுறைப்படுத்தலாம்.

மேற்படி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் உங்களது அபிவிருத்திசார் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. அத்துடன் இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியினை தயாரிப்பதில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வாழ்க்கைத் தேர்ச்சிகள் (பாகம் I)

## ஆலோசனைக்குழு

| | | |
|---|---|---|
| பேராசிரியர் லால் பெரேரா | - பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்ஹ | - முன்னாள் பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| திரு.விமல் சியம்பலாகொட | - உதவிப்பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| கலாநிதி. லலிதா பட்டுவிட்டகே | - முன்னாள் பணிப்பாளர் | - தே.க.நி |

## மேற்பார்வை

கலாநிதி. உ. நவரத்தினம் - பணிப்பாளர் - சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி

## இணைப்பாளர்

திரு. எம்.கே. கிங்ஸ்லி பிரியந்த - செயற்றிட்டத்தலைவர் - தே.க.நி

## எழுத்தாளர் குழு

உள்வாரி:

| | | |
|---|---|---|
| கலாநிதி எச்.டீ.ஏ லலிதா பட்டுவிட்டகே | - பிரதம செயற்றிட்ட அதிகாரி- | தே.க.நி |
| திரு.எம்.கே. கிங்ஸ்லி பிரியந்த | - செயற்றிட்ட அதிகாரி - | தே.க.நி |
| திருமதி.எம்.பீ.ஆர். தனவர்த்தன | - பிரதம செயற்றிட்ட அதிகாரி- | தே.க.நி |
| திருமதி.டீ.எச்.சீ.என். தர்மபால | - செயற்றிட்ட அதிகாரி - | தே.க.நி |
| திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம | - செயற்றிட்ட அதிகாரி - | தே.க.நி |
| திருமதி டபிள்யு.ஏ.கே. சுதர்சனி | - செயற்றிட்ட அதிகாரி - | தே.க.நி |
| திருமதி யூ.ஏ.சீ.குணதிலக்க | - செயற்றிட்ட அதிகாரி - | தே.க.நி |
| திரு.எஸ். கருணாகரன் | - உதவிச் செயற்றிட்ட அதிகாரி | தே.க.நி |

வெளிவாரி:

| | |
|---|---|
| செல்வி ஐராங்கனி ரணசூரிய | - உப பீடாதிபதி, ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி |
| திரு. ஜே.எம்.எம். ஜயசுந்தர | - ஆசிரியர் ஆலோசகர், நிக்கவரெட்டிய வலயம் |
| திரு.எம்.ஏ.ஏ.பீ. மல்லவராச்சி | - ஆசிரியர் ஆலோசகர், நிக்கவரெட்டிய வலயம் |
| செல்வி.ஏ.ஏ.கல்யாணவத்தி | - ஆசிரியர் ஆலோசகர், பிலியந்தலை வலயம் |
| திரு. என்.கமர்தீன் | - ஆசிரியர் ஆலோசகர், கெக்கிராவை வலயம் |
| திரு. எம்.எச்.எம்.யாக்கூத் | - ஓய்வு பெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி -தே.க.நி |
| திரு. கறாமத் | - அதிபர் சேவைத்தரம் 1<br>டீ.பீ. ஜாயா முஸ்லிம் வித்தியாலயம், கொழும்பு |
| திரு.நஹாஸ் | - ஆசிரிய ஆலோசகர், கம்பஹா வலயம் |
| திருமதி. டீ.கே. ருக்கையா | - ஆசிரியர் சேவை,பாபுல் ஹஸன்.ம.வி,வரக்காபொல. |

## கணனி வடிவமைப்பு

செல்வி. எம்.என்.எப் றிஹானா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்

## ஏனைய உதவிகள்

| | |
|---|---|
| செல்வி ஏ.எல்.எஸ்.பீ. அத்தபத்து | - தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி ஷிரானி சமரக்கொடி | - தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. ஆர்.எம். ரூபசிங்க | - தேசிய கல்வி நிறுவகம் |

# குடியுரிமைக்கல்வி (பாகம் II)

## ஆலோசனைக் குழு

| | | |
|---|---|---|
| பேராசிரியர் லால் பெரேரா | - பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்ஹ | - முன்னாள் பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| திரு.விமல் சியம்பலாகொட | - உதவிப்பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |
| கலாநிதி. லலிதா பட்டுவிட்டகே | - முன்னாள் பணிப்பாளர் | - தே.க.நி |

## மேற்பார்வை

கலாநிதி உ. நவரத்தினம் - பணிப்பாளர் - சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி

## இணைப்பாளர்

| | | |
|---|---|---|
| திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம | - செயற்றிட்டத்தலைவர் | - தே.க.நி |

## எழுத்தாளர் குழு

உள்வாரி:

| | | |
|---|---|---|
| திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம | - செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திரு.எம்.கே.கே. பிரியந்த | - செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி டபிள்யு.ஏ.கே. சுதர்சனி | - செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி யூ.ஏ.சீ.குணதிலக்க | - செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திரு.எஸ். கருணாகரன் | - உதவிச் செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |

வெளிவாரி:

| | |
|---|---|
| திரு.ஸீ.எஸ்.ஜயசிங்ஹ | - ஆசிரியர் நிலைய முகாமையாளர் ஹொரண வலயம் |
| திருமதி எஸ்.பீ.பேமாவதி | - உதவி ஆசிரியை பிற்றபத்தர ம.வி, மாத்தறை. |
| திருமதி எம்.எம்.ஜீ.ஸீ.ரத்நாயக்க | - உதவி ஆசிரியை பெண்கள் உயர்பாடசாலை,கண்டி |
| திருமதி பீ.பீ.மாலிக்கா | - ஆசிரிய ஆலோசகர் ஹம்பாந்தோட்டை வலயம் |
| திரு.நிலந்த குறுப்பு ஆராச்சி | - உதவி ஆசிரியர், பொல்கொட ம.வி. |
| திரு. எம்.எச்.எம்.யாக்கூத் | - ஓய்வு பெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி -தே.க.நி |
| திரு. கறாமத் | - அதிபர் சேவைத்தரம் 1 டீ.பீ. ஜாயா முஸ்லிம் வித்தியாலயம், கொழும்பு |
| திரு.நஹ்றாஸ் | - ஆசிரிய ஆலோசகர், கம்பஹா வலயம் |
| திருமதி. டீ.கே. ருக்கையா | - ஆசிரியர் சேவை,பாபுல் ஹஸன்.ம.வி,வரக்காபொல. |

## கணனி வடிவமைப்பு

செல்வி. எம்.என்.எப் றிஹானா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்

## ஏனைய உதவிகள்

| | |
|---|---|
| செல்வி ஏ.எல்.எஸ்.பீ. அத்தபத்து | - தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி ஷிரானி சமரக்கொடி | - தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. ஆர்.எம். ரூபசிங்க | - தேசிய கல்வி நிறுவகம் |

# உள்ளடக்கம்

பக்கம்


- பாடநோக்கம் 02
- பாடத்திட்டம் 3-16
- பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் 17-18
- கற்றல் - கற்பித்தல் முறையியல்
  - அறிமுகம் 19-24
  - மாதிரிச் செயற்பாடுகள் 25-168
- பகுதி மூன்று - கணிப்பீடும் மதிப்பீடும் 169-173
- கற்றல் - கற்பித்தல் நீடிப்புக் கருவிகள் 174-183
- இணைப்பு - அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 184-189

# பாடத்திட்டம்

## 2.0 பாட நோக்கம் (பாகம் ஒன்று)

- தமது ஆற்றல்களையும், திறன்களையும், பலவீனங்களையும் அறிந்து கொண்டு எதிர்கால இலட்சியங்களைக் கட்டியெழுப்புதல்.
- நாளாந்தச் செயற்பாடுகளை மிகுந்த திட்டமிடலுடனும் ஒழுங்கமைப்புடனும் மேற்கொள்ளல்.
- மனவெழுச்சிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதுடன் மனஅழுத்தத்தைக் குறைத்துக் கொள்ளல்.
- ஆளுமை விருத்திக்காக விளையாட்டு, வினோத அம்சங்கள், அழகியல் சார்ந்த செற்பாடுகளில் ஈடுபட்டு ஓய்வைப் பயனுள்ளதாகக் கழித்தல்.
- சிறந்த ஆளிடைத்தொடர்புகளைப் பேணி பரிவுணர்வுடன் செயற்படுத்தல்.
- பயனுறுதியுள்ள தொடர்பாடலில் ஈடுபடுத்தல்.
- நாளாந்தச் செயற்பாடுகளில் உடன்பாடான (நேரான) மனப்பாங்குகளுடன் செயற்படுதல்.
- விமர்சன ரீதியாகவும் ஆக்கபூர்வமாகவும் தொழிற்படுதல்.
- தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வதுடன் தலைமைக்கு மதிப்பளித்தல்.
- பயனுறுதியுள்ள முடிவுகளை மேற்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
- இடர்முகாமைத்துவத்திற்குப் பங்களிப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களை இழிவளவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.
- தனிப்பட்ட, சமூக முரண்பாடுகளை இழிவளவாக்குதல்.

## பாட நோக்கம் (பாகம் இரண்டு)

- பன்மைச் சமூகத்தில் ஒற்றுமையாக வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளல்.
- மனிதப் பண்புகளையும் விழுமியங்களையும் பாதுகாத்து சிறந்த பிரசைகளாகுதல்.
- சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் மதிப்பளிக்கும் பிரசையாக சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- தனியாள், சமூகச் செயற்பாடுகளின் போது பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படல்.
- இலங்கை, உலகின் ஆட்சி முறைகள் தொடர்பாக விளங்கிக் கொள்ளல்.
- தொடர்ச்சியாக மாற்றமடைந்துவரும் உலகில் எதிர்பாராததும், பிரதிகூலமானதுமான சந்தர்ப்பங்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- அன்னியோன்யமாகவும் பொறுப்புணர்வுடனும் வகைகூறலுடனும் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்.
- சமூகத்தின் சீரான இயங்கு நிலைக்காக கழகங்களையும் அமைப்புகளையும் பயன்படுத்துதல்.

# வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் பாடத்திட்டம் I, II

## 8 ஆம் தரம் - வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் (பகுதி 1)

### 8.1 நேர்மனப்பாங்குடன் செயற்படல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.1 நேர்வகை மனப்பாங்குடன் செயற்படுவார். | 8.1.1 நாளாந்த வாழ்க்கையில் நல்ல எண்ணங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்படுவார். | • எண்ணங்களின் தன்மை<br>• என்னிடமுள்ள நல்லெண்ணங்கள்<br>• நல்ல எண்ணங்களுக்கமைய செயற்படுவதால் ஏற்படக் கூடிய விளைவுகள்<br>• ஒருவரின் எண்ணங்களில் தாக்கம் செலுத்தும் பல்வேறு மூல காரணிகள் | 04 |
| | 8.1.2 நல்ல எண்ணங்களைப் போசிக்கும் மூலங்களை இனங்கண்டு பயன் படுத்துவார். | • பல்வேறு மூலங்களினடிப்படையில் தோன்றும் எண்ணங்கள் தொடர்பாக ஆய்ந்தோய்ந்து செயற்படல்.<br>• நல்ல எண்ணங்களின் விருத்திக்கான காரணிகளை இனங்கண்டு அவற்றைப் பிரயோகித்தல் | 04 |

## 8.2 மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.2 மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர் கொள்வார். | 8.2.1 நாளாந்த வாழ்வில் தோன்றும் பல்வேறு மனவெழுச்சிகளை இனங் கண்டு பொருளுள்ள வகையில் துலங்குவார். | • பல்வேறுபட்ட மனவெழுச்சிகள்<br>• மனவெழுச்சிக்கேற்ப பல்வேறு நடவடிக்கைகளின் தன்மைகள், வினைவுகள்<br>• மனவெழுச்சிகளை நல்ல முறையில் கையாளுதல். | 03 |
| | 8.2.2 எளிய உள அழுத்தங் களை இனங்கண்டு அவற்றைப் பயனுள்ளதாக கையாள்வார். | • எளிய மன அழுத்தங்களை இனங்காணல்.<br>• எளிமையான மன அழுத்தங்களை பயனுள்ள விதத்தில் மாற்றிக் கொள்ளும் பல்வேறு நுட்ப முறைகளைக் கண்டறிதல்.<br>• பல்வேறு நுட்ப முறைகளைக் கையாள்வதன் மூலம் எளிமையான மன அழுத்தங்களை நல்ல விதமாக மாற்றிக்கொள்வர். | 03 |

## 8.3 முரண்பாடுகளை தீர்த்தல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.3 முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார். | 8.3.1 முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை இனங் கண்டு அவற்றைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார். | • முரண்பாடு வரைவிலக்கணம்<br>• பல்வேறுபட்ட முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளல்.<br>• முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்குரிய திறன்களை விருத்தி செய்தல். | 03 |
| | 8.3.2 முரண்பாடுகளை வெற்றி கரமாகத் தீர்த்துக் கொள்வார். | • முரண்பாடுகளை எளிதில் தீரத்துக் கொள்வதற்குரிய திறன்களை விருத்தி செய்தல்.<br>• முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய எளிமையான வழிமுறைகள். | 03 |

## 8.4 தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தலும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளலும்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.4 தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்து தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வார். | 8.4.1 தலைமைத்துவத்தின் அவசியத்தை இனங்கண்டு தலைவராகச் செயற்படுவார். | • தலைமைத்துவம் என்றால் என்ன?<br>• தலைமைத்துவத்தின் பண்புகள்<br>• தலைமைத்துவமும் தலைமைத்துவத்தைப் பின்பற்றலும் | 03 |

## 8.5 வேலை உலகிற்கு இசைவடைவோம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.5 வேலை உலகிற்கு இசைவடைவார். | 8.5.1 உழைப்பின் மகிமையை போற்றுவார். | • வேலையுலகின் பல்வேறுபட்ட தன்மை<br>• அனைத்துத் தொழில்களும் சமூக நிலவுகைக்கு அவசியமான வையாகும். ஒவ்வொருவரினதும் உழைப்பிற்கு பெறுமதியுண்டு. எனவே உழைப்பாளிகளுக்கு மதிப்பளித்தல் அவசியம். | 03 |
| | 8.5.2 பயிற்றப்பட்ட ஊழியத்தின் பெறுமானம் தொடர்பான விடயங்களைத் தேடி யாய்வார். | • பல்வேறு உற்பத்திக்கு பயிற்றப்பட்ட ஊழியம் தேவை. | 04 |

# 8 ஆம் தரம் - வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் (பகுதி II)

## 8.1 எமது பிரதேசத்தின் பொதுச் சேவைகள்

| **தேர்ச்சி** | **தேர்ச்சி மட்டம்** | **பாட உள்ளடக்கம்** | **பாடவேளை** |
|---|---|---|---|
| 8.1 மக்களின் நல்வாழ்வுக்காக பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் முறையாகவும் பயன்படுத்துவார். | 8.1.1 பொதுச் சேவைகளையும் பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் அறிந்து மனித வாழ்வின் நலனுக்கு அவற்றைப் பயன்படுத்துவார். | • எமது பிரதேசத்தின் பொதுச்சேவைகளை அறிந்து கொள்ளல்.<br>- பொதுச் சேவைகள் அறிமுகம்<br>- பொதுச் சேவைகளின் அவசியத்தன்மையும் அதன் பரவலாக்கமும்<br>- பொதுச்சேவைகளின் பண்புகள்<br>- பல்வேறுபட்ட பொதுச்சேவைகள்<br>    - நீர்<br>    - சுகாதாரம்<br>    - போக்குவரத்து<br>    - மின்சாரம்<br>    - தகவல் பரிமாற்றம்<br>• பொதுச்சேவை தொடர்பான நிறுவனங்களும் உத்தியோகத்தர்களும்<br>- நீர் வழங்கல்<br>- சுகாதார சேவை<br>- கல்வி வழங்கல்<br>- போக்குவரத்து சேவை<br>- மின்சாரம் வழங்கல்கள்<br>- தகவல் பரிமாற்றம் அல்லது செய்திப்பரிமாற்றம்<br>• அரசினூடாக வழங்கப்படும் வேறு பொதுச்சேவைகள்<br>- சூழல் பாதுகாப்பு<br>- சமூகப் பாதுகாப்பு<br>- பல்வேறு நலன்புரிச் சேவைகள்<br>• எமது பிரதேசத்தில் பொதுச் சேவை வழங்கும் வேறு அமைப்புக்களும் அவற்றினூடாக வழங்கப்படும் பொதுச் சேவைகளும் (உதா: கூட்டுறவு அமைப்புக்கள்) | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.1.2 பொதுச்சேவை வழங்கும் நிறுவனங்களும் அவற்றுடன் தொடர்பான பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவார். | • பொதுச் சேவைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களும் அவற்றின் கடமைகளும் வகைகூறலும்<br>- அனைத்து பொதுச்சேவைகளும் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதனூடாக மனித நேயத்தை ஏற்படுத்தல்.<br>• நீர்வழங்கல்<br>- தூய்மையான நீர் வழங்கல், முறையாக பங்கிடல், உரியவாறு நேரத்திற்கு வழங்குதல்.<br>• சுகாதார சேவை<br>- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சுகாதார சேவையை முறையாக வழங்கல், தொற்று நோய்த்தடுப்பு<br>• கல்வி வழங்கல்<br>- சமூகத்திற்குத் தேவையான நற்பிரசைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய கல்வியை வழங்கல்.<br>• போக்குவரத்து<br>- பயணிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கல்<br>- வினைத்திறனுள்ள சேவை வழங்கல்<br>- சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும், நற்பண்புகளுக்கும் உட்பட்டு சிறந்த சேவையை வழங்கல்<br>• மின்சாரம்<br>- நுகர்வோரிற்கு தொடர்ந்து மின்சார வசதியைப் பெற்றுக் கொடுத்தல். முடிந்தளவு முறையான சேவையை வழங்கல்.<br>• செய்திப் பரிமாற்றம்<br>- நம்பிக்கையானதாயும், முறையாகவும் சேவை வழங்கல், உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்கல், திடீர் விபத்து, இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக உடனடியாக அறிவுறுத்தல். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.1.3 பொதுச் சேவைகளைப் பயன்படுத்தல் தொடர்பான உரிமைகள், கடமைகள் தொடர்பாக அறிந்து செயற்படுவார். | • பொதுச்சேவையைப் பயன்படுத்தும் பிரசையொருவரின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>- கிடைக்கும் சேவையை முறையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துதல்.<br>- சேவைக்கான கொடுப்பனவுகளில் நேர்மையாக நடத்தல்<br>- பொதுச் சேவை தொடர்பாக நேர்ச் சிந்தனையை வளர்த்துக் கொள்ளல்.<br>- பொதுச் சேவையுடன் தொடர்புபட்ட சொத்துக்களையும் உபகரணங்களையும் பாதுகாத்தல். | 02 |

## 8.2 ஜனநாயக மக்கள் சமூகம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.2 ஜனநாயக வாழ்க்கை முறையினுடாக நற் சமூகமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார். | 8.2.1 ஜனநாயக வாழ்க்கை முறையின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்து பயன்படுத்துவார். | • ஜனநாயக வாழ்க்கை முறையை அறிமுகப்படுத்தல்.<br>• ஜனநாயக வாழ்க்கை முறையின் பண்புகள்<br>உ-ம்:<br>- பரஸ்பர ஒத்துழைப்புடன் கருமமாற்றல்<br>- பெரும்பான்மை விருப்புக்கு மதிப்பளித்தல்<br>- மாற்றுக் கருத்துக்களைச் சகித்துக் கொள்ளல்.<br>- பேச்சுவார்த்தை மூலம் தீர்மானமெடுத்தல்<br>- சுயகட்டுப்பாடு | 02 |
| | 8.2.2 தமது குடும்பம், பாடசாலையில் அவதானிக்கக்கூடிய ஜனநாயகப் பண்புகளுக்கு இசைவாக் கமடைவார். | • தமது குடும்பம் பாடசாலையில் அவதானிக்கக்கூடிய ஜனநாயகப் பண்புகள்<br>உ-ம்:<br>- குடும்பம், பாடசாலை, சமூகம், தனக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்<br>- பேச்சுவார்த்தை மூலம் சரியாக தீர்மானங்களுக்கு வரல் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.2.3 சிறுவர் உரிமைகள், கடமைகள் தொடர்பில் விளக்கத்துடன் கருமமாற்றுவார். | • பிள்ளையொன்றுக்குரித்தான உரிமைகளும் அவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும்<br>உ-ம்:<br>- தமக்கு, குடும்பத்திற்கு, பாடசாலைக்கு, சமூகத்திற்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் தனக்கு உரித்தான உரிமைகளும். | 02 |
| | 8.2.4 ஜனநாயக வாழ்க்கைக்கான தயார்நிலையை வெளிப்படுத்துவார். | • சமூகத்தின் மேம்பாட்டுக்கு ஜனநாயக வாழ்க்கை உதவும் விதம்<br>உ-ம்:<br>- மனிதனுக்குள் சிறந்த எண்ணங்கள் தோன்றுதல்<br>- குடும்ப அங்கத்தவருடனும் அயலவருடனும் நல்லுறவை வளர்த்துக்கொள்ளல்.<br>- முரண்பாடுகள் குறைந்த சமூகமொன்று உருவாதல்<br>- சட்டத்துக்கு மதிப்பளிக்கும், மனிதப்பண்புகள் நிறைந்த பிரசைகள் உருவாதல். | 02 |

## 8.3 பல்கலாசார சமூகம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.3 பல்கலாசார சமூக மொன்றில் சிறந்த பிரஜையாக வாழ்வார். | 8.3.1 பல்கலாசார சமூக மொன்றின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்வார். | • பல்கலாசார சமூகத்தை அறிமுகப்படுத்தல்<br>• பல்கலாசார சமூகமொன்றின் பண்புகள்<br>- பல்வேறு இனக்குழுக்கள்<br>- பல்வேறு சமயங்கள்<br>- பல்வேறு மொழிகள்<br>- பல்வேறு பழக்கவழக்கங்கள் | 01 |
| | 8.3.2 கலாசாரப் பல்வகைமைக் குள் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் கரும மாற்றுவார். | • இலங்கையின் கலாசாரப்பல்வகைமை<br>- மொழி<br>- சமயம்<br>- பழக்கவழக்கம்<br>- வேற்றுமையில் ஒற்றுமை காண்பார்.<br>• பல்வேறு கலாசாரப்பாரம்பரியங்களும் விழாக்களும்<br>• பல்வேறு இனங்களுக்குரிய பழக்கவழக்கங்கள்<br>உ-ம்:<br>- பிறப்பு, திருமணம், இறப்பு<br>• பல்வேறு சமயங்களுக்குரிய பழக்கவழக்கங்கள், விழாக்கள் அவற்றின் முக்கியத்துவம்<br>உ-ம்:<br>- பௌத்தம் (வெசாக், பொசோன்)<br>- இந்து (தைப்பொங்கல், தீபாவளி)<br>- இஸ்லாம் (ரமழான், ஹஜ்)<br>- கிறிஸ்த்தவம் (நத்தார், பெரிய வெள்ளி)<br>• ஒவ்வொரு கலாசாரத்தினதும் தனித்துவம் உறுதிப்படுத்தப்படல்<br>• ஒவ்வொரு கலாசார விடயங்கள் தொடர்பாகவும் தெளிவுபெறல்<br>• பரஸ்பரப் புரிந்துணர்வு காரணமாக முரண்பாடுகள் குறையும்.<br>• இனக்குழுக்களிடையே ஐக்கியம் ஏற்படல். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.3.3 கலாசாரப் பல்வகைமை யானது அபிவிருத்திச் செயன்முறையில் பயன் படுத்தப்படுமாற்றைத் தேடியறிவார். | • கலாசாரப் பல்வகைமையினூடாக நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஒன்றுபட்டுச் செயற்படுதல்.<br>• இன, மத, மொழி பேதமின்றி நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• வினைத்திறன் மிக்க பொருளாதாரச் செயற்பாடுகளினூடாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• கலாசாரப் பல்வகைமைக்கு மதிப்பளித்து தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார். | 01 |

## 8.4 சமகாலப் பிரச்சினைகள்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 8.4 மக்களின் சுமுக வாழ்க்கையில் பாதிப்புச் செலுத்துகின்ற இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முனைப்புடன் செயற்படுவார். | 8.4.1 விபத்துக்களையும் அனர்த்தங்களையும் அறிந்து கொண்டு அவற்றை இழிவளவாக்குவதில் பங்களிப்புச் செய்வார். | • இயற்கை அனர்த்தங்கள், மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் விபத்துக்கள்<br>- அனர்த்தங்கள் அறிமுகம்<br>- அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகளைக் குறைத்தல்<br>- துரிதமாகச் செயற்படல்<br>- அனர்த்தத்திற்குட்பட்டோரைக் காப்பாற்றுதல்<br>- சரியான முதலுதவி அளித்தல்<br>- அனர்த்தத்திற்குட்பட்டோரையும் சொத்துக்களையும் பாதுகாத்தல்<br>- உரிய இடங்களுக்கு அறிவித்தல் | 03 |
| | 8.4.2 வீதி ஒழுங்கு விதிகளை கடைப் பிடிப்பதன் மூலம் வீதி விபத்துக்களை இழிவளவாக்குவார். | • வீதி விபத்துக்கள்<br>- வீதி விபத்துக்களுக்கான காரணங்கள்<br>- விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்<br>- வீதி விபத்தொன்று ஏற்படும் போது நடந்து கொள்ள வேண்டிய விதம் | 03 |
| | 8.4.3 இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டின் மூலம் ஏற்படும் விபத்துக்களை அறிந்து அவற்றைக் குறைத்துக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்வார். | • இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டின் மூலம் ஏற்படும் விபத்துக்கள்<br>- விபத்து ஏற்படும் விதம்<br>- விபத்து ஏற்பட்டவிடத்து செயற்பட வேண்டிய விதம்<br>- விபத்தை தவிர்க்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் | |

# பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் (வாழ்க்கைத்தேர்ச்சிகள்)

''வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்'' பாடத்தைப் பாடசாலையில் கற்பிக்கும் போது வகுப்பறைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாது தேவையான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிவாரிச் செயற்பாடுகளிலும் மாணவரை ஈடுபடுத்தல் முக்கியமாகும்.

பாட இணைச் செயற்பாடுகளிலும் வகுப்பறைக்கு வெளியேயான செற்பாடுகளிலும் மாணவரை ஈடுபடுத்தலானது பல்வேறு துறைகளைச் சேர்ந்த திறன்களை அவர்களிடத்தே விருத்தி செய்வதற்குப் பெரிதும் துணையாக அமையும். முடிவெடுத்தல், தலைமைத்துவம், பங்களிப்பு, ஒழுங்கமைப்பு, திட்டமிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகளின் போது முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாணவரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். விசேடமாக பாடசாலையில் செயற்படுகின்ற இணைந்த கலைத்திட்டத்தினைச் செயற்படுத்தும்போது அதிபர் உட்பட எல்லா நிர்வாகத் தலைவர்களும் பிள்ளைகளும் வாழ்க்கைத்தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதில் கவனம் செலுத்தல் பயன்மிக்கதாக அமையும்.

இதற்கு மேலதிகமாக பல்வேறு சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தக் கூடியவாறு பாடசாலைக் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் நவீன மயப்படுத்தல் அவசியமாகும். விசேடமாக ஆசிரியர், பெற்றோர், சமூக வேலைத்திட்டங்களில் மாணவரின் பங்களிப்பையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் பாடசாலைக் கொள்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். மேலும் பாடசாலையில் எனது நல்ல வேலை நூல் எனும் நாட்குறிப்பேடு ஒன்றை ஒவ்வொரு மாணவனும் பேண வழிப்படுத்தப்படல் வேண்டும். இதனை இடைக்கிடையே பரீட்சிப்பதன் மூலம் மாணவரிடத்தே வலியுறுத்தல் முக்கியமானதாகும்.

விசேடமாக வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் எண்ணக்கருக்களை வாழ்க்கைத் தேர்ச்சி பாட ஆசிரியர் மட்டுமன்றி ஏனைய ஆசிரியரும் அபிவிருத்தி செய்தல் தொடர்பில் பாடசாலை கொள்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். அவர்களது ஒத்துழைப்பையும் இதற்காகப் பெறல் பொருத்தமானது. அவ்வாறே இப்பாடத்துடன் தொடர்புடைய சேவைகளைப் பெறக்கூடிய வெளி வளவாளர்கள் நிறுவனங்கள் போன்றவற்றின் பங்களிப்பைக் கூடியளவு பெற முனைய வேண்டும். வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியே பல்வேறு சந்தர்ப்பங்களினூடாக வாழ்க்கைத் தேர்ச்சிகள் வெளிக்காட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பாடத்தைக் கற்பதன் விளைவாக பாடசாலையில் ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறைவடைதல், மாணவர் மகிழ்வுடன் கற்கும் ஓரிடம் உருவாதல் போன்ற மகிழ்ச்சிகரமான சூழல் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் (குடியுரிமைக்கல்வி)

மனித இனத்திற்கு சமத்துவமாக சேவையாற்றவே பாடசாலை உள்ளது. உலக மக்கள் பற்றிய விளக்கத்தை வளர்க்கவும் மனித வாழக்கைக்கும் மனித இனத்திற்கும் கௌரவமளிக்கவும் பாடசாலையிலேயே கற்பிக்கப்படுகின்றது. மேலும் நல்ல மனப்பாங்கினையும் நல்ல நடத்தையும் கொண்ட ஆட்களை உருவாக்குவதும் பாடசாலையின் பொறுப்பாகும். ஒற்றுமையாகவும் ஒன்று சேர்ந்தும் முயற்சிகளிலீடுபடுவதன் மூலம் மாத்திரமே மனித இனம் அபிவிருத்தியடைய முடியும். இதற்கான அடிப்படை பாடசாலையினூடாகவே ஏற்படுத்தப்படுகின்றது. ஆகவே குடியுரிமைக்கல்வி எனும் பாடம் பாடசாலைகளில் கட்டாயமாகக் கற்க வேண்டிய பாடமாக உள்ளது.

பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை நன்கு பயனுறுதியுள்ள கற்றல் அனுபவங்களாக மாற்றுவதற்காக எல்லா மாணவரும் பங்கேற்கக்கூடிய, பிரதேசத்திற்குப் பொருத்தமான வருடாந்த வேலைத்திட்டத்தை தயாரித்தல் பாடசாலை அதிகாரிகளின் பொறுப்பாகும். வருட ஆரம்பத்திலேயே செய்முறையாகச் செயற்படுத்தக் கூடிய செயற்றிட்டமொன்றைத் தயாரித்தல் பயனுள்ளதாகும். அவ்வாறான வேலைத்திட்டத்தில் உள்ளடக்கக்கூடிய பாட இணைச் செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கள வேலைத்திட்டங்களையும் கல்விச் சுற்றுலாக்களையும் ஒழுங்கு செய்தல்.
- சிறிய அளவான ஆய்வுச் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.
- பொது அறிவு வேலைத்திட்டங்கள், பேச்சுப்போட்டிகள், விவாதங்கள், கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்துதல்.
- சுவர்ப்பத்திரிகைகள், பருவவெளியீடுகளை வெளியிடல்.
- பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வேறு நிறுவனங்களுடன் ஒன்று சேர்ந்து செயற்படல்.
- தேசிய, சர்வதேச நிறுவனங்களுடன் சேர்ந்து செயற்படல்.
- வளவாளர்களின் பங்களிப்புடன் செயலமர்வை நடாத்துதல்.

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

# கற்றல் கற்பித்தல் முறையியல்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மையக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்றல் வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திசார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) 'ஈடுபடுத்தும் படி' (Engagement Step) எனப்படும். இப்படியின் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல்/ படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல்/ பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள்/ கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்குப் பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்கள் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையுயும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் இதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் வகிபாக பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாவதற்கும் இடம் ஏற்படுகிறது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்ற வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் முறையியல் (வாழ்க்கைத் தேர்ச்சிகள்)

வாழ்க்கை தேர்ச்சிகள் கற்பிக்கும் பாடத்திட்டத்தை செயற்படுத்தும்போது ஆசிரியரின் கற்பித்தலை விட மாணவரின் கற்றலுக்கே முக்கியமாக இடமளிக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இப்பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் நபரின் அபிவிருத்தி மூலம் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதாயின் பிள்ளைகளினுள் தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும். அவ்வாறான ஆற்றலை வளர்க்க கற்றல் கற்பித்தல் சூழல் ஒன்றை நிர்மாணித்தல் மிக முக்கியமாகும்.

புதிய பாடப் புலத்தினுள் கற்றல் கற்பித்தல் உத்திகள், மிக நெகிழ்ச்சியுடன் கூடியனவாக இருத்தல் வேண்டும். விரிவுரைகள், கலந்துரையாடலிலும் பார்க்க நடைமுறை சமூகத்திற்கு மிகவும் உசிதமான உயிர்ப்புள்ள வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுத் தரல் பொருத்தமானது.

விசேடமாக ஒத்தாசையுடன் கூடிய குழு முறை மூலம் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பிள்ளைகளினுள் சமூகத் திறன்களை வளர்க்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது வகுப்பறை, பாடசாலை சமூகம், பாடசாலை சூழல், அயற் சூழல், அயல் சமூக நிறுவனங்கள் மூலம் உயிர்ப்புள்ள கற்றல் அனுபவங்களைப் பெறப் பயன்படுத்துவார்.

இவ்வாறான கற்றல் கற்பித்தல் சூழலினுள் அவதானிப்பு நிகழ்வுக் கற்கை, விளையாட்டு, பங்கேற்று நடித்தல், நேர்காணல், ஆய்வு, கண்டறிகை, சுயகற்கை செய்து பார்த்தல், சிந்தனைக் கிளர்வு கலந்துரையாடல், கண்காட்சி, செயற்றிட்டம், களக்கற்கை போன்ற கற்றல் கற்பித்தல் முறைகளை விருப்பிற்கேற்றவாறு பயன்படுத்தலாம்.

மேற்படி கற்றல் கற்பித்தல் முறையியலை நிலைமாற்றும் ஆசிரிய வகிபாகத்தின்போது இலகுவில் பயன்படுத்தலாம், இதன்படி இவ்வெல்லா கற்றல் கற்பித்தல் முறையியலையும் பயன்படுத்தும் படிகளை, கண்டாய்வுகளை விளக்குதல், விரிவாக்கம், மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியபடி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை கருத்துள்ளதாக்கலாம்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் முறையியல் (குடியுரிமைக்கல்வி)

நெடுங்காலமாக வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயன்முறையின் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள விரிவுரை முறையை மேலும் முக்கிய ஒரு கற்பித்தல் உத்தியாகப் பயன்படுத்த இங்கு வலியுறுத்தப்படமாட்டாது. இங்கு மாணவர் போட்டிச் சூழலுக்கு இட்டுச் செல்லப்படுவதற்குப் பதிலாக கூட்டுணர்வு, வேலையுலகுக்குத் தேவையான தேர்ச்சிகள் ஆகியவற்றை விருத்தி செய்யத்தக்க மகிழ்ச்சிகரமான ஒரு கற்றல் சூழலை ஏற்படுத்தத்தக்க சுய கற்றலைத் தூண்டும் கற்றல் முறைகளின்பால் எமது கவனம் ஈர்க்கப்படல் வேண்டும். குடியுரிமைக்கல்விப் பாடத்தின் இறுதியான நோக்கம் மானுடப் பண்புகளைக் கொண்ட அமைதியாக கூடிவாழத்தக்க எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதாகும். இதற்கு செயன்முறைச் செயற்பாடுகள் இன்றியமையாதவை. எனவே பாட விடயங்களைக் கற்பிப்பதற்கு மேலாக செயன்முறை அனுபவங்களைக் கற்றல்-கற்பித்தல், மதிப்பீடு ஆகிய சுய ஆக்க வகுப்பறை செயன்முறையை ஒழுங்கு முறையை ஒழுங்குசெய்தல், தொடர்புகளைப் பேணுவதால் மாணவரின் சமூகத்திறன்கள் விருத்தியையும் சனநாயகப் பெறுமானங்களுடன் தொடர்புடைய நடத்தைக் கோலங்கள் விருத்தியடையத்தக்கவாறு கற்றல் நிகழ்வுகளினூடாக அனுபவங்களை விருத்தி செய்வதற்காக வகுப்பறைக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துவதற்கு அச்செயற்பாடுகளை மாணவரது வயது மட்டத்திற்குப் பொருத்தமானவாறு ஒழுங்கமைத்துக் கொள்வதற்குமாக ஆசிரியர்கள் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்தல் வேண்டும்.

விடயங்களைக் கற்பிப்பதை விடுத்து சுயமாகக் கற்றல், தகவல் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்தல், குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், திறமை விருத்திக்கு ஏதுவாகும் வகையில் தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல், ஒழுக்கமாகவும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளல் போன்ற பண்புகளை மாணவரிடத்தில் விருத்தி செய்வதற்கு, செயன்முறைச் செயற்பாடுகள் இன்றியமையாதவை. இதற்காக வகுப்பறையினுள்ளும் அதற்கு வெளியேயும் ஆசிரியரது வழிகாட்டல் அவசியமானது. பின்வரும் கற்றல்-கற்பித்தல் முறைகள் குடியுரிமைக் கல்விப்பாடத்தைக் கற்பிப்பதற்கு விதந்துரைக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை அமர்வுகளூடாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவதானித்தல்

ஆராய்வு

நேர்காணல் மூலம் தகவல் சேகரித்தல்

தகவல்களைப் பகுத்தாய்தல்

களவேலை

சிறுவர் பாராளுமன்றம், நலன்புரிச்சங்கம், சிரமதான பாசறை, உழைப்பின் மகத்துவப் பாசறை, மாணவர் படையணி, சாரணர் பாசறை

நோயாளருக்குப் பணிவிடை செய்தல், அனர்த்த முகாமை

பல்வேறு சங்கங்கள், கழகங்கள், சமூக நலனோம்பல், சூழலைக் கற்றல், பண்டைப் பெருமை மிக்க வளங்களைக் காத்தல்

செயற்றிட்டங்கள், தேடியாய்ந்து கற்றல் முறை, கண்காட்சிகள்

பிரச்சினைத் தீர்த்தல் முறை, வினாவிடை முறை, சுவர்ப்புதினத்தாள்

வகுப்பறையில் நடைமுறைப்படுத்தும் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளோடு மேற்படி கற்றல் கற்பித்தல் உத்திகளைத் தருணத்திற்கேற்றவாறு பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

# வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்
# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
# (பகுதி I) வாழ்க்கைத்தேர்ச்சிகள்

# 8.1 நேர் மனப்பாங்குடன் செயற்படல்

## அறிமுகம்

மனித உள்ளத்தில் ஏற்படும் எண்ணங்களைப் பற்றியும் அவ்வெண்ணங்களின் தன்மையைக் கருத்திற் கொண்டு செயற்படுவதற்குமான ஒரு அறிமுகத்தை வழங்குவதே இவ்வத்தியாயத்தினூடாக எதிர்பார்க்கப்படுகிறது. நல்ல எண்ணங்கள், தீய எண்ணங்களை வேறுபடுத்தி அறிந்து கொள்ளல், ஒரு எண்ணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் அடிப்படைகளைக் கண்டறிதல், சிறந்த எண்ணங்களின் விருத்திக்குரிய அடிப்படையைக் கையாளல் அவசியமாகும்.

## தேர்ச்சி:

8.1 நேர் மனப்பாங்குடன் செயற்படுவார்.

## தேர்ச்சி மட்டம்:

8.1.1 நாளாந்த வாழ்க்கையில் நல்ல எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவார்.

## பட உள்ளடக்கம்:

- எண்ணங்களின் தன்மை
  - * மனிதனின் மனதில் சதாவும் பிறக்கும்
  - * வெவ்வேறு நோக்கங்களைக் கொண்டது.
  - * திடீர் திடீரென மாற்றமடையும்.
  - * நல்ல எண்ணங்களும் நல்லவையல்லாத எண்ணங்களும் தோன்றும்

- நல்ல எண்ணங்கள்
  - * தனக்கும் ஏனையோருக்கும் சூழலுக்கும் நல்லதையே செய்யும் எண்ணங்கள்

    உதாரணம் :
    - மகிழ்ச்சியாக இருத்தல்
    - ஏனையோருக்கு உதவி புரிதல்
    - சூழலுடன் நேயமாக இருத்தல்
    - வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் போது அவற்றைப் பொதுவான நிகழ்வுகளாகக் கருதி அவ்வனுபவங்களை வாழ்க்கையுடன் இசைவுபடுத்திக் கொள்ளல்.

- நல்ல எண்ணங்களின்படி செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள்

| | | |
|---|---|---|
| * ஆர்வம் | * மகிழ்ச்சி | * வரவேற்பு |
| * வெற்றி | * மலர்ச்சி | * புத்தாக்கம் |
| * துணிவு | | |

**தேர்ச்சி மட்டம்:**

8.1.2 நல்ல எண்ணங்களைப் போசிக்கும் மூலங்களை இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்துவார்.

- ஒருவரது எண்ணங்களில் செல்வாக்குச் செலுத்தும் மூலங்கள்
  * பரம்பரை, முற்பழக்கம்
  * நம்பிக்கைகள்
  * உள்ளார்ந்த ஆற்றல்கள்
  * சமயம்
  * குடும்பம்
  * பாடசாலை
  * ஒத்த வயதுக்குழுவினர்
  * சமுதாயம்
  * பொதுசனத் தொடர்பு ஊடகங்கள்

- மூலங்களினூடாகப் பிறக்கும் எண்ணங்கள் தொடர்பாக பகுத்தறிதல்
  * எண்ணங்கள் தொடர்பாக பகுத்தறிய வேண்டியதேன்?
  * தோன்றும் எண்ணங்களுள் எல்லாமே விளைதிறனுடையவையும் நடைமுறைப்படுத்தக் கூடியனவுமாக அமையமாட்டா.
  * நல்ல எண்ணங்களையும் நல்லவையல்லாத எண்ணங்களையும் வேறுபடுத்திக் கொள்ளல்.
  * நல்ல எண்ணங்களைப் பேணிவருவதாலும் அவற்றைச் செயலுருப்படுத்துவதாலும் கிடைக்கும் பிரதிபலன்களைக் கவனத்திற் கொள்ளல்.

- நல்ல எண்ணங்களை விருத்தி செய்யும் மூலங்களை இனங்கண்டு பயன்படுத்தல்.
  * நல்ல குடும்பப் பின்னணி
  * நல்ல நண்பருடன் பழகுதல்.
  * முன்மாதிரியான நண்பருடன் பழகுதல்
  * நல்ல நூல்கள், சஞ்சிகைகள், பயன்மிகு மின் ஊடகங்கள்
  * முன்மாதிரியானவரின் சுயசரிதங்கள்
  * சமயப் பின்னணி
- மேற்படி மூலங்களைப் பொருளுள்ள வகையில் பயன்படுத்தி, வாழ்க்கையை வெற்றியின் பால் இட்டுச் செல்லல்.

**தேர்ச்சி 8.1** : நேர்வகை மனப்பாங்குடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : அன்றாட வாழ்க்கையில் நேர் எண்ணங்களின் அடிப்படையில் செயற்படுவார்.

**செயற்பாடு 8.1.1** : ''இப்படியிருந்தால் நல்லதல்லவா''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.1.1.1 குறிப்பிடப்பட்டுள்ள படம்
- இணைப்பு 8.1.1.2 செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.1.1** :

- இணைப்பு 8.1.1.1 இல் தரப்பட்டுள்ள படத்தை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- இதனை காணும் மாணவரிடம் ஏற்படும் எண்ணத்தை தேடி ஆயுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • மனித மனதினுள் தொடர்ச்சியாக சிந்தனைகள் தோன்றும்.<br>• சிந்தனைகள் அடிக்கடி மாற்றமடையும். (உருவாகும், அழிந்து போகும்)<br>• பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருக்கும்.<br>• அவரவருக்கு ஏற்ப ஏற்படும் சிந்தனைகளும் வேறுபடும்.<br>• நல்ல எண்ணங்கள் போன்றே தீய எண்ணங்களும் மனித மனதினுள் ஏற்படும்.<br>• அதிக முக்கியத்துவம் வாய்ந்த சிந்தனைகள் செயற்படுத்தப்படும். |

(10 நிமிடங்கள்)

**படி 8.1.1.2** :

- இணைப்பு 8.1.1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலைப்படிவத்தை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.
- மாணவர்களை குறிப்பிட்ட வேலையிலீடுபடுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.1.1.3** :

- மாணவர் தேடியறிந்த விடயங்களை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- எந்நேரமும் மனித மனதில் சிந்தனைகள் தோன்றும்.
- பயனுள்ளதும் பயனற்றதுமான பல்வேறு வகை சிந்தனைகள் மனித மனதினுள் தோன்றும்.
- சிந்தனைகள் அடிக்கடி மாற்றமடையும்.
- நபருக்கேற்ப சிந்தனை வேறுபடும்.
- மனதில் ஏற்படும் சிந்தனைகளில் அதிக முக்கியத்தும் வாய்ந்த சிந்தனை செயலுருப்பெறும்.

(15 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சிந்தனைகள் மனித மனதினுள் தொடர்ச்சியாக ஏற்படும் என இனங்காண்பார்.
- சிந்தனைகள் உடன் மாற்றமடையக் கூடியன. பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருக்கும் நபர் சார்புடையவையாக அமையும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நல்ல சிந்தனைகளை தேர்ந்து வேறாக்குவார்.
- இணக்கமாகச் செயற்படுவார்.
- நல்ல சிந்தனைகளுடாக சமூக முன்னேற்றத்தில் பங்களிப்பார்.

**பின்தொடர்வேலை**

- ‘‘இன்றைய சிந்தனை’’ எனும் தலைப்பின் கீழ் தினமும் வகுப்பில் ஒருவர் வீதம் 2 நிமிட நேர சிற்றுரை நிகழ்த்துக.

## இணைப்பு 8.1.1.1



## இணைப்பு 8.1.1.2

ஓய்வாகவும் வசதியாகவும் கதிரையில் அமருங்கள். இரு கைகளையும் ஒன்றின் மீதொன்றாக வைத்தபடி இரு கண்களையும் மூடிக்கொண்டு 5 நிமிட நேரம் அமைதியாக இருங்கள். அச்சமயத்தில் உங்கள் மனதில் எழுகின்ற சிந்தனைகள் எவை என ஆராயுங்கள்.

- வகுப்பினுள் நீங்கள் கேட்ட ஒலிகள் யாவை? அப்போது உங்களுக்கு என்ன தோன்றியது?
- வகுப்புக்கு வெளியிலிருந்து நீங்கள் கேட்ட ஒலிகள் யாவை? அப்போது உங்களுக்கு என்ன தோன்றியது?
- உங்கள் உடம்பில் ஏற்பட்ட உணர்வுகள் யாவை? அப்போது உங்களுக்கு என்ன தோன்றியது?
- உங்கள் மனதில் தோன்றிய வேறு சிந்தனைகளை தனியாக ஒரு தாளில் எழுதுங்கள். செயற்படுத்தக் கூடிய நல்ல சிந்தனைகள் என்ன என தேடியறியுங்கள்.

**தேர்ச்சி 8.1** : நேர்வகை மனப்பாங்குடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : அன்றாட வாழ்க்கையில் சிறந்த எண்ணங்களின் அடிப்படையில் செயற்படுவார்.

**செயற்பாடு 8.1.2** : "ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ... "

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.1.1.2.1 இல் உள்ள பாடல் வரிகள்
- இணைப்பு 8.1.1.2.2 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரமும் படங்களும்
- எழுதும் தாள்கள், பேனைகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.2.1** :

- இணைப்பு 8.1.1.2.1 இல் பாடலை நன்றாக பாடக்கூடிய மாணவனொருவனைக் கொண்டு பாடச் செய்யவும்.
- பாடலைக் கோட்பதன் மூலம் மாணவர்களில் ஏற்பட்ட தொடர்புகளை வினவுங்கள்)
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பல்வேறு சந்தர்ப்பங்களில் எம்மில் பல்வேறு வகையான எண்ணங்கள் தோன்றுகின்றன.<br>• நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களும் எம்மில் உண்டாகின்றன. நல்ல எண்ணங்கள் எவை என்பதை நாம் இனங் காணல் வேண்டும்.<br>• நல்லெண்ணங்களுடன் செயற்படுவதால் பல்வேறு அனுகூலங்களைப் பெறலாம். |

(10 நிமிடங்கள்)

**படி 8.1.2.2** :

- இணைப்பு 8.1.2.2 இல் உள்ள செயற்பாட்டு பத்திரம் மற்றும் படங்களை மாணவர்களிடையே பங்கிடுங்கள்.
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

(05 நிமிடங்கள்)

**படி 8.1.2.3** :

- மாணவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்களின் கருத்துக்களையும் வினவுங்கள்
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- எண்ணங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உள்ளத்தில் தோன்றுகின்றன.
- அவை நல்லவை, தீயவை என இருவகைப்படும்.
- நல்லெண்ணத்திற்கேற்பவே நாம் செயற்பட வேண்டும்.
- நல்லெண்ணத்திற்கேற்ப செயற்படுவதால் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நல்ல எண்ணங்களை இனங்காண்பார்.
- நல்ல எண்ணங்களுக்கேற்ப செயற்பட முனைப்புக் காட்டுவார்.
- நல்ல எண்ணங்களுக்கேற்ப செயற்படுவதால் கிடைக்கும் பெறுபேறுகளை விரிவாக விளக்குவார்.
- நல்ல எண்ணத்தோடு வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்.
- நல்ல எண்ணத்தோடு செயற்பட்டு சமூக விருத்திக்கு பங்களிப்புச் செய்வார்.


## இணைப்பு 8.1.1.2.1


கீழேயுள்ள பாடல் வரிகளை நன்கு செவிமடுத்து கேளுங்கள்.

இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு

மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லோடு தேயிலை தென்னை பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு

## இணைப்பு 8.1.1.2.2





A காடொன்றில் உள்ள ஓங்கி உயர்ந்த விருட்சங்கள், வெட்டப்பட்ட நீரூற்றுக்கள், ஓடைகள், ஆறுகள் வற்றிய விலங்குகளும் வாழ முடியாத நிலையைக் காட்டும் காட்சிகளைக் கொண்ட படம்.

B நல்ல நிழலை தரக் கூடிய பூத்துக் குலுங்கும் விருட்சங்கள், வற்றாத நீரைக் கொண்ட நதிகள், நீரூற்றுக்கள், ஓடித் திரியும் விலங்குகள் போன்ற காட்சிகளைக் கொண்ட படம்

இவ்விரு படங்களையும் நன்கு அவதானிக்கவும்.

- A மற்றும் B படங்களுக்கிடையே வேறுபாடுகள் உள்ளனவா? இருக்குமாயின் அவை எவை?
- படம் A யை அவதானிக்கும் போது தோன்றும் எண்ணங்களை விளக்குக.
- படம் B யை அவதானிக்கும் போது தோன்றும் எண்ணங்களை விளக்குக.
- நீங்கள் எந்தப் படத்தை மிகவும் விரும்புகிறீர்கள்?
- நீங்கள் விரும்பிய படத்தில் உள்ள சுற்றாடலில் வாழக்கூடிய சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைத்தால் அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.
- அழகான சூழலொன்றில் எழும் எண்ணங்களுக்கேற்ப செயற்படுவதால் ஏற்படும் பயன்கள் எவை?

**தேர்ச்சி 8.1** : நேர்வகை மனப்பாங்குடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : நற் சிந்தனைகளை போதிக்கும் மூலங்களை இனங்கண்டு அவற்றை உபயோகிப்பார்.

**செயற்பாடு 8.1.3** : ''நற்சிந்தனைகள் முன்னேற்றத்தின் படிகளாகும்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.1.3.1
- இணைப்பு 8.1.3.2

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.3.1** :

- இணைப்பு 8.1.3.1 இலுள்ள பாடலை கரும்பலகையில் எழுதி அதனை எல்லா மாணவரையும் கொண்டு பாடச்செய்யுங்கள். பாடலில் கூறப்படும் கருத்தைப் பற்றிய மாணவரின் கவனத்தை ஈர்த்துக் கலந்துரையாடலை கட்டியெழுப்புங்கள்.

> - மேற்படி கவிதை எண்ணக்கரு ஒருவரின் சிந்தனையாகும்.
> - இவ்வாறான சிந்தனைகள் வாழ்க்கைப் பயணத்திற்கு முக்கியமாகும்.
> - சிந்தனையை ஏற்படுத்துவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தும்.
> - அவ்வாறானவற்றையும், சந்தர்ப்பங்களையும் இனங்காண வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 8.1.3.2** :

- இணைப்பு 8.1.3.2 இல் உள்ள செயற்பாட்டு பத்திரம் மற்றும் படங்களை மாணவர்களிடையே பங்கிடுங்கள்.
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.1.3.3** :

- மாணவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்களின் கருத்துக்களையும் வினவுங்கள்
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- சிந்தனைகள் ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் மூலங்கள் உள்ளன.
- சிந்தனைத் தொடர்பாக விமர்சன ரீதியாக கருதுதல் முக்கியமாகும்.
- நல்ல சிந்தனைகளை செயற்படுத்துவதன் மூலம் மகிழ்ச்சியும் எழுச்சியும் ஏற்படுகின்றது.
- நேர் முறையான நபரிடைத் தொடர்புகளை பேண சிந்தனைகளின் செல்வாக்கு பயன்படுகின்றது.
- நல்ல சிந்தனைகளினால் நபர்களது சமுகத்தினதும் அபிவிருத்தி ஏற்படுகின்றது.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நல்ல சிந்தனைகளுக்கு ஏதுவாகும் மூலங்களை இனங்கண்டு கூறுவார்.
- மகிழ்ச்சிகரமான செயல்களில் ஈடுபடுவதன் மூலம் மனது ஆறுதலடையும் என ஏற்றுக் கொள்வார்கள்.
- மனதைக் கிளர்ச்சியடையக் கூடிய நல்ல பணிகளில் ஈடுபடுவார்.
- நேர்வகையான நபரிடைத் தொடர்புகளை பேணுவார்.
- நல்ல சிந்தனைகளை மதித்து ஒற்றுமையாகச் செயற்படுவர்.

**பின்தொடர்வேலை**

- நல்ல சிந்தனைக்கேற்ப செயற்படும் சந்தர்ப்பங்களை உங்கள் தினக்குறிப்பேட்டில் தினமும் குறித்துக் கொள்ளுங்கள்.

## இணைப்பு 8.1.3.1

பல்லாயிரம் பிரச்சினைகளை சந்தித்து
அவற்றைச் சகித்து சிரித்தபடி
இருக்கும் ஒருவனை இவ்வுலகில் அவதரித்த
அரசனென்று கருதிடுவோம்.

- எஸ். மஹிந்த தேரர் -

## இணைப்பு 8.1.3.2

## செயற்பாட்டுப்பத்திரம்

தரம் 8 இல் கல்வி கற்கும் கமலாவின் தினக்குறிப்பேட்டிலிருந்து பிரதி செய்த குறிப்புகள் சில அடுத்து தரப்பட்டுள்ளன. அதனை வாசித்து கேட்கப்பட்டுள்ள கோள்விகளுக்கு விடை தருக.

***2008.12.11 சனிக்கிழமை***

இன்று காலை 5.00 மணிக்கு துயிலெழுந்த நான் காலைக்கடன்களை முடித்த பின் $^{1}/2$ மணி நேரம் பாடங்களைப் படித்தேன். பின்னர் தயாரின் சமையல் வேளைகளின் உதவினேன். நான் சமயலறைக்குச் செல்லும் போது அக்கா தாயாருக்கு உதவி செய்து கொண்டிருந்தார். அதனைக் கண்ட நான் மகிழ்ச்சியுற்றேன்.

மு.ப. 7.10 மணியளவில் பாடசாலைக்குச் சென்றேன். வகுப்பை சாந்தி கூட்டித்துப்புரவு செய்து கொண்டிருந்தாள். அவள் என்னையும் அவளுடைய வேலையில் பங்கேட்கச் செய்தாள். வகுப்பறையைக் கூட்டி முடித்த பின்னர் நானும் சாந்தியும் பெரு மகிழ்ச்சியுடன் காலைக் கூட்டத்திற்குச் சென்றோம்.

என்றும் போல் புன்முறுவலுடன் வகுப்புகளுக்கு வந்த ஆசிரியை எங்களைப் பாராட்டினார். முந்திய தினம் நாங்கள் யாவரும் கலந்து பேசி வகுப்பை புதியதொரு முறையில் ஒழுங்குபடுத்தினோம். இதனைப்பற்றி, அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த நான் நேற்ற வாசித்து மிதிவைக்க சிறுவர் நாவலை மகிழ்ச்சிகரமா ஆரமித்தேன். பின்னர் பக்கத்து வீட்டு நண்பிகளுடன் சேர்ந்து குளத்துக்கு குளிக்கச் சென்றோம்.

எல்லா மாமியும் குளிக்கச் சென்றிருந்தான். நாம் குறித்த விட்டு வரும்வரை எமத தனிமையைப் போக்க மாமியும் எம்முடன் நின்றாள். நேற்று பௌர்ணமி போயா தினம் பன்சலைக்கு சென்று வந்தபோது மனம் அமைதியடைந்தது. அதனால் நான்கு பாடங்களை கவனித்து படிக்க முடிந்தது. சமய விளக்கங்களிலீடுபட்ட பின்னர் இரவு 9.00 மணிக்குத் தூங்கச் சென்றேன்.

1. பாடசாலைக்குச் செல்லும் முன்பாக விமலா ஏற்படுத்திக் கொண்ட சிந்தனைகள் யாவை?
2. கமலா வகுப்பறையில் ஏனையோருடன் நற்புறவாகச் செயற்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.
3. கமலா வகுப்பில் நண்பர்கள் போன்றே உங்கள் வகுப்பு நண்பர்களினாலும் செய்யக் கூடிய செயற்பாடொன்றை முன்வையுங்கள்.
4. கமலாவின் துணைக்கு சுனிலா மாமி குளத்தடியில் தாமதித்தமைக்கான காரணம் யாது?
5. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனதை சாந்தப்படுத்துவதற்காக நாம் செய்யக் கூடிய செயற்பாடொன்றை குறிப்பிடுக.

**தேர்ச்சி 8.1** : நேர்வகை மனப்பாங்குடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : சிறந்த எண்ணங்களை உருவாக்கும் மூலாதாரங்களை இனங்காண்பார்.

**செயற்பாடு 8.1.4** : "நல்லெண்ணங்களால் மகிழ்ச்சி காண்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.1.4.1 இன் பிரதி
- இணைப்பு 8.1.4.2 சம்பவத்திற்கான விடயப்பத்திரம்
- கடதாசி, பேனா

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.4.1** :

- இணைப்பு 8.1.4.1 இன் பிரதியை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- அதன் மூலம் பெறக்கூடிய கருத்துக்களை மாணவர்களிடமிருந்து கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - எண்ணங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பல மூலாதாரங்கள் காணப்படுகின்றன.
> - அவற்றுள் நல்லெண்ணங்களை விருத்தி செய்யும் மூலாதாரங்கள் முக்கியமானவை.
> - அம்மூலாதாரங்களை இனங்கண்டு கொள்வதன் மூலம் அவற்றை பயன்பாட்டுக்குள் கொண்டு வரல் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 8.1.4.2** :

- இணைப்பு 8.1.4.2 இல் உள்ள விடயப்பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்கவும்.
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.1.3.3** :

- மாணவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்களின் கருத்துக்களையும் வினவுங்கள்
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- எண்ணங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு மூலாதாரங்கள் உள்ளன.
- அம்மூலாதாரங்களில் நல்லெண்ணத்தை விருத்தி செய்யும் மூலாதாரங்களையும் காணலாம்.
- சிறந்த எண்ணங்களை விருத்தி செய்யக் கூடிய மூலாதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றிக் கொள்ள முடியும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நல்லெண்ண விருத்தியை ஏற்படுத்தும் மூலாதாரங்களை இனங்காண்பார்.
- அம்மூலாதாரங்களைப் பொருளுள்ள விதத்தில் பயன்படுத்துவதன் மூலம் வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிகோலும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நல்லெண்ண விருத்தியை ஏற்படுத்தும் மூலாதாரங்களால் வெறறிகரமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம்.
- நல்லெண்ண விருத்தியை ஏற்படுத்தும் மூலாதாரங்களை பயன்படுத்துவார்.
- பின்வரும் எண்ணங்களை விருத்தி செய்து கொள்வதன் மூலம் சமூக மேம்பாட்டை எய்தலாம்.

**பின்தொடர்வேலை**

- நல்ல சிந்தனைக்கேற்ப செயற்படும் சந்தர்ப்பங்களை உங்கள் தினக்குறிப்பேட்டில் தினமும் குறித்துக் கொள்ளுங்கள்.

## இணைப்பு 8.1.4.1

பின்வரும் வாசகங்களை நன்கு வாசிக்கவும்.

வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்

பொசன் போய தினத்தில் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களுக்கு அநாதைச் சிறவர்கள் இல்லத்திற்கு சென்று பரிசுப் பொருட்கள்

கிடங்கில் விழுந்த குட்டியானை யையும் தாய் யானையையும் காப்பற்றிய கிராமவாசிகள்
-பத்திரிகை செய்தி-

## இணைப்பு 8.1.4.2

உறுகுணு பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பீட பேராசிரியர் தனது வாழ்ககை அனுபவங்களை ஒரு செய்தி ஆக்கமாக எழுதி பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கச் செய்தார். எடுக்கப்படட பிரதியொன்றின் பகுதி உங்களுக்கு வாசிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

எனது குடும்பத்தில் சகோதர சகோதிரிகள் பத்துப்பேர் இருந்தார்கள். தந்தைக்கு நிரந்தரமான தொழில் இல்லை. பன்சலைக் காணியில் சிறிய ஒரு குடிசையிலேயே நாம் வாழ்ந்தோம். சிறு வயதில் நான் சுகயீனமடைந்து மிகவும் பலவீனமாக இருந்ததனால் பாடசாலைக் காலத்திலும் நான் மிகவும் ஒல்லியாக இருந்தேன். ஓட, பாய்ந்து செல்ல, கஷ்டமான வேலைகளை செய்ய முடியாத அளவுக்கு மிகவும் பலவீனமாக இருந்தேன். எங்கள் வீட்டிலிருந்து 6 மைல் தூரத்தில் பாடசாலை இரந்ததால் எனது தந்தை ஒவ்வொரு நாளும் காலையில் தோலில் சுமந்து கொண்டு பாடசாலைக்கு என்னை எடுத்துச் செல்வார். மீண்டும் மாலை நேரத்தில் என்னைக் கூட்டிச் செல்லவும் வருவார். ஒரு நாளைக்க எனக்காக தந்தை 24 மைல்கள் நடந்தார். பன்சலயிலிருந்து புத்தகங்களை வாங்கிப் படித்தேன்.

ஊர் கடையில் உள்ள பத்திரிகையை வாங்கிப்படித்தேன். ஆயிரம் பிரச்சினைகளுக்கு மத்தியல் தாய், தந்தை உட்பட ஏனையோர்களின் உதவியுடன் நான் கற்றேன். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக சேர்ந்து பல்கலைக்கழக பீடாதிபதி பதவி நிலைவரை உயர்ந்தேன். இருக்க ஓரலங்குல நிலம் கூட இல்லாத எனக்கு ஒரு வீடொன்றைக் கட்டிக் கொள்ளவும் முடிந்தது. ஆரம்பத்தில் தந்தையின் தோற்பட்டைக்குப் பாரமாக இருந்த நான் பிறகு ஒரு காலத்தில் தந்தையை மலரணையில் வைத்துப் பராமரிக்க முடிந்தது. ஏனெனில் நான் எதிர்கொள்ளும் தடைகளை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு பொறுமையுடன் வாழ்ந்ததாலாகும். ''அனைத்து கரு முகில்களும் ஒரு ஒளிக் கீற்றை வைத்திருக்கிறது'' என்பது உண்மை என்பதை நான் உணர்ந்தேன்.

- பேராசிரியர் வாழ்க்கையில் எதிர் கொண்ட தடைகளை வெற்றி கண்ட முறை தொடர்பாக நீர் என்ன நினைக்கிறீர்?
- பேராசிரியரின் தந்தை பற்றி உம்மால் முன்வைக்கக்கூடிய கருத்து யாது?
- ''அனைத்து கரு முகில்களும் ஒரு ஒளிக் கீற்றை தன்னுள் வைத்திருக்கிறது'' இக்கூற்றுப்பற்றி எமது கருத்து என்ன?
- மேலுள்ள சம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்வாறு சிலவேளை நீங்களும் உங்கள் வாழ்க்கையில் பல்வேறு இடர்களை சந்தித்திருப்பீர்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களை நினைவூட்டி அல்லது கற்பனை செய்து சிறிய கதையொன்றை எழுதுக.

# 8.2 மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்.

## அறிமுகம்

நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு மனவெழுச்சிகளுக்கு முகம் கொடுக் நேரிடுகிறது. அதற்கிணங்க பல்வேறு நடத்தைகளும் எமக்குள் தோற்றம் பெறுகின்றன.

அந்நடத்தைகளின் விளைவுகளை ஆராய்ந்து மனவெழுச்சிகளை நல்ல முறையில் கையாளல் வேண்டும். நாம் வழமையாக முகங்கொடுக்கும் எளிமையான மன அழுத்தங்களை அறிந்து கொள்வதற்கும் அவற்றை பயனுறுதி வாய்ந்ததாக மாற்றிக் கொள்வதற்கும் வழிகாட்டுவதற்கும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்ச்சி:

8.2 மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர்கொள்வார்.

## தேர்ச்சி மட்டம்:

8.2.1 நாளாந்த வாழ்வில் தோன்றும் பல்வேறு மனவெழுச்சிகளை இனங்கண்டு பொருளுள்ள வகையில் துலங்குவார்.

## பாட உள்ளடக்கம்:

- **பல்வேற மனவெழுச்சி:**
  * மனவெழுச்சிகளை இனங்காணல்.
  * உணர்வின் சிக்க.. மிகுந்த படிமுறை மனவெழுச்சியாகும். யாதேனும் உணர்வொன்று உடல் ரீதியான புலனுணர்ச்சியாகவோ கருத்தொன்றின் ஊடாகவோ வெளிப்படலாம்.
  * மனவெழுச்சிகள் எப்போதும் கருத்துக்களினூடாகவே வெளிக்காட்டப்படும்.
  * மனவெழுச்சியைப் பின்னும் நூல் உணர்வு ஆகும்.
  * மனவெழுச்சிக்கும் உடல் ரீதியான வெளிப்பாட்டுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு.
  * அச்சம் எனும் உணர்வு அதாவது மனவெழுச்சி தோன்றுவதற்குரிய காரணங்களை புலக்காணும் வேளைகளில் அது உடலின் மீது தொழிற்படுவதால் மயிர் கூச்செறிதல், நா தழுதழுத்தல், கண் இமைகள் விரிதல், கால்கள் நடுங்குதல் போன்ற விளைவுகள் ஏற்படலாம்.

- **மனவெழுச்சிகளும் அவற்றின் போது காட்டப்படும் பல்வேறு மனவெழுச்சிகளும்**
  * மகிழ்ச்சி - ஆரவாரித்தல், சிரித்தல், நடனமாடுதல், ஆனந்தக் கண்ணீர் வடித்தல்.
  * கவலை - அழுதல், தாக்குதல், ஏசிப்பேசுதல், வாளாதிருத்தல், கூச்சலிடல்.
  * அச்சம் - நடுங்குதல், நாத்தடுமாறல், வியர்த்தல், கண்கள் சிவத்தல், அழுதல், ஏனைய நடத்தைகள்
  * சினம் - தாக்குதல், அழுதல், ஏசிப்பேசுதல், வாய் மூடியிருத்தல், கண் சிவத்தல், கூச்சலிடல்.

- **மனவெழுச்சியின் விளைவுகள்**
  - * மகிழ்ச்சி - மலர்ச்சியான தன்மை, ஒத்துழைக்கும்தன்மை போன்ற விளைவுகள்
  - * கவலை - வாளாவிருத்தல், விரக்தி, சமூகத்தை எதிர்கொள்ளாதிருத்தல்.

  இவ்வாறான பிரதிகூலமான மனவெழுச்சிகள் தொடர்ந்தும் காணப்படுவதால் உடல், உள, சமூக ரீதியில் சீர்குலைவு ஏற்படலாம்.

## நல்வாழ்வுக்காக மனவெழுச்சிகளைப் பயன்படுத்தல்.

- **மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளைப் பின்பற்றுதல்.**
  - * நெருக்கமானோருடன் கலந்துரையாடல்.
  - * மனதை அமைதிப்படுத்தும் பயிற்சிகளில் ஈடுபடல்.
  - * மனவெழுச்சிச் சந்தர்ப்பங்களினூடாக ஆக்கம் புரிதல்.
  - * அழகியல் தொழிற்பாடுகள்
  - * விளையாட்டுச் செயற்பாடுகள்
  - * சூழலை நயத்தல்.
  - * செல்லப்பிராணிகள் வளர்த்தல்.


### தேர்ச்சி மட்டம்:

8.2.2 எளிமையான மன அழுத்தங்களை இனங்கண்டு அவற்றைப் பயனுடைய வகையில் கையாள்வார்.

### பாட உள்ளடக்கம்:

- எளிமையான மன அழுத்தங்களை இனங்காணல்.
- உடலின் உள்ளேயே வெளியேயோ இடம்பெறும் அசௌகரியங்கள் காரணமாக உள்ளத்தினால் உணரப்படும் களைப்பே மன அழுத்தமாக வரைவிலக்கணப்படுத்தலாம்.
- அதாவது அகத்தே அல்லது புறத்தேயிருந்துவரும் தாக்கம் காரணமாக ஒருவரின் உள்ளே ஏற்படும் மனவெழுச்சியின் தனிமையே மன அழுத்தமாகும்.
- சூழல் சார்ந்த காரணங்களாலும் அக்காரணங்களுடன் தனியாள் நடந்து கொள்ளும் விதத்திற்கு அமையவும் உளத்தாக்கங்கள் அதாவது மன அழுத்தங்கள் தோன்றும். தன்னால் தன்னைப்பற்றிய சுயமதிப்பீடு செய்ய முடியாமை, தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு சவால்களை ஏற்றல், தாங்கிக் கொள்ளக்கூடிய சவால்களை முறைப்பாக முகாமை செய்ய முடியாமை போன்ற காரணிகளால் எளிய மன அழுத்தங்கள் ஏற்படுகின்றன.
- எளிமையான உள அழுத்தங்கள் நாளாந்த வாழ்க்கையில் தவிர்க்க முடியாத வகையில் சதாவும் ஏற்படும்.
- சில உள நெருக்கிடைகள், அன்றாட வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு உதவும்.

  உதா: பணப்பற்றாக்குறையுடன் வாழும் சிலர் அதிலிருந்து மீளுவதற்காக, உளவுரனை உருவாக்கிக் கொண்டு பல்வேறு செயல்களில் வெற்றிகரமாக ஈடுபட்டு, முன்னேற்றமடைவர்.



- கடுமையான உள நெருக்கிடைக்கு ஆளானோர், கவலையடைதல், சஞ்சலப்படல், துக்கப்படல், நோய் வாய்ப்படல் போன்ற நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.
- இது அவ்வாறானோரது நாளாந்த வேலைகளையும் பாதிக்கும்.
- தற்காலச் சமூகத்தில் பெரும்பாலான நோயாளிகளின் உடற்கோளாறுகள் எளிமையான உளநெருக்கிடைகளுடன் தொடர்புடையவையாகும்.

## நெருக்கிடைகள் (Stress)

- நெருக்கிடை ஏற்படுவதற்கான பிரதானமான காரணம் நாம் மாற்றங்களுக்கு உள்ளாதலாகும். குறிப்பாக, திடீர் மாற்றங்களோ ஏற்றுக் கொள்ள முடியாத மாற்றங்களோ நிகழுவதால் நெருக்கிடை ஏற்படும்.
- தொடர்ந்து பல மாற்றங்கள் ஏற்படுதல், பாரிய மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றின் விளைவாக ஆபத்தான உளத் தாக்கங்கள் ஏற்படும்.

  உதா: அன்பு செலுத்தியவர் மரணித்தல், அன்பர்களை இழத்தல், பிரிவு, விவாகரத்துதொழில் அற்றுப்போதல், தொழில் மாற்றம், வேலைகள் தடைப்படல், பண நெருக்கடி, நோய்வாயப்படுதல், விபத்துக்குள்ளாதல், வாழ்க்கைக் கோலத்தில் மாற்றம் ஏற்படல், குடும்பத்தில் மாற்றங்கள் ஏற்படல், வேலையிலிருந்து ஓய்வு பெறல் போன்ற காரணங்களால் உள நெருக்கிடை ஏற்படலாம்.

## பதகளிப்பு (Anxiety)

- உக்கிரமான மனவெழுச்சிகளின் விளைவாக ஏற்படும் ஒரு நிலைமையே பதகளிப்பு எனப்படுகிறது. மனதில் பொதிந்துள்ள எளிமையான உள நெருக்கிடைகளிலும் பார்க்கப் பாரதூரமான எண்ணங்கள் ஏற்படும் நிலையே இதுவாகும்.
- எந்தவொரு காரணமுமில்லாத போதிலும், யாதேனுமொரு தீய செயல் அல்லது விரும்பத்தகாத செயல் நிகழ்ந்துவிடுமோ எனும் காரணமின்றிய எண்ணங்கள் இதன் விளைவாக ஏற்படும்.
- நாம் இணங்க முடியாத அல்லது ஏற்றுக் கொள்ள முடியாதுவுள்ளவற்றுக்கும் நாம் செய்ய விரும்புகின்ற நாம் செய்ய வேண்டியவற்றுக்கும் இடையிலான முரண் காரணமாக பதகளிப்பு ஏற்படலாம்.

- **பதகளிப்பு உட்பட்டோர் காட்டும் சில இயல்புகள்**
  - * உடற்சோர்வு
  - * நடுக்கம்
  - * இதயத்துடிப்பு அதிகரித்தல்
  - * தலைச்சுற்று
  - * அமைதியாக இருத்தல், ஓய்வாக இருக்க முடியாமை
  - * வழமைக்கு மாறான உணவு உட்கொள்ளும் பழக்கங்கள்
  - * சுவாசிப்புக் கஷ்டம்
- எந்தவொருவருக்கும் இயல்பாகவோ ஓரளவுக்கு உளத்தாக்கங்கள் இருக்க இடமுண்டு. எனினும் நெருக்கிடையான சந்தர்ப்பத்தின்போபது அலலது சவாலாக அமையும் பின்னணியின் போது அவற்றிலிருந்து மீட்சிபெறுவதற்காகச் செயற்படுவதால் நல்ல பெறுபேற்றைப் பெறலாம்.
- பதகளிப்பு இயல்புகள் நீண்ட காலமாகக் காணப்படுவதால் பாரதூரமான நோய்கள் கோளறுகள் எற்படலாம். உதாரணமாக, இரைப்பையழற்சி, உயர் குருதி அழுக்கம், வாழ்க்கையில் திருப்தியடைய முடியாமை, உலக விடயங்களில் திருப்தியடைய முடியாமை.

## உளச்சோர்வு (Depression)

- தெளவின காரணமின்றி, ஒருவர் துக்ககரமான எண்ணங்களில் மூழ்கியிருத்தல் அல்லது எதிர்பார்ப்புகளின்றியிருத்தலே உளச்சோர்வு எனப்படுகிறது.
- எதிர்பார்ப்புகள் நிறைவேறாமையால் ஏற்படும் தோல்வி நிலை, எதிர்பார்க்கப்பட்ட வாழ்க்கைத் தரத்தை எட்டமுடியாமை, உறுதியளிக்கப்பட்டவகையில் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாமை ஆகியன காரணமாகவும் உளச்சோர்வு ஏற்படலாம்.

## உளச்சோர்வுடையோர் காட்டும் பொதுவான இயல்புகள்

- இளைப்பும் நித்திரைக்குணமும்
- கவனத்தைக் குவிக்க முடியாமை
- உணவில் விருப்பமின்மை, பாலியல் நாட்டம் இன்மை
- பொதுவாக வாழ்க்கையில் விரக்தி
- வாழ்வதால் பயனில்லை என நினைத்தல்
- எதிர்பார்ப்பின்றியிருத்தல்.
- ஆதிக்கக் குணம்
- மட்டந்தட்டப்பட்டிருத்தல்/ தாழ்வுற்றிருத்தல்

- நீண்ட கால உளச்சோர்வு காரணமாக தலைவலி, உடல் மெலிவுறல், எடை குறைதல் போன்றவை ஏற்படும். மதுபானம், போதைப்பொருள் பயன்படுத்தப் பழகுவதுமுண்டு.
- தொடர்ந்தும் உளச்சோர்வு அவதியுறுவதன் விளைவாக வாழ்வதில் பயன்கிடையாது எனக்கருதி நீண்டகாலம் தனிமைப்பட்டிருப்பதால் ஈற்றில் அது தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணமாக அமையலாம்.

## உளச்சோர்வைத் தவிர்ப்பதங்காகச் செய்ய வேண்டியவை

- உங்களது மனவெழுச்சிகளை சமனிலையாகப் பேணுதல்.
- பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுதல்
- தினமும் உடற்பயிற்சி செய்தல்
- செய்ய வேண்டிய வேலைகளைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.
- சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளல்.
- ஆறுதலாக இருக்கப் பழகிக் கொள்ளல்.
- அழுத்தத்தைத் தரக்கூடிய விடயங்களிலிருந்து இயன்ற அளவுக்கு விலகியிருத்தல், தவிர்த்தல்.
- வைத்திய ஆலோசனை பெறுதல்
- பாடசாலை ஆலோசகரின் துணையை நாடுதல்

- **எளிமையான உளத் தாக்கங்களை விளைதிறனுடைய வகையில் கையாள்வதற்கான நுட்பமுறைகளை இனங்காணல்.**
  * உங்களைப் பற்றிய ஒரு பெருமையுணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எனினும் அளவுக்கதிகமான பெருமையுணர்வுடன் செயற்படலாகாது. அவ்வாறு உயர் மதிப்பீட்டுடன் செயற்படும்போது எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேறாத போது பாதகமான மனவெழுச்சிகள் ஏற்படக்கூடும். அடைவது சாத்தியமான இலக்குகளை வித்து வெற்றியை நோக்கி நடைபோடுங்கள்.
  * நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் அத்தோடு நெருங்கிய அன்பர்கள் போன்றோரிடம் தெரிவியுங்கள். உரிய தீர்வுகளை கலந்துரையாடல் மூலம் உறுதி செய்து கொள்ளுங்கள்.

* நாளாந்தம் உடற் பயிற்சிகளில் ஈடுபடுவது முக்கியமானது. உடலப்பியாசங்கள் செய்தல், நீச்சல், நடத்தல், சைக்கிளோட்டம், சீடு வளவுகளை அலங்கரித்தல், சுத்திரிகரித்தல், விளையாடுதல் போன்றவற்றில் ஈடுபடுங்கள்.
* எந்தவொரு செயலையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதவன் மூலம் வினைத்திறன் அதிகரித்துக் கொள்ளலாம். நேரத்தைப் பயனுடையவாறு கழிக்கலாம்.
* ஓய்வு தேவைப்படும் போது தயக்கமின்றி சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் புத்துயிர்பெறலாம்.
* எப்போதும் ஆறுதலாக இருந்துப்பழகிக் கொள்ளுங்கள்.
* ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கனத்திலும் மகிழ்ச்சியாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.
* ஏனையோர் மீது பொறாமைப்படாதீர்கள் பரிவுணர்வு காட்டுங்கள். உதவி புரியங்கள், போட்டியொட்டிய நிலையிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.

- **பொருத்தமான நுட்பமுறைகளைக் கையாண்டு, எளிமையான உளப்பாதிப்புக்களை விளைதிறனுடையவாறு கையாளுங்கள்.**
  * எளிமையான உளப்பாதிப்புக்களைக் கையாளும் விதம் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது. அதனைப் பயன்படுத்தி, தமது வீட்டிலும், பாடசாலையிலும், வேறு இடங்களிலும் தோன்றும் உளத்தாக்கங்களை இயன்ற அளவுக்குக் குறைத்துக் கொள்ளலாம். குறிப்பாக உங்களது பாடசாலையில் கற்கைச் செயற்பாடுகளின்போது அவற்றை ஒழுங்குமுறைப்படி செய்தல், பாடங்களைப் படித்தல், பரீட்சைகளுக்குத் தயாராதல் போன்ற சந்தர்ப்பங்களில் அவற்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவீர்களாயின் உங்களுக்கு ஏற்படும் உளத்தாக்கங்களைக் குறைத்துக் கொள்ளலாம். சிலர், பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் சரியாகக் கவனஞ் செலுத்தாது, பரீட்சையை எதிர்கொள்ளும் போது அசௌகரியங்களுக்கு ஆளாவர். அதன் விளைவாக மன அழுத்தம் ஏற்பட இடமுண்டு. அதாவது உளப்பாதிப்புகள் ஏற்பட இடமுண்டு.
  * எளிமையான உளத்தாக்கங்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொள்வதால் உரிய பரிகார வழிவகைகளை மேற்கொண்டு அது உக்கிரம நிலையை அடைவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் உங்களது பாடசாலை ஆலோசனைச் சேவை ஆசிரியரையோ, வேறு ஆலோசகர் ஒருவரையோ, வைத்தியர் ஒருவரையோ சந்தித்துக் கலந்துரையாடி தமது மன அழுத்த நிலைமையை இயன்ற அளவுக்குக் குறைத்துக் கொள்ளலாம்.

**தேர்ச்சி 8.2** : மனவெழுச்சிகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு மனவெழுச்சிகளை இனங்கண்டு அவற்றுக்கேற்ப துலங்குவார்.

**செயற்பாடு 8.1.2** : "மனவெழுச்சி தொடர்பாக தேடியறிவோம் "

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- (மகிழ்ச்சி, கவலை, பயம், கோபம்) இப்பண்புகளைக் காட்டும் படங்கள். பாடநூலின் 2 ஆம் அத்தியாயத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- டிமைத்தாள் 4
- பெல்ட் பேனா

**ஆசிரியருக்கான அறிவுறுத்தல்:**

காட்சிப்படுத்தப்படும் படங்களை பெரியளவில் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.1.1** :

- பாடப்புத்தகத்தின் 2 ஆம் அத்தியாலயத்தில் உள்ள படங்களை கரும்பலகையிலோ அந்தது டிமை தாளின் வாரந்தோ வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- அப்படங்கள் எதனை வெளிப்படுத்துகின்றன என்பதைக் கேட்டறிந்து படத்தின் கீழ் எழுதுக.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- பல்வேறு சந்தர்ப்பங்களின் போது தமது அனுபவங்களைக் கேற்ப தனியாள் நடத்தைக் கோலங்களின் தன்மைகள் வேறுபட்டுச் செல்கின்றன.
- அவற்றைப் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தலாம்.
- ஒவ்வொருவரும் பல்வேறு வழிகளில் மனவெழுச்சிக்குள்ளாகின்றனர். (மகிழச்சி, கவலை, பயம், அருவெருப்பு, கோபம்)
- அவ்வாறு வெளிப்படுத்தப்படும் பல்வேறு மனவெழுச்சிகளை இனங்காண முடிகிறது.
- உடல்ரீதியான வெளிப்பாடுகளுக்குமான எழுச்சிக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.
- அழகாக மனவெழுச்சியானது சந்தர்ப்பங்களின் அடிப்படையில் ஏற்படும் ஒன்றாகும்.

(10 நிமிடங்கள்)

படி 8.2.1.2 :

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள முகங்களினூடாக வெளிப்படுத்தப்படும் மன வெழுச்சிகளையும் அவ்வப்போது இடம்பெறும் நடத்தைப் பாங்குகளது இயல்புகளையும் தனித்தனியாக மாணவர்களுக்கு எழுத சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

படி 8.2.1.3 :

- எழுமாறாக தெரிந்தெடுத்த மாணவர்களுக்கு 4 சந்தர்ப்பஙளின்போது வெளிப்படும் இயல்புகள் எவை? என கேட்டு அவற்றை ஒடடப்பட்ட படத்தின் கீழ் எழுத சந்தர்ப்பம் வழங்கவும். (கரும்பலகையில் அல்லது டிமைன் தாளில்)
- இதற்கு மேலதிகமாக வேறு மாணவர்கள் எழுதியுள்ளார்களா என்பதை கேட்டறிந்து அவற்றையும் எழுதிவிடுங்கள்.
- அந்த நான்கு முக பாவனையில்தான் மிக விருப்பமான முகம் எது விருப்பற்ற முகம் எது என மாணவரிடம் கேட்டறியுங்கள். அதற்குரிய காரணம் யாது என அவ்வேளையிலேயே மாணவரிடம் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - மனவெழுச்சி என்பது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் இடம்பெறும் ஒரு விடயமாகும்.
> - மனிதன் பல்வேறு முறைகளில் மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவர். சாதாரண நடத்தையினூடாக பல்வேறு மனவெழுச்சிகளுக்கு முகங்கொடுப்பர். (உ-ம்: பயம், மகிழ்ச்சி, துக்கம், கோபம், அருவெறுப்பு போன்ற மனவெழுச்சிகள் பல்வேறு காரணங்களினால் ஓருவரிடத்தில் ஏற்படலாம்.
> - மனிதனுக்கு மாத்திரமன்றி மிருகங்களுக்கும் கூட மனவெழுச்சித் தாக்கங்கள் ஏற்டபடும் இதனால் பல்வேறு நடத்தைக் கோலங்கள் வெளிப்படுகின்றன.
> - ஒவ்வொரு தனிமனிதனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு விருப்பமுள்ளவனாவான்.
> - பயம், கவலை, கோபம் என்பவற்றால் தனக்கும், ஏனையோர்களுக்கும் தீய விளைவுகள் உண்டாகின்றன.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- மனவெழுச்சிக்கு எளிமையான முறையில் விளக்கம் கூறுவர்.
- ஒவ்வொருவரிடத்திலும் மனவெழுச்சி ஏற்படும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பல்வேறு மனவெழுச்சி சந்தர்ப்பங்களை இனங்கண்டு எழுதிக்காட்டுவார்.
- மனவெழுச்சி தொடர்பாக சிறந்த துலங்களை வெளிப்படுத்துவார்.
- சில மனவெழுச்சி வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை பொருளுள்ள விதத்தில் விளக்கமளிப்பதற்குரிய திறனைப் பெறுவார்.

**தேர்ச்சி 8.2** : மனவெழுச்சிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல்.

**தேர்ச்சி மட்டம்** : அன்றாட வாழ்வில் ஏற்படும் பல்வேறு மனவெழுச்சிகளை இனங்கண்டு அவற்றுக்கேற்ப துலங்குவார்.

**செயற்பாடு 8.2.2** : "சிறந்த மனவெழுச்சிப் பண்புகளை ஏற்படுத்திக் கொள்வோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.2.2.1 குழுச் செயற்பாட்டுக்கான செயற்பாட்டுப் பத்திரம் (5 பிரதி)
- இணைப்பு 8.2.2.2 தனிச் செயற்பாட்டுக்கான செயற்பாட்டுப் பத்திரம் (வகுப்பறை மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப)

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.2.1** :

- மனதை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சியின் மூலம் பாடப் பிரவேசம் செய்யுங்கள். இந்த பயிற்சியின் மூலம் மாணவரின் உள்ளத்தில் எழுந்தவற்றைக் கேட்டறிவதுடன் பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • மனவெழுச்சி என்பது வெளிவாரியான அனுபவங்களால் ஏற்படும் ஒரு விடயமாகும்.<br>• ஒரு மனவெழுச்சியை இருவர் வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்த முடியும்.<br>• சிறியவர்கள், வளர்ந்தோர்களுக்கிடையில் ஒனரு சம்பவம் இரு வேறுபட்ட வகையில் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும். |

(10 நிமிடங்கள்)

**படி 8.2.2.2** :

- பொருத்தமான வகையில் வகுப்பு மாணவர்களை குழுக்களாக்குங்கள்.
- இணைப்பு 8.2.2.1 ஐ குழுக்களுக்கு வழங்கி செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- செயற்பாயடகளை செய்து முடிந்ததும் இணைப்பு 8.2.2.2 இன்படி தனி செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.2.2.3** :

- முதலாம் குழுவுக்கு தமது செயற்பாடுகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களுக்கு முறையே அச்செயற்பாடு தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தனியாள் செயற்பாடுகளையும் எழுமாறாக முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • மனவெழுச்சிகளின் வெளிப்பாடு என்பது அனைத்து மனிதனிடத்திலும் சாதாரணமாக காணப்படும் விடயமாகும்.<br>• ஆளுக்கு ஆள், சமூகத்திற்கு சமூகம் மனவெழுச்சி வெளிப்பாடுகள் வேறுபட்டுச் செல்கின்றன.<br>• ஒருவரின் கற்றலிலும், ஒருவரின் இயல்பான விருத்தியிலும் மனவெழுச்சி வேறுபாடுகள் தாக்கம் செலுத்துகின்றது.<br>• மனவெழுச்சி பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படலாம்.<br>• மனவெழுச்சியை சிறந்த முறையில் மாற்றிக் கொள்ள முடியும்.<br>• இதனால் தனியாளும் சமூகமும் சிறந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.<br>• மனவெழுச்சியை சிறந்த முறையில் மாற்றிக் கொள்ளும் பல் வேறுபட்ட முறைகளை காணப்படுகின்றன. |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- மனவெழுச்சியின் இயல்புகளையும் அதனை வெளிப்படுத்தும் முறைகள் பற்றியும் அறிந்து கொள்வார்.
- மனவெழுச்சியை பயனுள்ள முறையில் மாற்றிக்கொள்ள முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பல்வேறுபட்ட மனவெழுச்சிகள் வெளிப்படும் சந்தர்ப்பங்களில் ஒருவர் நடத்தையை பொருத்தமான முறையில் வெளிப்படுத்துவர்.
- மன எழுச்சியை பயனுள்ள முறையில் மாற்றிக் கொள்வார்.
- சமநிலையான மனவெழுச்சிகளை தன்னில் ஏற்படுத்திக் கொள்வார்.

# இணைப்பு 8.2.2.1

## குழுச் செயற்பாட்டிற்கானது,

கெப் வண்டியொன்றும் மோட்டார் வண்டியொன்றும் விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில் அவ்விடத்துக்குச் சென்ற ஒருவர் கண்ட விடயங்கள்.

- உரத்த சத்தத்துடன் கதறி அழுகின்ற இரு சிறுவர்கள்.
- நடுநடுங்கியவாறு அழுது கொண்டு இளம் யுவதி ஒருவர் சிறுவர்களை தேற்றல்.
- கண்களை அகல விரித்து, வாயைப் பிளந்து கொண்டிருந்த வயதான தாயொருத்தி.
- கெப் பண்டிச் சாரதிக்கு ஏசிக் கொண்டு அடிப்பதற்கு தயாராகும் இளைஞன் ஒருவன்.
- பதற்றத்துடன் விபத்து தொடர்பாக தொலைப்பேசி மூலம் தெரிவிக்கும் ஒரு நபர்.

1. ஒரு நபரிடத்தில் இயல்பான நடத்தைப் பண்புகளை உருவாக்கும் காரணங்களையும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் விளக்குக.
2. ஒரு நபரிடத்தில் பல்வகையான நடத்தைக் கோலங்கள் உருவாகக் காரணம் யாது?
3. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் இந்நிகழ்விற்கு முகங்கொடுக்க நேர்ந்தால் உங்களுக்கு ஏற்படும் மனவெழுச்சியை சிறந்த மனவெழுச்சி வெளிப்பாடாக எவ்வாறு மாற்றிக்கொள்வீர்?

- வகுப்புக்கு வெளியிலிருந்து நீங்கள் கேட்ட ஒலிகள் யாவை? அப்போது உங்களுக்கு என்ன தோன்றியது?
- உங்கள் உடம்பில் ஏற்பட்ட உணர்வுகள் யாவை? அப்போது உங்களுக்கு என்ன தோன்றியது?
- உங்கள் மனதில் தோன்றிய வேறு சிந்தனைகளை தனியாக ஒரு தாளில் எழுதுங்கள். செயற்படுத்தக் கூடிய நல்ல சிந்தனைகள் என்ன என தேடியறியுங்கள்.

## தனிச் செயற்பாட்டிற்கானது,

பின்வரும் சந்தர்ப்பங்களிலும் நிகழ்வுகளிலும் உங்களுக்கு ஏற்படும் எண்ணங்களை இனங்காண்க. உங்களிடம் பொருத்தப்படாற்ற எண்ணங்கள் தோன்றினால் அவ்வெண்ணங்களை சமநிலைப்படுத்த மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை விளக்குக.

1. பழகுவதற்கும், காண்பதற்கும் விரும்பும் ஒருவரை சந்தித்தல்.
2. தனது நெருங்கிய நண்பரொருவனை விமர்சிக்கும் சந்தர்ப்பம்.
3. எந்நேரமும் உரத்து ஒலித்துக் கொண்டிருக்கும் சங்கீத நிகழ்வு.
4. எதிர்பாராத விதமாக பரீட்சையில் சித்தியெய்யத் தவறினால்.

**தேர்ச்சி 8.2** : மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : எளிய உளத்தாக்கங்களை இனங்கண்டு பயனுள்ள வகையில் நடந்து கொள்வார்.

**செயற்பாடு 8.2.3 :** ''மனதை உறுத்தும் கவலைகள்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.2.3.1 இல் வரும் பாடல் வரிகளை பாடுங்கள்.
- பாடுவதில் திறமையுள்ள ஒரு மாணவனைப் பயன்படுத்தி வகுப்பில் முன்வந்து பாடச் செய்யுங்கள்.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.31** :

- இணைப்பு 8.2.3.1 இல் வரும் பாடல் வரிகளை பாடுங்கள
- பாடுவதில் திறமையுள்ள ஒரு மாணவனைப் பயன்படுத்தி வகுப்பில் முன்வந்து பாடச் செய்யுங்கள்.
- இப்பாடலின் துணையுடன்
  - இப்பாடல் யாரால் யாருக்காகப் பாடப்பட்டது.
  - இப்பாடல் மூலம் எது எடுத்துக்காட்டப்படுகிறது.

  எனும் வினாக்களை மாணவருக்கு முன்வைத்து பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- எதிர்பார்க்கும் நோக்கங்கள் நிறைவேறாது போகும் போது மனித மனம் பாதிக்கப்படும்.
- வெளியிலிருந்து ஏற்படும் பாதிப்புக்களை சூழல் தொடர்பானவை, சமுகத்திலுள்ள மக்கள் தொடர்பானவை என வகைப்படுத்த முடியும்.
- வெளியிலிருந்து வரும் தாக்கங்களுக்கு எமது தேகத்தினுள் இருந்து பெறும் துலங்களுக்கேற்ப உள அழுத்தங்கள் ஏற்படுகின்றன என.

(10 நிமிடங்கள்)

**படி 8.2.3.2** :

- தாம் எதிர்கொண்ட உள அழுத்தங்கள் பற்றி ஞாபகப்படுத்திக் கூறுமாறு மாணவருக்கு அறிவுரை கூறுங்கள்.
- தாம் அவ்வாறு ஏன் உள அழுத்தத்திற்கு ஆளானார்? அதற்கேற்ப ஏற்பட்ட உள எழுச்சிகள் என்ன?
- இதைப்பற்றி கருத்துக் கூற மாணவருக்கு வாய்ப்பேற்படுத்துங்கள்.
- வகுப்பு மாணவர்கள் யாவரையும் இத்தொழிற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்

(10 நிமிடங்கள்)

**படி 8.1.1.3** :

- எழுமாற்றாக தேர்ந்தேடுத்த சிலரிடம் தாம் எதிர்கொண்ட மன ஆழத்தங்கள் பற்றி கேட்றியுங்கள். (நேர வசதிக்கேற்ப பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை தீர்மானியுங்கள்.)

| |
|---|
| • மாணவர்கள் அடைந்த உள அழுத்த நிலையை பற்றி சுண்ணாப்பலகையில் குறிப்பிடுங்கள். மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்களினடிப்படையிலும் பின்வரும் விடயங்களினடிப்படையிலும் உங்கள் தொகுப்புரையை சமர்ப்பியுங்கள்.<br>• தவிர்த்துக் கொள்ள முடியாத அளவில் சிறுசிறு உள அழுத்தங்கள் வாழ்வில் ஏற்படுகின்றது.<br>• பெரும்பாலும் எதிர்பாராத விதமாகவே இவ்வழுத்தங்கள் ஏற்படுகின்றன.<br>• சாதாரண மன அழுத்தங்கள் காரணமாக தகைப்பு (Stress), பதகளிப்பு (Anrencity), உளச்சோர்வு (Depression) போன்ற சிக்கலான உள அழுத்த நிலைகள் எற்படுகின்றன.<br>• அதன் மூலம் நாளாந்த காரியங்களும் பலவீனமடையும்.<br>• தற்கால சமூகத்தில் பெரும்பாலான உடற்குறைபாடுகள் ஏற்பட எளிய உள அழுத்தங்களே காரணமாகின்றன. |

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- எளிய உள அழுத்தங்களைப் பெயரிடுவார்.
- எளிய உள அழுத்தங்கள் எதிர்பாராத விதமாக ஏற்படுகின்றது என ஏற்றுக் கொள்வார்.
- தமது அனுபவங்களை வகுப்பில் முன்வைப்பார்.
- வகுப்பறையில் கூட்டுறவான உணர்வுடன் செயற்படுவார்.

**பின்தொடர்வேலை**

- தாம் எதிர் கொள்ள நேரிட்ட எளிய உள அழுத்தங்களின் அடிப்படையில்,
  - அவ்வழுத்தங்கள் ஏன் ஏற்பட்டன?
  - அவ்வழுத்தங்கள் காரணமாக தனக்கேற்பட்ட சிரமங்கள்

  ஆகிய விடயங்களின் இணையுடன் கடிதமொன்று எழுதுங்கள்.

## இணைப்பு 8.2.3.1

ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே
ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே
இரவானால் பகல் ஒன்று வந்திடுமே ...

நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில்
இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில்
மனமே ஓ .. மனமே நீ மாறிவிடு
மழையோ அது பனியோ நீ மோதிவிடு ...

என்ற பாடலை இணைக்கவும்
பாடியவர் : சித்ரா
படம் : ஆட்டோ கிராப்

**தேர்ச்சி 8.2** : உள எழுச்சிகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுப்பார்

**தேர்ச்சி மட்டம்** : எளிய உள அழுத்தங்களை இனங்கண்டு, அவற்றைப் பயனுறுதியள்ளவாறு கையாள்வார்.

**செயற்பாடு 8.2.4** : ''மகிழ்ச்சியுடன் நாம் இருப்போம்''

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.2.4.1 வகிபாகமேற்று நடிப்பதற்கான ஆலோசனைப் படிவம்
- இணைப்பு 8.2.4.2 இன் செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.4.1** :

- இணைப்பு 8.2.4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகிபாகமேற்று நடித்தலை வகுப்பில் முன்வையுங்கள்.
- இவ்வாறான அனுபவங்களை நீங்களும் பெற்றுள்ளீர்களா? நண்பர்கள் உங்களுடன் கோபித்துக் கொள்ளும் போது உங்களுக்கு என்ன தோன்றும்? போன்ற வினாக்களை மாணவர்களிடம் சமர்ப்பித்து பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- நண்பர்கள் கோபித்துக் கொள்ளுதல், விரும்பும் பொருள் ஒன்றை பெற முடியாமற் போதல், வழியில் எதிர்பாராத நிகழ்வுகள் நடைபெறல், வேலைகள் விடுபடல் போன்ற பல நிகழ்வுகளுடாக சில சமயங்களில் உள அழுத்தங்கள் ஏற்படும்.
- குறித்த ஒரு அழுத்தம் மனதினுள் ஏற்படும் போது அதிலேயே ஆழமாக ஈடுபட்டிருப்போமாயின் அதனால் பல வகையான நோய் நிலைமைகள் ஏற்படக் கூடும்.
- சில சமயங்களில் மிகச் சிறிய மனக் குறைபாடும் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு ஒருவரை தள்ளக்கூடும்.
- இவ்வாறான எளிய உள அழுத்தங்கள் கட்டுப்படுத்த முடியும்.

(15 நிமிடங்கள்)

படி 8.2.4.2 :

- வகுப்பை பொருத்தமானவாறு குழுக்களாக்குங்கள்.
- ஒரு குழுவுக்கு ஒரு செயற்பாடு வீதம் வழங்குங்கள்.
- மாணவரை செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்.
- தேவையான வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் வழங்குங்கள்.

(25 நிமிடங்கள்)

படி 8.2.4.3 :

- குழு செயற்பாட்டை வகுப்பில் சமர்ப்பிக் வாய்ப்புப் பெறுங்கள்.
- ஒவவொரு குழுவினாலும் சமர்ப்பிக்கப்படுவன பற்றி ஏனைய குழுக்களிடம் கேட்டறியுங்கள். மாணவர் செயற்பாடுகளின் வலிமை - பலவீனம் போன்றவற்றை இனங்கண்டு பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • தமது வீட்டிலும் போக்குவரத்து பாதைகள், வழிகள் அல்லது வேறு சந்த்ப்பங்களிலும் உள அழுத்தங்கள் ஏற்படக் கூடும்.<br>• தமக்கு எற்படுகின்ற உள அழுத்தங்களை தாமே சரியாக இனங்காண முயல வேண்டும்.<br>• அவ்வாறு ஆரம்பத்திலேயே இனங்காண்பதன் மூலம் நோய் உக்கிர நிலையை அடைவதை தவிர்க்கலாம்.<br>• உள அழுத்தம் ஏற்படுமாயின் அதனைத் தானே தாங்கிக் கொள்ள முயலாது பொருத்தமான ஒருவருடன் கலந்துரையாட வேண்டும்.<br>• இவற்றுக்கு மேலதிகமாக ஆலோசனை கூறுபவரின் அல்லது உள மருத்துவரின் சேவையைப் பெற்று, நோயைக் குணப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>• உள அழுத்த நிலையைக் குறைக்க பல்வேறு நுட்ப முறைகளை பயன்படுத்துவர்.<br>• பாடசாலை வேலைகளை திட்டமிட்டு செய்தல்.<br>உதா: பயிற்சிகளிலீடுபடல், பாடம் செய்தல், பரீட்சைக்குத் தயாராதல்.<br>• தினமும் உடற் பயிற்சிகளிலீடுபடல்,<br>உதா: அப்பியாசத்திலீடுபடல், நீந்துதல், நடத்தல்<br>• வீட்டையும் தோட்டத்தையும் அலங்கரித்தல்<br>உதா: பூச்செடி வளர்த்தல், சுத்தப்படுத்தல், சுத்தமாகவிருத்தல், எல்லா விடயங்களையும் திட்டமிட்டபடி செயற்படுத்தல்.<br>• ஓய்வு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சுருக்கமாக ஓய்வு பெறல்.<br>• மெய்யான நடத்தைகள்<br>• ஏனையோர் மீது பொறாமை கொள்ளாமலிருத்தல்.<br>• சிரமங்களை ஏற்படுத்தக கூடிய நிகழ்வகள், செயல்கள் விடயங்கள் போன்றவற்றை தவிர்த்து நடத்தல். |

- எல்லா பொருட்கள் தொடர்பாகவும் நேர்முறையாக இருத்தல்.
- எல்லா விடயந் தொடர்பாகவும் மகிழ்ச்சியாகவும் இலேசாகவும் பாரமின்றியும் இருத்தல்.
- இம்முறைகள் மூலம் மகிழச்சியாகப் பாரமற்றும் இருக்க முடியும்.
- எளிய உள அழுத்தத்தை குறைத்துக் கொள்ள முடியும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- எளிய உள அழுத்தங்களைக் குறைந்தளவாக்கக கூடிய நுட்ப முறைகளை விபரிப்பார்.
- எளிய உள அழுத்தங்களை குறைந்தளவாக்க கூடும் என ஏற்றுக் கொள்வார்.
- நுட்ப முறைகள் மூலம் அன்றாம் எதிர் கொள்ள நேரிடுகின்ற எளிய உள அழுத்தங்களை குறைத்துக் கொள்வார்.
- நண்பர்களுடன் ஒற்றுமையாகச் செயற்படுவார்.
- எளிய உள அழுத்தங்களை குறைந்தளவாக்க ஆலோசனை முன்வைப்பார்.

**பின்தொடர்வேலை**

- அன்றாட வாழ்வில் எதிர் கொள்ள நேரிடுகின்ற உள அழுத்தங்கள் என்ன என இனங்கண்டு அதனை இழிவளவாக்க உரிய விதங்கள் உள்ளடங்கம் சிறு புத்தகத்தை தயாரிக்க.

## இணைப்பு 8.2.4.1

# பாத்திரமேற்று நடித்தல்

### ஆலோசனைகள்

- பாடத்திற்கு முன்பதாக இந்த நடிப்பிற்காக மாணவரைத் தயார்ப்படுத்துங்கள்.
- வகிபாகமேற்று நடிக்கக் கூடிய மாணவரை இதற்காக தேர்ந்தெடுங்கள்.
- இதற்காக மூன்று பாத்திரங்கள் அவசியமாகும். (மகன், தாய், தந்தை) (மகன் கதிரையில் அமர்ந்து கடும் யோசனையில் ஆழ்ந்திருக்கிறான்).

| | |
|---|---|
| அம்மா: | ஏன் மகன் நீங்கள் சாப்பிடவில்லை? எதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாய்? |
| | (மகன் அமைதியாக உள்ளார்) |
| அப்பா: | ஏன் மகன் உங்களுக்க சுகமில்லையா? உங்களுக்கு பிடித்த பொருளொன்றுள்ளது ..... போய்ச் சாப்பிடுங்கள். |
| மகன்: | எனக்கு சாப்பிட முடியாது |
| அப்பா: | ஏன்? |
| மகன்: | (அழுதுகொண்டு) இன்று கமால் என்னுடன் கோபித்துக் கொண்டான். |
| அம்மா: | ஏன் மகனே! அவர் உங்களின் நல்ல நண்பனல்லவா! |
| மகன்: | ஆமாம், நாங்கள் இடைவேளையில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். .... மீண்டும் மணி ஒலித்ததும் வகுப்பறைக்கு ஓடி வரும்போது கமால் எனது உடம்பில் மோதுண்டு விழுந்தார். .... அவரின் நெற்றியில் காயம் ஏற்பட்டது. எல்லோரும் சுற்றி வளைத்து கமாலைத் தூக்கி நிறுத்தி காயத்திற்கு மருந்திட்டனர். நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்தது. பின்னர் ஏனையோர் எனக்கு நன்றாக ஏசினார். ஏனென்றால் கமாலை நான் தள்ளிவிழுத்தி விட்டேன் என்று கூறியே அவ்வாறு ஏசினார்கள். இல்லையம்மா! கமாலை நான் விழுத்திவிடவில்லை. |
| அப்பா: | ஐயோ மகனே! இதற்கு நீ கவலைப்படுகிறாயா? நீ கமாலுடன் கதைததிருக்கலாம். கதைக்கவில்லையா மகனே! |
| மகன்? | இல்லை .. வகுப்பில் உள்ள ஏனைய நண்பர்கள் கமாலிற்கருகில் இருந்ததனால் நான் அருகில் செல்லவில்லை. |
| அம்மா: | அவ்வாறில்லை ... நீங்கள் கதைததிருந்தால் கமாலும் உங்களுடன் கதைத்திருப்பார். நாளை பாடசாலைக்குப் போனால் கமால் உங்களுடன் கதைப்பார். |
| மகன்: | சரி நான் நாளை கதைக்கிறேன். |
| அப்பா: | சரி, சரி வாங்க சாப்பிடுவோம். |

## இணைப்பு 8.2.4.2

# செயற்பாட்டுப்பத்திரம்

**செயற்பாடு 01**

பரீட்சையில் சித்தியடையாத மாணவி ஒருவர் மன வேதனையால் தற்கொலை செய்து கொண்டார்.

- செய்தி -

இது போன்ற செய்திகளை நீங்கள் இதற்கு முன்பு கேட்டிருப்பீர்கள். இந்த மாணவி பரீட்சையில் தோல்வியுற்றதனால் ஏற்பட்ட உளநெருக்கடிக்கிடையால் தற்கொலை முயற்சி வரை வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வாறான உள நெருக்கிடைகளை இழிவளவாக்க முடியாதா? நீங்கள் இது போன்ற எளிய மன அழுத்தத்தை இழிவளவாக்குவதற்குத் தேவையான வழிவகைகளைக் கூறுங்கள். (குழுவில் மேற்படி பிரச்சினையை கலந்துரையாடி தீர்வை வகுப்பில் முன்வைக்கவும்.)

**செயற்பாடு 02**

வகுப்பின் உற்ற தோழர் கோபித்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைத்துக் கொள்ளக்கூடிய வழிவகைகளை முன்வைக்கவும். (குழுவில் மேற்படி பிரச்சினையை கலந்துரையாடி தீர்வை வகுப்பில் முன்வைக்கவும்.)

**செயற்பாடு 03**

நேற்று மாலை குடும்பத்தாருடன் ஒமா திரைப்படமொன்றைப் பார்க்கச் சென்றமையால் வீட்டில் செய்யவேண்டிய பாடசாலை வேலையை செய்யாததினால் பாடசாலைக்குச் செல்ல முடியாது போயிற்று.

மேற்படி மன அழுத்தத்தை குறைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்.
(குழுவில் மேற்படி பிரச்சினையை கலந்துரையாடி தீர்வை வகுப்பில் முன்வைக்கவும்.)

**செயற்பாடு 04**

நீங்கள் சங்கீத பாடத்தை விரும்புகிறீர்கள். ஆனால் வீட்டிலுள்ளோர் நடனத்தை கற்குமாறு தூண்டுகின்றார். இதனால் ஏற்படக்கூடிய மன அழுத்தத்தினால் பாடசாலை செல்வதிலும் வெறுப்பு ஏற்படுகின்றது.

மேற்படி மன அழுத்தத்தை இழிவளவாக்குவதற்கான வழிவகைகளை முன்வைக்க.
(குழுவில் மேற்படி பிரச்சினையை கலந்துரையாடி தீர்வை வகுப்பில் முன்வைக்கவும்.)

# 8.3 முரண்பாடுகளைத் தீர்த்தல்

## அறிமுகம்

முரண்பாடுகளின்றி வாழ நிலைப்பது யதார்த்த பூர்வமானதன்று. மனிதர்களிடத்தில் ஏதேனும் ஒரு காரணத்திற்காக மனிதர்கள் முரண்படுவர். முரண்பாடு மதன் முதலில் ஏற்படுவது மனிதர்களின் உள்ளத்திலாகும். இவ்வாறு மனிதர்களின் உள்ளத்தில் தோன்றும் முரண்பாடு பின்னர் அவர்களுக்கிடையில் அல்லது குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படும் அளவுக்கு விரிவடைந்து செல்லும்.

யாதேனும் ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் முரண்பாட்டுச் சூழ்நிலை தொடர்பில் நேரான மனப்பாங்குடன் நோக்கும் திறனை வளர்த்துக் கொள்வதே முரண்பாட்டுத் தீர்வுக்கான முதல்படியாகும். அதன்பொருட்டு முரண்பாட்டுச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ளல், முரண்பாட்டுகளைத் தவிர்ப்பதற்கு பயன்படும் உளப்பண்புகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ளல் அவசியம். அதனூடாக முரண்பாட்டுச் சூழ்நிலைகளை உரிய முறையிலும் மிகவும் சகல தரப்பினருக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடியதீர்மானம் நோக்கி நகர முடியும்.

## தேர்ச்சி:

8.3 முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார்.

## தேர்ச்சி மட்டம்:

8.3.1 முரண்பாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை இனங்கண்டு அவற்றைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.

## பாட உள்ளடக்கம்:

- முரண்பாடு என்பது பொதுவான ஒன்றாகும்.
- முரண்பாடுகளின்றி நாம் வாழ்வது கடினம்


## முரண்பாடு - வரைவிலக்கணம்

ஒருவர் அல்லது ஒரு சிலர், தமது எண்ணங்கள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள், தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக எடுக்கும் நடவடிக்கைகளுடன் இணங்காமை காரணமாக உருவாகும் நிலைமையே முரண்பாடாகும்.


முரண்பாடு காரணமாக, எளிமையான உள அசௌகரியங்கள் தொடக்கம், உடல் ரீதியான பாதிப்புக்கள், ஆதன இழப்புக்கள், போர் போன்ற நிலைமைகள் உருவாகலாம்.

மனிதன், இயற்கையுடன் உருவாக்கிக் கொள்ளும் முரண்பாடுகள் மனிதனுக்குச் சாதகமானது. அது அபிவிருத்திக்கு அனுகூலமானது. அதன் விளைவாக புதியன கண்டுபிடிப்பதற்கும் புத்தாக்கம் புரிவதற்கும் மனிதன் முனைந்தான். இது முரண்பாட்டின் சாதகமான அம்சமாகும்.

அறைகூவலாக (சவாலாக) அமையும் ஒரு சந்தர்ப்பத்தினூடாக முரண்பாடு உருவாகும். அம்முரண்பாட்டினுள் பல்வேறு கட்டங்கள் காணப்படும் அக்கட்டங்களுக்கு எதிராக சில வேறுபாடுகள் ஏற்படும். அவை எண்ணக்கரு படத்தில் காட்டப்பட்டுள்ளன.



- முரண்பாடு விருத்தியடையும் விதம்



- முரண்பாடு தீர்ப்பதற்காக விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்களும் பண்புகளும்:
    * பொறுமை
    * உறுதிப்பாடு
    * பரிவுணர்வு
    * காரணங்காட்டி முன்வைக்கப்படும் விடயங்களை ஏற்றுக் கொள்ளலும் அதற்கமைய தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளுமளவுக்கு நெகிழ்வடைதலும்
    * உயிரோட்டமாக செவிமடுத்தல்
    * பரஸ்பர கௌரவமும் ஏற்றுக்கொள்ளலும்
    * நல்ல எண்ணங்களையே கொண்டிருத்தல்
    * கருணை காட்டல்
    * உணர்ச்சிகள்
    * இன்சொற்களையே பயன்படுத்தல்

  மேற்படி பண்புகளையும் முறைகளையும் பரிச்சயப்படுத்திக் கொண்டதன் பின்னரே முரண்பாடு தீர்த்தலில் ஈடுபடுதல் வேண்டும்.

- முரண்பாடு தவிர்ப்புக்கான முறைகள்
    * ஏனையோரைத் தமது தரப்பின்பால் ஈர்க்கத்தக்க வகையில் நடந்து கொள்ளல்.
    * ஏனையோருக்குக் கருத்துத்தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தல்.
    * தொடர்பாடல், ஏனையோரின் கருத்துக்களைக் கேட்டறிதலும் தொடர்புகளைப் பேணுதல் ஆகியவற்றின் ஊடாகப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்தல்.
    * தீர்மானமெடுக்க முன்னர் பல தடவைகள் சிந்தித்துப்பார்த்தல்.
    * நல்லது நடக்க எண்ணுதல் - கிடைக்கும் பெறுபேற்றில் நல்லதையே காணுதல்.
    * முரண்பாடு இரு தரப்பினருக்குமே உரியது எனக் கருதி ஒத்துழைத்துத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்தல்.
    * இயன்ற அளவுக்கு மாற்றுத்தீர்வுகள் தேடல்.
    * மூன்றாவது தரப்பினரின் உதவியைப் பெறுதல்.

**தேர்ச்சி 8.3** : முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அறிந்து அச்சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்குரியவாறு செயற்படுவார்.

**செயற்பாடு 8.3.1** : ''முரண்பாட்டைத் தவிர்ப்போம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.3.1.1 படம்
- இணைப்பு 8.3.1.2 செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.1.1** :

- முரண்பாடு என்பதற்கு சமமான சொற்களை வினவிப் பெற்றுக் கொண்ட துலங்கலை கரும்பலகையில் எழுதுங்கள்.
- முரண்பாடு தொடர்பாக மாணவர் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • எமது வாழ்க்கையில் முரண்பாடுகள் ஏற்படுவது சாதாரண விடயமாகும்.<br>• முரண்பாடு அற்ற வாழ்க்கை இல்லை.<br>• மனிதன் வசிக்கும் எந்தவொரு இடத்திலும் முரண்பாடுகள் ஏற்படுவது வழமையாகும். |

(15 நிமிடங்கள்)

**படி 8.3.1.2** :

- மாணவர்களை குழுக்களாக்கி இணைப்பு 8.3.1.1.1 ஐ அவர்களுக்கு வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவையும் தலைப்புகளுக்கு சார்பானவர்கள், எதிரானவர்கள் எனப் பிரித்து தமது சார்த்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான காரணிகளை தேடி வாதிட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இரண்டாவதாக அக்குழுக்கள் தமது தலைப்புக்களை மாற்றி விவாவத்திலீடுபடவும் அவதானிப்பிலீடுபடவும் வழிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.3.1.3** :

- குழுக்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதோடு பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - முரண்பாடு முதலில் தனியாள் ஒருவரின் மனதில் ஏற்படும் ஒரு விடயமாகும். முரண்பாடு தனியாள் இருவருக்கிடையிலோ அல்லது இரண்டு குழுக்களுக்கிடையிலோ அல்லது பல குழுக்களுக் கிடையிலோ ஒரு விடயம் தொடர்பாக உடன்பாடற்ற நிலைமையைக் குறிக்கின்றது.
> - மனிதர்களுக்கிடையிலான சமத்துவத்தில் வேறுபட்ட தன்மைகள் காணப்படும் அதேவேளை அனைத்து விடயங்களிலும் பல்வேறுபட்ட தன்மைகள் காரணமாக உடன்பாடற்ற நிலைமைகள் உருவாகக் காரணமாகிறது.
> - அவதானத:தடன் தனக்குள் அல்லது ஏனையவர்களுள் ஏற்படும் முரண்பாடுகளுக்கு தீர்வு கூறும் நிலை ஏற்படுகிறது என்பதை காணலாம்.
> - ஒருவரில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதை வெளிக்காட்டும் பண்புகள்.
>
>   உதாரணம் : சகிப்புத்தன்மையின்மை
>   தடுமாற்ற நிலை
>   பொறுமையின்மை
>   சந்தோசமின்மை
>   அமைதியின்மை
>   கோப உணர்வு
>   ஆவேச உணர்வு
>   கழக உணர்வு
> - உடனடியாக எழும் சிறு சம்பவத்தாலோ அல்லது சந்தர்ப்பத்தாலோ முரண்பாடுகள் ஏற்பட இடமுண்டு

(05 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- முரண்பாடு என்பதை சுருக்கமா விளக்குவார்.
- முரண்பாட்டின் ஆரம்பத்தில் ஒருவரின் தனியாள் இயல்பினை அவதானிப்பார்.
- உடன்படாத நிலைமையை வெளியிடல், கேட்டறிதல் முறைகளை தேடியறிவர்.
- அன்றாட வாழ்க்கையில் தனர் எதிர்நோக்கும் முரண்பாடுகளின் போது தமது நடத்தை பற்றி அவதானமாக இருப்பார்.
- முரண்பாடு ஏற்படும் முறை தொடர்பாக விளக்கமளிப்பார்.

## இணைப்பு 8.3.1.1



## இணைப்பு 8.3.1.2

**கீழ் காட்டியது போல் மாணவர் விருப்புக்களுக்கேற்ப இலகுவான தலைப்புகள் சிலதை தெரிவு செய்க.**

- மரக்கறி மாத்திரம் உணவாக உட்கொள்வோர்/ இறைச்சி, மீன் மாத்திரம் உணவாக உட்கொள்வோர்.
- தொலைக்காட்சியில் சண்டைக்காட்சிகளைப் பார்க்க விருப்பம்/ சண்டைக் காட்சிகளைப் பார்க்க விருப்பமற்றோர்.

பின்வரும் வினாக்களுக்கு குழுக்களாக சேர்ந்து விடையளிக்க தயாராகுங்கள்.

- தனது விருப்பம் சரியானது என்பதை நிரூபிக்க முயற்சிக்கும் போது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகள் எவை?
- தனது கருத்து ஏற்றுக் கொள்ளாமல் போகும் சந்தர்பத்தில் நீர் என்ன செய்தீர்?
- குழுக்களை அவதானிக்கும் போது நண்பர்களில் நீர் கண்ட தனியாள் பண்புகள் எவை?
- இந்த விவாதத்தை மேலும் நீடித்தால் என்ன நிலைமை ஏற்படலாம் என நீர் கருதுகிறீர்?

**தேர்ச்சி 8.3** : முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அறிந்து அச்சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்குரியவாறு செயற்படுவார்.

**செயற்பாடு 8.3.2** : ''முரண்பாட்டுக்குரிய காரணத்தை அறிந்தால் சுலபம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.3.1.1 ல் காட்டும் படம்
- இணைப்பு 8.3.1.2 ல் காட்டும் விடயப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.2.1** :

- இணைப்பு 8.3.1.2 ல் காட்டும் படத்தை மாணவர்களுக்கு முன்வைத்து அதில் காணப்படும் விடயங்கள் தொடர்பாக கேட்டறிக.
- மாணவர் துலங்கலைக் கவனத்திற் கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • ஒரு விடயத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் காண்பார்.<br>• தான் மட்டுமல்ல ஏனையோர், காணும் விதத்தையும் கேட்டறிவது அவசியம் ஆகும்.<br>• ஒவ்வொருவரினதும் கருத்துக்களின் தன்மையைக் கேட்டறியாமல் விடுவதால் முரண்பாடுகள் ஏற்பட இடமுண்டு. |

(05 நிமிடங்கள்)

**படி 8.3.2.2** :

- மாணவர்களைப் பொருத்தமானவாறு சிறு குழுக்களாக்குக.
- இணைப்பு 8.3.2.2 இல் காட்டும் விடயப்பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கவும்.
- ஒரு சம்பவக் கற்கையைக் கேட்டதன்பின் வினவும் வினாக்களுக்கு விடை காணும் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவினதும் கருத்துக்களை எழுத்தில் எழுதி முன்வைப்பதற்கான ஆயத்தத்தை மேற்கொள்ளுங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 8.3.2.3 :

- குழுக்கள் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களது கருத்துக்களையும் முன்வைக்கச் செய்யுங்கள்.
- அனைத்து கருத்துக்களையும் கவனத்திற்கொண்டு பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - முரண்பாடுகள் எற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
>   - விளக்கமின்மை
>   - பிழையான தீர்மானம் எடுத்தல்
>   - பிறருக்கு செவிசாய்க்காமை
>   - தனது கருத்தை மட்டும் சரி எனக் கொள்ளல்
>   - காரணங்களைக் கண்டறியாமை
>   - பரிவுணர்வுடன் செயற்படாமை
>   - தனது கருத்தை முக்கிய காரணங்களுடன் முன்வைக்காமை
>   - இணக்கப்பாட்டுடன், நிர்வகிக்க முடியாமை
>   - இடத்திற்குப் பொருத்தமான முறையில் நடத்தை மாற்றமின்மை
>   - உரிமைள் பரிபோகும் நிலை
>   - கௌரவம் அற்றுப் போதல்
>   - மாற்று ஒழுங்குமுறைகள் பற்றி சிந்திக்காமை
> - அடிக்கடி முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதால் ஏற்படும் தீமைகள்
>   - கவலை, கோபம், சஞ்சலம் போன்ற நிலைமைகளுக் குள்ளாதல்.
>   - அன்றாட வேலைகளில் ஈடுபடுவதில் சிரமம் ஏற்படல்
>   - முக்கிய புதிய வேலைகளில் விருப்பமின்மை
>   - ஒவ்வொருவருக்கிடையிலான நல்ல தொடர்புகள் அற்றுப் போதல்
>   - எதிராளிகள் நாளுக்கு நாள் அதிகரிக்கும்
>   - அடுத்தவர்களிடமிருந்து சிற்சில விடயங்களைக் கற்பதற்கான சந்தர்ப்பம் அற்றுப் போகும்.
>   - தனக்கு பாதுகாப்பற்ற நிலைமையொன்று உருவாகலாம்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- முரண்பாடுகள் உருவாவதற்கான காரணங்களின் பட்டியலொன்றை தயாரிப்பார்.
- முரண்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதால் பல பிரதி கூலங்களை எம்மில் எற்படுத்திவிடும் என்பதை வலியுறுத்துவார்.
- அன்றாட வாழ்க்கையில் முகம் கொடுக்கம் முரண்பாடுகளுக்கான காரணங்களை விமர்ச்சிப்பார்.
- முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்கான வழி வகைகளைக் கண்டறிய முயற்சிப்பார்.

## இணைப்பு 8.3.2.1

- உங்களிடமுள்ள சம்பவத்தை வாசியுங்கள்.
- அதில் வழங்கப்பட்டுள்ள முரண்பாட்டுக்குரிய காரணங்கள் எவை?
- முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதால் ஏற்படும் தீமைகள் எவை?

### 1) சம்பவக் கற்கை

வெய்யிலில் காய விடப்பட்டிருந்த கழுவிய ஆடைகளை மாலினி வீட்டுக்குள் எடுத்துவரும்போது அக்காவின் பாவாடையை கொடியில் வைத்துவிட்டு வந்தாள். அது சற்று ஈரமாக இருந்தபடியினாலேயே மாலினி அவ்வாறு செய்தாள். இரவாகுமுன் அதனை எடுப்பதற்கு மறந்து விட்டாள். மாலையில் பெய்த மழையில் அவ்வாடை மீண்டும் நனைந்து நன்றாக ஈரமாகிவிட்டது. மழையுடன் வீடு திரும்பிய அக்கா தனது பாவாடை ஈரமாகி கொடியில் இருப்பதைக் கண்டு கோபங்கொண்டு தங்கை மாலினிக்கு சத்தமிட்டாள்.

அக்கா : அதிகாலையில் அனைத்து துணிகளையும் கழுவிக் கொடியில் காய விட்டது நான்.

தங்கை : இல்லை..... கொஞ்சம் ஈரமாக இருந்ததனால் தான் வைத்தேன்.

அக்கா : பொய் சொல்ல வேண்டாம். அப்படியென்றால் ஏன் நனைய விட்டீர்?

தங்கை : நான் மறந்து விட்டேன். அக்கா மழை பெய்யும் போது எடுப்பதற்கு.

அக்கா : உனக்கு மறக்கவில்லை. ஏன் நான் நேற்றிரவு உனக்கு படிக்கும்படி சத்தம் போட்டேன் தானே.. அதற்குத்தான் இதனை செய்தாய்.

தங்கை : அது எனக்கு நினைவுக்கு வரவில்லை. அந்த நேரத்தில் ஏன் நான் உனது வெள்ளை சட்டையை ....

அக்கா : இல்லை வேண்டாம். உனது பதில். எனக்குத் தெரியும் உன்னுடைய குணம் .......

## 2) சம்பவக் கற்கை

சுஜீவ கணித பாடத்திற்குப் பயன்படுத்திய கடதாசித் துண்டுகளை சுருட்டி குப்பைக் கூடையில் வகுப்பின் மத்தியிலிருந்து வீசினான். காலில் ஒரு காயம் இருந்ததனால் எழுந்து செல்ல முடியாதிருந்ததனாலேயே அவ்வாறு செய்ததாக கூறினான். குப்பைக் கூடைக்கு வெளியேயே அது போய் விழுந்தது.

வகுப்பில் முன்வரிசையில் அமர்ந்திருக்கும் வகுப்புத் தலைவர் சமன், அது குப்பைக் கூடைக்கு வெளியில் விழுந்ததை கண்டான்.

பாரிஸ் : ஏய்! யார் அந்த முட்டாள் எவ்வளவு சொன்னாலும் வேலையில்லை. அதனை வீசியவன் எடுத்துப்போடு குப்பைக் கூடையினுள்.

சுஜீவன் : அதற்கு இப்படி சத்தம் போட வேண்டாம். என் கையாலேயே அது விழுந்தது.

இரஞ்சன் : ம் .. ஹ்.. ஆம் பாரிஸ் சுமன் பெரியாளாகி வகுப்புத் தலைவன் என்ற.....

பாரிஸ் : நீங்கள் தவறு செய்து விட்டு பின் கதையளக்க வருகிறீர்கள். சுஜீவ அதனை எடுத்துப் போடு.

சுஜீவன் : எனக்கு முடியாது.

பாரிஸ் : ஏன்?

சுஜீவன் : இயலாதிருப்பதனாலேயே முடியாது என்கிறேன்.

(பாரிஸ் கோவத்துடன் சுஜீவவை நோக்கி ஓடினான்)

இரஞ்சன் : ஏன் பாரிஸ்: சுஜீவவுக்கு ஏச வேண்டாம். நான் அதனை எடுத்துப் போடுகிறேன்.

பாரிஸ் : ஏன் நீ அவனுக்காக பரிந்து பேசுகிறாய். நீ உன்னுடைய வேலையைப் பார்.

## 3) சம்பவக் கற்கை

பஸ்ஸினுள் இருவர் அமர்ந்து செல்லக்கூடிய இருக்கையில் ஓரமாக அமர்ந்திருக்கும் ஒருவர் நன்கு வசதியாக அமர்ந்திருந்தார். இருக்கையில் அமர்ந்நதிருக்கும் மற்றையவர் சிரிமான்த என்பவராவார். பஸ் வண்டி புறப்பட்டது. ஓரமாக அமர்ந்திருந்தவர் தனது செல்லிடத் தொலைபேசியால் நண்பனுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அன்றாட வாழ்ககையில் சாதாரணமான விடயங்களைப் பற்றியேயன்றி விஷேடமான விடயங்கள் ஒன்றைப்பற்றியும் கதைக்கவில்லை. அங்குமிங்கும் அசைந்து கொண்டு பெரிய சிரிப்பொலியை எழுப்பிய வண்ணம் கதைத்துக் கொண்டிருந்தார். 20 நிமிடங்கள் கழிந்த பின்னும் அவர் கதைத்துக் கொண்டிருந்தார்.

சிரான் : (சகிப்புத்தன்மையுடன்) காசு கொடுத்து பஸ்ஸில் பயணம் செய்கிறோம். இது என்ன தொல்லை. தான் மட்டும்தான் பஸ்வண்டியில் செல்வதாக சிலர் நினைக்கிறார்கள்.

அனிதா : (தொலைபேசி தொடர்பில் இருந்து கொண்டு) யாருக்கு சொல்கிறீர்கள்? ஏன் என்ன நடந்து விட்டது.

சிரான் : என்ன நடந்துவிட்டது இங்கே பார் நீர் அமர்ந்நிருக்கிற மாதிரி. போதாக்குறைக்கு இது வேற தொல்லை (தொலைபேசியுடன் கதைத்துக் கொண்டு)

அனிதா : நான் உங்களுக்கு ஒன்ற செல்லவில்லையே அது என்னுடைய தனிப்பட்ட விடயம்.

சிரான் : உன்னடைய கதை உனக்கு மட்டுந்தான் இதுபோன்ற பொது இடத்தில்.... இது தவறான வேலை.

அனிதா : உலகம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறதைப் பார்த்தால் அவற்றுக்கெல்லாம் பொது இடம், வேறு இடம் என்று இல்லை. ஹலோ .....

**தேர்ச்சி 8.3** : முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அறிந்து அச்சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்குரியவாறு செயற்படுவார்.

**செயற்பாடு 8.3.3** : “ மானிடப் பண்புகளால் முரண்பாடுகளைத் தவிர்ப்போம்”

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.3.3.1 இல் உள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 8.3.3.2 இல் உள்ள செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.3.1** :

- மாணவர்களை இவ்விருவராக சோடி சேர்த்து இருவருக்கும் ஒரு பென்சில் வீதம் வழங்கவும்.
- ஆரம்பிக்கப்போகும் செயற்பாடு முடியும் வரை ஆளக்காள் பேசக்கூடாது எனக் கூறவும்.
- இருவருக்கும் பென்சிலைப் பிடித்து பேசாமல் விரும்பிய ஒரு பறவை அல்லது விலங்கின் உருவத்தை வரைவதற்கு மூன்று நிமிட கால அவகாசத்தை வழங்கவும்.
- கால அவகாசம் முடிந்ததும், வரையும் வேலையை நிறுத்தி அவர்கள் வரைந்த உருவத்தின் தோற்றம் வரையும் போது அவ்விருவரும் செயற்பட்ட முறை தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களை விசாரிக்கவும்.
- மாணவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- முரண்பாடுகளின்றி குறிப்பிட்டதொரு முடிவுப் பொருளை நோக்கிய அவர்களது முயற்சி வெற்றியீட்டுவதற்காக,
  - மற்றவருடைய எதிர்பார்ப்பு தொடர்பாகவும்
  - தனது எதிர்பார்ப்புகளையும் பொருத்தமான முறையில் மற்றவர்கள் உணரக்கூடியவாறு செய்தல் வேண்டும்.
  - பொறுமையாய் இருத்தல் வேண்டும்.
  - ஒத்துழைப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.
  - படிப்படியாகக் கூட்டுத் தொழிற்பாடுகளை நெறிப் படுத்தல் வேண்டும்.

(08 நிமிடங்கள்)

**படி 8.3.3.2** :

- மாணவர்களை பொருத்தமான முறையில் 3 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.3.3.1, 8.3.3.2 என்பவற்றை வழங்கி செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக தேவையான வழி காட்டல்களை செய்யவும்.

(15 நிமிடங்கள்)

**படி 8.3.3.3** :

- இணைப்பு 8.3.3.2 இல் உள்ள செயறள்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படும் ஆலோசனைகளை கலந்துரையாடலாக அல்லது நடித்தல் மூலமாக முன்வைத்தலை செய்யவும்.
- குழுக்களுக்கு முன்வைத்தலைச் செய்ய சந்தர்ப்பம் வழங்கவும். ஒரு குழு முன்வைத்தலைச் செய்தவுடன் ஏனைய குழுக்களுக்கு குறை நிரப்புச் செய்ய சந்தர்ப்பம் வழங்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக ஒருவரிடம் காணப்பட வேண்டிய ஆற்றல்களும் பண்புகளும்.<br>- நட்புறவான புன்னகை<br>- சிறந்த பேச்சு வார்த்தைகள்<br>- பொறுமை<br>- எதிலும் தெளிவான போக்கு<br>- தொலை நோக்குப்பார்வை<br>- இடத்திற்கும் சந்தர்பப்த்திற்கும் ஏற்ப விவேகமாக செயற்படல்<br>- விழிப்பாயிருத்தல்<br>- தன்னம்பிக்கை<br>• ஒவ்வொருவரும் தாமாகவே இவ்வாற்றல்களையும் பண்புகளையும் வளர்த்துப் பயிற்சி பெறல் வேண்டும்.<br>• தற்போது தன்னிடத்தில் இல்லாத ஆனால் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகளை முதலில் இனங்காணல் வேண்டும்.<br>• தான் நாளாந்தம் எதிர் கொள்கின்ற அனைத்து பெரிய மற்றும் சிறிய அனுபவங்களும் அவ்வாறான ஆற்றல்கள் மற்றும் பண்புகளை பயிற்சி பெறுவதற்கான அரிய வாய்ப்பாக எண்ணுதல் வேண்டும்.<br>• முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்வதில் பயன்படக் கூடிய ஆற்றல் மற்றும் பண்புகளை விருத்தி செய்து கொள்வதின் மூலம் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளும் படி முறைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.<br>- சிரித்த முகத்துடன் பேசுதல் பதிலளித்தல்<br>- பொறுமையாக நிதானமாக விடயங்களை விளக்குதல்<br>- எதிர்க் கருத்துக்களுக்கு விருப்பத்துடன் செவிமடுத்தல்.<br>- இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுகளை முன்வைத்தல். |

(17 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தக் கூடிய படிமுறைகளை விளக்குவார்.
- பல்வேறு வகையான தனியாள் ஆற்றல்கள் மற்றும் பண்புகள் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை பொருத்தமான காரணங்களுடன் ஏற்பார்.
- தனியாள் ஆற்றல்கள் மற்றம் பண்புகள் முரண்பாட:டத் தவிர்ப்பில் பயன்படுகின்ற முறைகளை முன்மாதிரியாகக் கொள்வார்.
- தனது வாழ்க்கையில் முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் தனியாள் ஆற்றல்களையும் பண்புகளையும் விருத்தி செய்து கொள்வார்.
- குழுச் செயற்பாடுகளில் முரண்பாடுகளை தவிர்த்து ஒத்துழைப்புடன் செயற்படுவார்.

# இணைப்பு 8.3.3.1

- எமது பண்டையச் சமூகங்களில் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கான சிறந்த வழிகாட்டல்கள் காணப்பட்டன. அவை இன்றும் பழமொழி, உவமைகளாக எம்மை நெறிப்படுகின்றன.
- கீழேயுள்ள பழமொழிகள் முரண்பாட்டுத் தீர்வுகளில் பயன்படுத்தும் படிமுறைகள் தொடர்பான பண்புகளை வெளிக்காட்டுகிறதா?
    - ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
    - பொறுத்தார் பூமியாழ்வார்.
    - பதறிய காரியம் சிதரும்
    - ஊசி போவதைப் பார்ப்பார், உலக்கை போவதைப் பாரார்
    - மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு

## இணைப்பு 8.3.3.2

- பின்வரும் கூற்றுக்களை வாசித்து ஒன்றை தெரிவு செய்யுங்கள்
- அக் கூற்றினால் இருவருக்கு அல்லது இரு குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றாமல் இருப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பொருத்தமான கூற்றை முன் வைக்கவும்.
- இதற்காக இணைப்பு 8.3.3.1 இல் உள்ள செயற்பாட்டின் மூலம் இனங்காணப்பட்ட தகவல்கள் மற்றும் பண்புகளை பொருத்தமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவும்.
- உங்களது முன்மொழிவுகளை கலந்துரையாடல் அல்லது நாடக வடிவல் முன்வைப்பதற்கு தயார்ப்படுத்துங்கள்.

1. அடுத்த வகுப்பார் எங்கள் வகுப்புப் பக்கத்துக்குத்தான் வகுப்புக் கூட்டி அழுக்குகளை போடுகிறார்கள்.
2. நீங்கள் என்ன செய்கிறீர்கள் எனது பூக் கன்றிலிருந்து பூக்களை களவாக பறிக்கிறீர்கள்.
3. என்னால் இப்போது விளையாட வர முடியாது. என்னை வற்புறுத்த வேண்டாம்.
4. ஆ! அதோ அடுத்த வீட்டு மாட்டுக் கன்று எங்கள் வேலியை உடைத்துக் கொண்டு உள்ளே வருகிறது.
5. உங்கள் அக்காவின் செருப்பு அருந்து அவர் நொண்டி நொண்டிச் சென்றதை நான் நேற்றுக் கண்டேன்.
6. இவருக்கு புள்ளிகள் கூடக் கிடைத்ததென்று ரொம்பவும் துள்ளுகிறார்.

**தேர்ச்சி 8.3** : முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அறிந்து அச்சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்குரியவாறு செயற்படுவார்.

**செயற்பாடு 8.3.4** : " மகிழ்வான மனதுடன் ஒன்றாக இருப்போம் "

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.3.4.1 இல் உள்ள கற்கைச் சம்வம்
- இணைப்பு 8.3.4.2
- எழுதும் தாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.4.1** :

- இணைப்பு 8.3.4.1 இல் உள்ள சம்பவத்தை முன்வையுங்கள்.
- இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இங்கு ஏற்பட்ட முரண்பாட்டிற்கான காரணத்தையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி கலந்துரையாடி பிள்ளைகள் உதிர் கொண்ட இவ்வாறான சம்பவங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள். அம்முரண்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்து விட்டு பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- முரண்பாடுகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளாவிட்டால் அது சிக்கலான நிலைமைகளைத் தோற்றுவிக்கும்.
- எல்லா முரண்பாடுகளையும் ஆரம்பத்திலேயே சுமுகமாகவும் இலகுவாகவும் தீர்த்துக் கொள்ளலாம்.
- முரண்பாடுகளை சுமுகமாகவும் இலகுவாகவும் தீர்த்துக் கொள்ளக் கூடிய முறைகள் உள்ளன.
- இலகுவான படிமுறைகளைப் பின்பற்றினால் எல்லா முரண்பாடுகளிலும் இரு தரப்பினரும் வெற்றிபெறக் கூடியவாறு தீர்த்துக் கொள்ளலாம்.

(10 நிமிடங்கள்)

**படி 8.3.4.2** :

- மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.3.4.1 இல் உள்ள ஒப்படையை குழுக்களுக்கு வழங்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.3.4.3** :

- குழுக்கள் தேடி அறிந்த விடயங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் கருத்துக்கள் தொடர்பாக ஏனைய குழுக்களின் கருத்துக்களை விசாரித்து அவற்றை மதிப்பீடு செய்யுங்கள்.
- முன்வைக்கப்பட்ட கருத்துக்களை குறை நிரப்பு செய்தவாறும் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - முரண்பாட்டுத் தீர்வுக்காக எளிய நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும்.
> - அவ்வெளிய முறைகள்,
>   1. முரண்பாட்டை தெளிவாக விளக்குதல்
>   2. இரு தரப்பினரும் பிரச்சினையை மீண்டும் வரைவிலக்கணப்படுத்திக் கொள்ளல் (வரையறை செய்து கொள்ளல்.)
>   3. பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகளை முன்மொழிதல்.
>   4. மாற்றுத் தீர்வுகளில் சிறந்த தீர்வை தெரிவு செய்தல்.
>   5. அத்தீர்வை நடைமுறைப்படுத்தலும் மதிப்பிடலும்

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- முரண்பாடுகளை தீர்க்கும் எளிய படிமுறைகளை விளக்குவார்.
- முரண்பாடுகளைத் தீர்ப்பதால் மகிழச்சி உண்டாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- முரண்பாடுகளை தீர்ப்பதற்காக படிமுறை ஒழுங்குகளை பின்பற்றுவார்.
- முரண்பாடுகளை தீர்ப்பதில் மத்தியஸ்தராக செயற்படுவார்.
- தான் வாழும் சூழலில் ஏற்படும் முரண்பாடான சந்தர்ப் பங்களை தவிர்ப்பதற்காக முயற்சி செய்வார்.

**பின்தொடர் வேலை :**

- தான் எதிர்கொண்ட முரண்பாடான சந்தர்ப்பங்களையும் அப்போது தான் செயற்பட்ட முறைகளையும் விபரிக்கவும்.
- அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நீங்கள் இன்று முன் மொழியும் படிமுறைகளையும் விளக்குக.

## இணைப்பு 8.3.2.1.1

அப்போது நேரம் இரவு 7.35 மணி இருக்கும். அப்போது சாந்தி தொலைக்காட்சியில் அறிவுக் களஞ்சிய (கேள்வி - பதில்) நிகழ்ச்சியொன்றை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அவனது அண்ணன் நவநீதன் தொலை நிலை ஆளியை (Remote Controller) பயன்படுத்தி தங்கையை கேளாது வேறு அலை வரிசைக்கு நிகழ்ச்சியை மாற்றினான். தங்கை கோபமடைந்தாள். ‘‘நான் தொலைக்காட்சி பார்கிறதை நீங்கள் காணவில்லையா? அந்த நிகழ்ச்சியை போடுங்கோ.’’ பதிலுக்க நவநீதனும் ‘‘நான் கிழமையில் ஒரு முறைதான் இந்த நிகழ்ச்சியை பார்க்கிறேன். என்னாலை முடியாது. நீ அங்காலை போ. போய்ப்படி’’ என்றான். பதிலுக்கு சாந்தியும் ஏதேதோ சொல்ல விடயம் அடிதடியில் முடிந்தது. சமையல் அறையில் இருந்த அம்மாவின் காதுகிளல் சாந்தியின் அழுகையொலி கேட்டது. அம்மா உடனே அவ்விடத்திற்கு வந்து இருவருக்கும் எச்சரிக்கை செய்து விட்டு தொலைக்காட்சியை முடிவிட்டாள்.

## இணைப்பு 8.3.2.1.2

முரண்பாடொன்றை தீர்த்துக் கொள்ளும் சில எளிய படிமுறைகளை நடைமுறைப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய முறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை நன்கு கற்கை செய்யவும்.

முரண்பாட்டுத் தீர்வில் எளிய படிமுறைகள்:

- முரண்பாட்டுக்குரிய அடிப்படை காரணத்தை விளக்கவும்.
- முரண்பட்ட இரு தரப்புக்கும் முரண்பாட்டுக்குரிய அடிப்படை காரணத்தை மீண்டும் விளக்கல்.
- இரு தரப்பினருக்கும் முரண்பாட்டை தீர்ப்பதற்கான மாற்றுத் தீர்வுகளை முன் வைத்தல்.
- ஒவ்வொரு மாற்றுத் தீர்வையையும் மதிப்பீடு செய்து சிறந்த தீர்வை தெரிவு செய்தல்.
- தெரிவு செய்த தீர்வை செயற்படுத்தலும் மதிப்பிடலும்.

## இணைப்பு 8.3.2.1.3

1. உங்கள் குழு அங்கத்தவர்கள் எதிர்கொண்ட முரண்பாட்டு சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்களை குழுக்களுக்கு முன்னால் முன்வைக்கவும்.
2. அவ்வாறான முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களில் ஒன்றை தெரிவு செய்து அதனை விளக்கமாக எழுதுங்கள்.
3. அம் முரண்பாட்டை (பிரச்சினையை) எளிய படிமுறைகளை பின்பற்றி தீர்த்துக் கொள்ளும் முறைகளை விளக்கமாக முன்வைக்கவும். அப்பிரச்சினையை நல்லெண்ணத்துடன் தீர்த்துக் கொள்வதற்கான முன்மொழிவுகளை கூறுங்கள்.

**தேர்ச்சி 8.3** : முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : முரண்பாடுகளை நல்லெண்ணத்துடன் தீர்த்துக் கொள்வார்.

**செயற்பாடு 8.3.2.2:** “பிளவு வேண்டாம் - ஐக்கியப்படுவோம்”

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.3.2.2.1
- இணைப்பு 8.3.2.2.2 செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.2.2.1** :

- இணைப்பு 8.3.2.2.1 இல் உள்ள சம்பவத்தை மாணவர்களைக் கொண்டு நடித்துக் காட்டுக.
- இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- நீங்கள் பார்த்த பாத்திரமேற்று நடித்தலின் (சிறு நாடகம்) மூலம் எவ்வாறான சந்தர்ப்பம் வெளிப்படுத்தப்படுகிறது?
- இச்சந்தர்ப்பத்தின் அடுத்த கட்டம் எதுவாக இருக்கும்?
- இவ்வாறான முரண்பாட்டை தவிர்ப்பதற்கு நீங்கள் முன்மொழியும் ஆலோசனைகள் எவை?
- மேற்கண்ட விடயங்களை மையப்படுத்தி பின்வரும் அம்சங்கள் வெளிக்கொணரக்கூடியவாறு கலந்துரையாடலை தொடர்ந்து மேற்கொள்க.

| |
|---|
| • முரண்பாடொன்று தோன்றுவதங்கு அதனை இனங்காண முடியும்.<br>• முரண்பாடு தோன்றுவதற்கு இடமளிக்காமல் அதனை தீர்த்துக் கொள்ள முடியும்.<br>• முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதன் மூலம் சமூகத்தில் சிறந்த நிலைமையொன்றைப் பேணலாம்.<br>• முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளும் படிமுறைகளை அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். |

(10 நிமிடங்கள்)

**படி 8.3.2.2.2** :

- மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.3.2.2.2 ஐ மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்குக.
- ஒரு குழுவைக் கொண்டு பாத்திரமேற்று நடித்தலை செய்யவும்.
- ஏனைய குழுக்களுக்கு செயற்பாட்டு பத்திரங்களை வழங்கி உரிய கருமங்களில் ஈடுபடுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

படி 8.3.2.2.3 :

- குழுக்கள் தேடி அறிந்த விடயங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- சகல குழுக்களின் கருத்துக்களையும் கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • அனைத்து முரண்பாடுகளையும் நல்லெண்ணத்துடன் (நேர்வகையாக) தீர்ப்பதற்கான படிமுறைகள் உள்ளன.<br>• முரண்பாடுகளை எளிதாக தீர்ப்பதன் மூலம் சிறந்த சமூகச் சூழலொன்றை கட்டியெழுப்ப முடியும்.<br>• அனைத்து முரண்பாடுகளுக்கும் ஏதுவான காரணிகளை மிக இலகுவாக தீர்த்துக் கொள்ள முடியும்.<br>• முரண்பாடுகளை உரிய முறையில் தீர்த்துக் கொள்ளாததால் சிக்கலான நிலைமைகள் மற்றும் கடுமையான அனர்த்த நிலைமைகள் உண்டாகின்றன.<br>• முரண்பாடுகளை குறைப்பதற்கும், அவற்றை தீர்ப்பதற்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.<br>• முரண்பாடுகள் தோன்றுவதற்கான அறிகுறிகளை இனங்கண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும் |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- முரண்பாடுகளை நல்லெண்ணத்துடன் தீர்ப்பதற்கான எளிய படிமுகைளை விளக்குவார்.
- முரண்பாடுகளை நல்லெண்ணத்துடன் தீர்க்கும் முயற்சியில் ஆக்க பூர்வமாக செயற்படுவார்.
- முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நல்லெண்ணத் தீர்வுகளை முன்வைப்பார்.
- சமூகத்தில் ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதில் பங்களிப்புச் செய்வார்.
- தனக்கு ஏற்படுகின்ற முரண்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை முன்வைப்பார்.

**பின்தொடர் வேலை :**

- உங்களுக்கு ஏற்பட்ட முரண்பாடான சந்தர்ப்பம் ஒன்றை நினைவு கூர்ந்து விபரமாய் எழுதி அச்சமயம் அதனை தீர்த்துக் கொள்வதற்கு நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை எழுதுக.
- இன்று நீங்கள் அம் முரண்பாட்டினை தீர்த்துக் கொள்வதற்கு முன்மொழியும் படிமுறைகளை எழுதுக.

## இணைப்பு 8.3.2.2.1

குமாரி : மாலதி! நீங்கள் இவ்வளவு பிந்தி வாரீங்கள்? இப்ப நேரம் 7.20 கெதியா வாங்கோ. வகுப்பை கூட்டுவோம்.

நாமலி : உங்களாலை எப்பவும் இப்படித்தான். கெதியாய் தும்புத் தடியை கொண்டாங்கோ.

சுஜானி : நான் பிந்துனதுதான் உங்களுக்கெல்லாம் பிரச்சினை. சரி. சரி வகுப்புத் தும்பத்தடியை காணல்ல. எங்கை அது? கொஞ்சம் பாருங்கோவன்.

துசாரி : ஐயோ! பாருங்கோவன் தும்புத் தடி இங்கை இல்லை. அது இங்கை தான் மூலையில் இருந்தது. ஆர் எடுத்தது?

சுஜானி : அங்கை பாருங்கோ. அடுத்த வகுப்பு சுசிலா இங்கைய பார்த்து பார்த்து கூட்டுறா. அவ தான் எடுத்திருப்பா.

(மூன்று பேரும் சுசிலாவின் வகுப்புக்கு கோபமாக போகிறார்கள்)

சுஜானி : சுசிலா நீங்கள் எங்கை இருந்து தும்புத்தடியை எடுத்தீர்கள்? இது எங்களின்றை தும்புத்தடி அதைத் தாங்கோ.

சர்மிலா : உங்களுக்கு பைத்தியமா?

துசாரி : நீர் சரியான ஆள்தான். தும்புத்தடியை களவிலை எடுத்தீங்கள். அல்லே உங்கள் வகுப்பிலை எல்லோரும் கள்ளங்கள்தான். களவிலை எடுத்தது மட்டுமல்ல சண்டை பிடிக்கவும் வாரிங்கள். நல்ல கதை.

சர்மிலா : உங்கடை தும்புத்தடியை நீங்கள் தேடிக் கொள்ளுங்கள். இது எங்கடை இதுலை கை வச்சா விஷயம் கெடும். முடிச்சா எடுங்க பார்ப்பம்.

வகுப்பறையில் ......

(நிமலன் வகுப்பை கூட்டிக் கொண்டு இருக்கிறான். அவன் வகுப்புத்தலைவன். அன்று மழை நாள். சேறு பூசப்பட்ட கால்களுடன் குமார் வகுப்பறைக்குள் நுழைகிறான்.)

நிமலன் : என்ன குமார்! வகுப்பிலை சேற்றை பூசுறீங்கள். நான் கூட்டுறன். நீங்கள் சேற்றைப் பூசுங்கள். வெளியாலை போங ்கோ

குமார் : என்னை வெளியே போகச் சொல்ல நீர் யார்? நீர் வெளியாலை போகவும்.

நிமலன் : நான் வகுப்பு மொனிட்டர் தெரியாதா? வெளியாலை போகவும். போகாட்டா காலை உடைச்சுப் போடுவன்.

குமார் : என்றை காலை உடைச்ச உனக்கு முடியுமா? முடிஞ்சா உடைச்சுப் பாரும். என்னை உள்ளே போக விடு.

நிமலன் : குமார் என்னை கெட்டவன் என்று சொல்லாதே வெளியாரை போ.

## இணைப்பு 8.3.2.2.2

# செயற்பாட்டுப்பத்திரம்

**குழு 1** இக்குழு மேலேயுள்ள சம்பவத்தை வாசித்து பாத்திரமேற்று நடித்தலை செய்யவும்.

**ஏனைய குழுக்கள்**

- பாத்திரமேற்று நடித்தலை அவதானித்து அம்முரண்பாடு தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.
- இம்முரண்பாட்டை தீர்த்துக் கொள்ளும் முறைகளை படிமுறைகளுக்கேற்ப விளக்குக.
- நீங்கள் முன்மொழியப்பட்ட தீர்வை எளிய முறையில் விளங்கி அதனை பாத்திரமேற்று நடிக்கவும்.

# 8.4 தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தலும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளலும்

## அறிமுகம்

இணக்கமாக வேலை செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுமுகமாக வேலை செய்ய தலைவர் ஒருவர் அவசியம். உண்மையான தலைவர் ஒருவர் சிறந்த தலைமைத்துவப் பண்பகளைப் பொற்றிருப்பர். தலைவர் ஒருவரினூடாக வழிகாட்டலைத் தெளிவாக வழிகாட்டலைப் பெற முடியும். இதனூடாக எதிர்காலத்திற்குத் தேவையான தலைமைத்துவ ஆளணியினர் உருவாகின்றது. தலைமைத்துவத்தை அறிந்து கொள்வதனூடாக இவ்வலகினூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்ச்சி:

8.4 தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்து தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்

## தேர்ச்சி மட்டம்:

8.4.1 தலைமைத்துவத்தின் அவசியத்தை இனங்கண்டு ஒரு தலைவராகச் செயற்படுவார்.

- தலைமைத்துவம் என்பது யாது?
- ஒரு குடும்பத்தை அல்லது சிலவற்றை அல்லது பலரை ஒரு பொது நோக்கத்தை அடைவதற்காக, கூட்டாக நெறிப்படுத்துவதே தலைமைத்தவமாகும் என எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

- **குடும்பத்தில் தலைமைத்துவத்தைக் காணக்கூடிய சில சந்தர்ப்பங்கள்**

***குடும்பத்தில்*** - பெற்றோர்/ மூத்த பிள்ளைகள்

***பாடசாலையில்*** - அதிபர்/ பிரிவுத்தலைவர்கள்/ பாடத்தலைவர்கள்/ வகுப்பாசிரியர்/ மாணவர் தலைவர்கள்/ வகுப்புத்தலைவர்கள்/ விளையாட்டுத் தலைவர்கள்

***சமூகத்தில்*** - சமயத் தலைவர்கள்/ சமுதாயத்தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள்/ தொண்டர் அமைப்புக்களின் தலைவர்கள்/ அரசியல் தலைவர்கள்

- சமூகத்தில் வெவ்வேறு வகையான தலைமைத்துவங்களை இனங்காணலாம்.
  - சனநாயகத் தலைவர்கள் சர்வாதிகாரத்தலைவர்கள்

- தலைமைத்துவப் பண்புகள்

## தலைமைத்துவத்துக்காக விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள்

| தொடர்பாடல் திறன் | பிரச்சினை தீர்த்தல் திறன் | திட்டமிடல் திறன் |
|---|---|---|
| • முன்வருதல்<br>• தெளிவாக விளக்கம் அளித்தல்<br>• தெளிவான பேச்சு<br>• ஒழுங்காகக் கட்டியெழுப்புதல்.<br>• உறுதிப்படுத்தல்<br>• செவிமடுத்தல்<br>• உறுதிப்பாடு | • பிரச்சினையை விளங்கிக் கொள்ளல்<br>• தகவல் சேகரித்தல்<br>• பகுத்தாய்தல்<br>• தீர்வு தேடல்<br>• நடைமுறைப்படுத்தல் | • குறிக்கோள்களைத் தீர்மானித்தல்<br>• திட்டமிடல்<br>• ஒழுங்கமைத்தல்<br>• பகுப்பாய்தல்<br>• தீர்மானமெடுத்தல் |

| நெறிப்படுத்தும் திறன் | மனிதத் தொடர்புகளைப் பேணும் திறன் | மனவெழுச்சித் திறன் |
|---|---|---|
| • இலக்குகளைத் தீர்மானித்தல்<br>• திட்டமிடல்<br>• குழுவை நெறிப் படுத்தல்<br>• கட்டுப்பாடு<br>• இலக்கை எட்டுதல் | • பரிவுணர்வு<br>• சமூகமயமாதல்<br>• ஆளிடைத் தொடர்புகள் | • நட்பு<br>• இணக்கம்<br>• உணர்வுடைமை<br>• ஏனையோருக்கு உதவி புரிதல்<br>• மனவெழுச்சி விருத்தி |

## தலைமைத்துவமும் தலைமைத்துவத்தைப் பின்பற்றலும்

- ஒரு குழுவை நெறிபடுத்துபவர் தலைவர் ஆவர். தலைவரால் நெறிப்படுத்தப்படுபவர், தலைமைத்துவத்தைப் பின்பற்றுபவர் ஆவர்.
- தலைவர் தமது குழுவை நெறிப்படுத்தும்போது அதற்கமைய செயற்படுவதற்கு பின்பற்றுபவர் ஆயத்தமாகதல் வேண்டும்.
- தலைவர் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படுவதல் அத்தலைவரரைப் பின்பற்றுவோரது பொறுப்பாகும்.
- தலைவரைச் சரியான வழியில் இட்டுச்செல்வதற்கு பின்பற்றபவர் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் வேண்டும்.
- தலைவர் தனது சொந்த நன்மைகளை எதிர்பாராது, குழு உணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.
- ஒரு நல்ல தலைவராவதற்கு நல்லதொரு தலைவரைப் பின்பற்றிச் செயற்படுவது முக்கியமானதாகும்.
- தலைவரும் தலைவரைப் பின்பற்றபவரும் பரஸ்பரம் பொறுப்பு வகித்தல் - வகை சொல்லல் ஆகியவற்றினால் பிணைந்திருத்தல் வேண்டும்.

**தேர்ச்சி 8.4** : தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்து தலைமைத்துவத்துக்குரிய பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : தலைமைத்துவத்தின் தேவையை இனங்கண்ட தலைவர் போன்று செயற்படுவார்.

**செயற்பாடு 8.4.1.1:** "தலைவரிடம் உள்ள உயர்ந்த பண்புகள்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்புகள் அடங்கும் பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.4.1.1** :

- இணைப்பு 8.4.1.1 பத்திரத்தை மாணவர்களுக்கு பகிர்ந்து அளித்து அதனை வாசிக்க வாய்ப்பளியுங்கள். இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு அப்பா, அதிபர், பெரிய அண்ணா, சுசில் அண்ணாஆகியோரின் ஏற்கப்பட்டிருந்தது நிலைமைகள் யாவை என எழுமாறாக மாணவரிடம் விசாரித்தறிக.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • குடும்பத்தினுள் தாய், தந்தை, மூத்த சகோதரர், மூத்த சகோதரி ஆகியோருக்கு தலைமைத்துவம் உரிமையாகும். |
| • அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு தலைமைத்துவம் உருவாகும். |
| • பின்பற்றுவோர் மத்தியில் தலைமைத்துவப் பண்புகள் உருவாகக் கூடியவாறு தலைமைத்துவத்தின் நடத்தைகள் செயற்பட வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**படி 8.4.1.2** :

- மேலே குறிப்பிட்ட இணைப்பை உபயோகித்து பின்வரும் செயற்பாட்டில் ஈடுபட மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கி அவர்களை கண்டாய்வில் ஈடுபடுத்துங்கள்.
- இணைப்பில் வரும் பாத்திரங்களிடைம் குறித்த சந்தர்ப்பங்களில் இருக்க வேண்டிய தலைமைத்துவ பண்புகள் யாவை என்பதை பட்டியறப்படுத்து குழுவினரை வழிப்படுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

**பின்தொடர் வேலை :**

- நீங்கள் உயர்ந்ததாகக் கருதப்படும் சமய, சமூக, பொருளாதார தலைமைத்துவத்தின் தலைமைப் பண்புகளை கற்று சிறு புத்தகமொன்றைத் தயாரிக்க.

## இணைப்பு 8.4.1.1

நான் கல்விச் சுற்றுலாவில் பங்கேற்க தாயாரிடம் அனுமதி கேட்ட போது அதற்காக தந்தையிடமும் அனுமதி பெற வேண்டம் எனத் தாயார் கூறினார்.

கண்காட்டிசி வெற்றியடைந்ததற்கு காரணம் அதிபரின் அறிவுரைகளுக்குக்கேற்ப நடந்து கொண்டதே என எமது வகுப்பாசிரியர் கூறினார்.

ஊர்வலத்தைப் பார்க்கச் சென்ற நாம் ஊர்வத்தின்போது நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி பெரியவர்கள் குறிப்பிடாதிருந்ததால் எம்மில் ஒருவர் கட்டாயமாக கூட்டத்தில் வழிதவறியிருப்போம்.

விளையாட்டுப் போட்டி நடைபெற்ற தினத்தில் அவர்களில் சுனில தமது பொறுப்புக்களை உற்சாகமாகவும் ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட விதம் பற்றி அடுத்த நாள் காலை கூட்டத்தில் ஆசிரியர்கள் யாவரும் அவரை பாராட்டினர். இதனை நினைக்கும் போது நானும் அவரைப் போல் செயற்பட வேண்டும் என உறுதி செய்து கொண்ட விதத்தை இன்றும் என்னால் மகிழ்ச்சியுடன் நினைவு கூற முடியும்.

**தேர்ச்சி 8.4** : தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்து தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : தலைமைத்துவத்தின் அவசியத்தை விளங்கி ஒரு தலைவராகச் செயற்படுவார்.

**செயற்பாடு 8.4.1.2:** "நாளைய உலகின் தலைவர்கள் நாமே"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.4.1.2.1
- இணைப்பு 8.4.1.2.2
- இணைப்பு 8.4.1.2.3

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.4.1.2.1** :

- இணைப்பு 8.4.1.2.1 மாணவர்க்குக் காட்சிப்படுத்துக.
- விடயங்களினூடாக, தலைவர், தலைவரைப் பின்பற்றுபவர் ஆகிய எண்ணக்கருக்களை வெளிக்கொணருங்கள்.
- இணைப்பு 8.4.2.2.3 மாணவருக்குப் பகிர்ந்தளியுங்கள். தலைவரைப் பின்பற்றுவோரின் இயல்புகளை எழுதுமாறு கூறுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரக்கூடியவாறு கலந்துரையாடலை தொடர்ந்து மேற்கொள்க.

> - தலைவர் - வழிநடத்துபவராவார்.
>   தலைவரைப் பின்பற்றுபவர், தலைவருக்கு உதவி புரிந்தவாறு செயற்படுபவராவர்.
> - தலைவருக்குரிய சிறப்பியல்புகள் உண்டு.
>   தலைவரைப் பின்பற்றுபவருக்கும் சிறப்பியல்புகள் உண்டு.
> - தலைவர், தலைவரைப் பின்பற்றுவோர் ஆகிய இரண்டு தரப்பினருக்கும் உரிமை பொதுவான இயல்புகளும் உள்ளன.
> - தலைவர் - ஆரம்பிப்பவராவர், தான் தொடங்குபவராவர், சரியானவற்றைச் செய்பவராவர்.
>   (என்றவாறாக அட்டவணையூடாக விடயங்களை எடுத்துக் காட்டுங்கள்.
> - தலைவரைப் பின்பற்றுபவர் - தலைவருக்க உதவி புரிபவர், ஒத்துழைப்பு வழங்குபவர், நடைமுறைப்படுத்துபவர் ஆவார்.
> - ஒருபோது தலைவராக இருப்பவர் தர்ணத்துக்கேற்ப ஒருபோது பின்பற்றுபவராகவும் நடந்து கொள்ள வேண்டியேற்படுவதுண்டு.

(05 நிமிடங்கள்)

**படி 8.4.1.2.2** :

- மாணவர்களை 06 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும்.
- தமது குழுவின் தலைவரைத் தெரிவு செய்து கொள்ள இடமளியுங்கள்.
- தலைவரை அழைத்து இணைப்பு 8.4.2.3 இல் தரப்பட்டுள்ள தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து கொள்வதற்கு வாய்ப்பளியுங்கள்.
- குழுக்களுக்கு வேலைகளை ஒப்படைத்து தேடலில் ஈடுபடுத்துங்கள்.
- தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.4.1.2.3** :

- குழுக்கள் தேடி அறிந்த விடயங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முதலில் வரிவுபடுத்துவதற்கு முன்வைத்த அதே குழுவுக்கு இடமளியுங்கள்
- ஏனைய குழுக்களும் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • தலைவர் ஆரம்பிக்கும் வேலையை வினைத்திறன் மிக்கதாக நிறைவேற்றுவதற்கு தலைவரை பின்பற்றுவோரின் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும். |
| • எந்தவொரு வேலையும் வெற்றியடைவதற்கு தலைவரும், அத்தலைவரைப் பின்பற்றுபவருமே முழு மனதுடன் செயற்படுதல் வேண்டும். |
| • அபிவிருத்திக்கு தலைவரதும் தலைவரைப் பின்பற்றுபவரதும் பங்களிப்பு அவசியமாகும். |
| • தலைவரும், தலைவரைப் பின்பற்றுவோரும் மனம் வைத்துச் செயற்படுவதால் மகிழ்ச்சியடையலாம். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தலைவரது சிறப்பியல்புகளையும் தலைவரைப் பின்பற்றும் போது சிறப்பியல்புகளையும் குறிப்பிடுவார்.
- தலைவரும் தலைவரைப் பின்பவற்றுவோரும் ஒத்துழைத்துச் செயற்படுவதன் அவசியத்தை மதிப்பார்.
- தலைவருக்குரிய சிறப்பியல்புகளையும் தலைவரைப் பின்பற்றுவோருக்குரிய சிறப்பியல்புகளையும் வெளிக்காட்டியவாறு தமக்குரிய பணிகளை ஆற்றுவார்.
- தலைவர்களுக்குரிய சிறப்பியல்புகளையும் தலைவரைப் பின்பற்றுபவரது சிறப்பியல்புகளையும் மேலும் விருத்தி செய்வார்.
- சமயோசிதமாக தலைவரும் தலைவரைப் பின்பற்றுவேரும் செயற்படுவார்.

## இணைப்பு 8.4.1.2.1

- விளையாட்டு அணியொன்றின் படம் அல்லது ஒளிப்படம்
  (தலைவர், தலைவரைப் பின்பற்றுவோர் உட்பட)
- வேலை செய்வோர் - தலைவரைத் தெளிவாகக் காட்டும் படம் அல்லது புகைப்படம்

## இணைப்பு 8.4.1.2.2

### செயற்பாட்டுப்பத்திரம்

| **தலைவரின் சிறப்பியல்புகள்** | **தலைவரைப் பின்பற்றுவோரின் சிறப்பியல்புகள்** |
|---|---|
| 1. தலைவர் தொடங்குவார்<br>2. தலைவர் நம்பிக்கையூட்டுவார்<br>3. தலைவர் சரியானவற்றைச் செய்வார்<br>4. தலைவர் ஊக்கப்படுத்துவார்.<br>5. தலைவர் தைரியமூட்டுவார்.<br>6. தலைவர் வேலைகளை ஒப்படைப்பார்.<br>7. தலைவர் தம்மைப் பின்பற்றுவோரின் தேவைகள், எதிர்பார்ப்புக்களை இனங் கண்டு கொள்வார்.<br>8. தலைவர் பாராட்டுவார்.<br>9. தலைவர் உணர்வு காட்டுவார்<br>10. தலைவர் குழுவை நெறிப்படுத்துவார்.<br>11. தலைவர் வேலையில் ஈடுபடுவார். | |

## இணைப்பு 8.4.1.2.3

### குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் படிவங்கள்

***நாளைய உலகின் தலைவர்கள் நாம்***

- பின்வரும் தலைப்புக்களுள் உங்களது குழுவுக்குரிய தலைவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- அத்தலைப்புக்கு அமைய, தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகளை தலைமைத்துவத்தைப் பின்பற்றுபரின் சிறப்பியல்புகள், அது தொடர்பாக பெற்ற அனுபவங்கள், உணர்வுகள் வெற்றியடைவதற்கு அல்லது வெற்றியடையாமைக்கான காரணங்கள், அனுகூலங்களைக் கோவைப்படுத்துங்கள்.
- தேடியறிந்தவற்றை ஆக்கபூர்வமாக வகுப்பில் முன்வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.
    1. வகுப்பறையை அழகுபடுத்துதல்
    2. குப்பை கூலங்களை அப்புரப்படுத்துவதற்குப் பொருத்தமான ஓர் இடத்தை தயார்ப்படுத்தல்.
    3. பூஞ்செடி வளர்ப்பதற்காக பூப்பதத்தி அமைத்தல்
    4. மூலிகை வளர்ப்புக்கு நிலத்தைத் தயார்ப்படுத்தல்.
    5. மரக்கறிப்பாத்தி தயாரித்தல்.
    6. வகுப்பறைக் காட்சிப்படுத்துவதற்காக விழுமியக்கோவையொன்று தயாரித்தல்.
    7. வகுப்பறைக்குப் பொருத்தமான சட்டதிட்டக்கோவையொன்று தயாரித்தல்.

# 8.5 வேலை உலகிற்கு இசைவடைவோம்

## அறிமுகம்

நாடொன்றின் அபிவிருத்தி நிலைத்திருப்பதற்கு நாடொன்று அபிவிருத்தி அடைவது நபர்களின் வேலையுலகுடன் செயற்றிறன் வாய்ந்த முறையில் தொடர்புற்றிருக்கும் போதாகும். பாடசாலைக் காலம் தொட்டே சிறந்த வாழ்வின் இலட்சியங்களை அடைவதற்காக வழியை இலக்காகக் கொண்டு வழிகாட்டல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. தமது எதிர்கால தொழிலகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் அதனூடாக பயனுறுதி வாய்ந்த சேவையை நிறைவேற்றுவதற்கும் மாணவருக்கு இதன் மூலம் ஆற்றல் கிடைக்கும்.

### தேர்ச்சி மட்டம்:

#### 8.5.1 உழைப்பின் மகிமையுடன் செயற்படுவார்.

* வேலையுலகின் பல்வகைமை

- வாழ்வதற்கான மனிதர்கள் தொழிலொன்றிலீடுபட வேண்டும்.
- அவ்வாறான தொழில்கள் நிரம்பிய உலகு தொழில் உலகு எனப்படும்.
- வேலை உலகிற்கு புகுவதற்கு முன்பதாக தமது திறமைகளை இனங்கண்டு அதற்கான முன் தயார் நிலையை பாடசாலை கல்வியினூடாக பூரணப்படுத்திக் கொள்ளல் முக்கியமாகும்.
- வேலை உலகிலுள்ள பல்வேறு வாய்ப்புக்களையும் இனங்காணல். அங்கு பிரவேசிப்பதற்கான தகைமைகளைப் பெற முக்கியமாகையால், விமர்சன சோக்குடன் செயற்பட இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

* எல்லாத் தொழில்களும் எல்லா வேலைகளும் சமுதகத்தின் நிலவுகைக்கு முற்போக்கிற்கும் முக்கியமாகும்.

- எல்லா வேலைகளும், எல்லாத் தொழில்களும் சமுகத்திற்கு யாதொன்றை உற்பத்தி செய்கின்றது. அல்லது சேவையொன்றை பெற்றுத் தருகின்றது.
- மேற்படி உற்பத்தியும் சேவையும் நன்றாக அமையும்போது அது சமூகத்தின் நிலவுகைக்கும், முற் பயணத்துக்கும் ஏதுவாகும்.

  உதா: வீட்டுப் பணிப்பெண்கள், விவசாயி, நகர சுத்திகரிப்பாளர், மீன்பிடியான், மருத்துவர், பாதுகாப்பு வீரன், ஆசிரியர் ஆகிய யாவரினதும் உழைப்புக்கும் பெறுமானமள்ளது.

### தேர்ச்சி மட்டம்:

#### 8.5.2 பயிற்றப்பட்ட உழைப்பின் பெறுமானம் பற்றி கண்டாய்வில் ஈடுபடுவார்.

* எந்த ஒரு உற்பத்திக்கும் பயிற்சி பெற்ற உழைப்பு அவசியமாகும்.

* வெவ்வேறு உற்பத்திகளுக்கு உழைப்பு அவசியமாகும்.

- சமூகத்தில் பல்வேறு தொழில்கள் உள.
- பல்வேறு உற்பத்திகளுக்கும் உழைப்பு அவசியம்

- சமூகத்தில் பல்வேறு தொழில்கள் உள
- எந்த ஒரு துறை தொடர்பாகவும், புதிய தொழில்களை உருவாக்க முடியும்.
- மூலப்பொருளொன்றுக்கு பெறுமதியை சேர்த்து உற்பத்தியாக மாற்றுதல்

  உதா: - கொய்யாப்பழத்திலிருந்து குடிபானம் தயாரித்து சந்தைக்கு அனுப்புதல்.
  - பலாப்பழம் தொடர்பான உற்பத்தி
  - சிரட்டையிலிருந்து அலங்காரப் பொருள்கள்
  - கழிவுப்பொருள்களிலிருந்து சேதனப் பசளைகளை உற்பத்தி செய்தல்.
  - கடதாசி மிருதுவாக்கம்

  இவ்வாறான புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த பயிற்சி அவசியமாகும்

**தேர்ச்சி 8.5 :** வேலையுலகிற்கு இசைவாக்கமடைவார்.

**தேர்ச்சி மட்டம் :** தொழில் மகத்துவத்தைப் பேணி செயற்படுவார்.

**செயற்பாடு 8.5.1.1:** "வேலை உலகிற்குள் விழிப்புடன் பிரவேசிப்போம்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.1.1.1
- இணைப்பு 8.5.1.1.2
- எழுதும் தாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.1.1.1 :**

- இணைப்பு 8.5.1.1.1 இல் உள்ள பாடல்களில் விரும்பிய இரண்டை மாணவர்களை பயன்படுத்தி அல்லது ஒலி நாடாவிலுள்ள உபயோகித்து பாடச் செய்யவும்.
- இப்பாடல்களில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவி பாடல்களில் சொல்லப்படுகின்ற தொழில்கள் தொடர்பாக உரையாடி பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- வயது வந்தவர்கள் அனைவரும் ஏதேனும் தொழில்களில் ஈடுபடுகின்றார்கள்.
- தொழில் உலகில் அல்லது வேலையுலகளில் பல்வேறு வகையான தொழில்கள் காணப்படுகின்றன.
- தொழில் உலகில் பல்வகைமை காணப்படுகின்றது.
- வாழ்வதற்காக ஒவ்வொருவரும் ஏதேனும் தொழிலொன்றை செய்தாக வேண்டும்.

(08 நிமிடங்கள்)

**படி 8.5.1.1.2 :**

- மாணவர்களை குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.5.1.1.2 ஐ குழுக்களுக்கு வழங்கவும்.
- இதற்கேற்ப மாணவர்களை வேலைகளில் ஈடுபடுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.5.1.1.3 :**

- குழுக்கள் தேடி அறிந்த விடயங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிறப்பு செய்வதற்கு குழுக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- வேலை உலகம் அல்லது தொழில் உலகம் பல்வகைமைகளைக் கொண்டது.
- ஒவ்வொருவரும் வாழ்வதற்காக ஏதாவதொரு தொழிலொன்றைச் செய்தல் வேண்டும்.
- வேலை உலகில் அல்லது தொழில் உலகில் பிரவேசிப் பதற்காக மாணவர்கள் தங்களுடைய விருப்பு மற்றும் ஆற்றல்களை இனங்கண்டு சிறுபராயத்திலேயே அதற்கான ஆயத்தங்களைச் செய்தல் வேண்டும்.
- வேலை உலகில் எல்லா தொழில்களும் ஒன்றுடனொன்று தொடர்புடையது.
- திறனாய்வுடன் வேலை உலகை தெரிவு செய்தால் வாழ்க்கை வசதிகளும் கவர்ச்சிகளும் பொருந்தியதாக இருக்கும்.

(12 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வேலை உலகில் பல்வகைமை இருப்பதை ஏற்றுக் கொள்வார்.
- வாழ்வதற்காக சிறந்த தொழிலொன்றில் ஈடுபடுதல் அவசியம் எனக் கூறுவார்.
- தொழில் வகைகளை வருமானத்திற்கேற்ப வேறுபடுத்திக் காட்டுவார்.
- தனது விருப்பம் மற்றும் ஆற்றல்களுக்கேற்ப வேலை உலகில் பிரவேசிப்பதற்காக திறனாய்வுகளைச் செய்வார்.
- அனைத்து தொழில்கள் மூலமும் தனிப்பட்ட மற்றும் சமூக சேவைகளைச் செய்யலாம்.

**பின்தொடர் வேலை :**

- தொழில் மகத்துவத்தை உணர்த்துகின்ற கவிதைகள் மற்றும் பாடல்களை தொகுத்து சிறிய ஏடு ஒன்றைத் தயாரிக்கவும்.

## இணைப்பு 8.5.1.1.1

1. செய்யும் தொழிலே தெய்வம் அந்த திறமை தான் நமது செல்வம்.

2. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள். கவலை உனக்கில்லை ஏற்றுக் கொள்.
பாடியவர்:- பி.பீ. ஸ்ரீநிவாஸ்

3. கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி - விவசாயி
பாடியவர்: டி.எம். சௌந்தர்ராஜன்

4. தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்
பாடியவர்: டி.எம். சௌந்தர்ராஜன்

5. ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் சேவை இது
பாடியவர்: டி.எம். சௌந்தர்ராஜன்

## இணைப்பு 8.5.1.1.2

## ஒப்படை

1. உங்கள் குழு அங்கத்தவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்கள் வாழும் பிரதேசங்சகளில் உள்ளவர்களின் தொழில்கள் தொடர்பாக வினவுங்கள்.
2. அவர்களின் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.

| தொழிலின் பெயர் | அரச தொழில் | தனியார் துறை தொழில் | சுய தொழில் | வருமானம் (உயர்/தாழ்) | தொழிலுக்கான தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**தேர்ச்சி 8.5 :** வேலையுலகிற்கு இசைவாக்கமடைவார்.

**தேர்ச்சி மட்டம் :** தொழில் மகத்துவத்தைப் பேணி செயற்படுவார்.

**செயற்பாடு 8.5.1.2:** "வேலை உலகை கௌரவமிக்கதாகக் கருதுவோம்"

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.1.2.1 இலுள்ள சித்திரம்
- இணைப்பு 8.5.1.2.2 இலுள்ள ஒப்படை
- எழுதும் தாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.1.2.1 :**

- இணைப்பு 8.5.1.2.1 இல் உள்ள சித்திரத்தை மாணவருக்குக் காட்டுங்கள்.
- அதனடிப்படையில் பின்வரும் வினாக்களை எழுப்புங்கள்
  - மேற்படி சித்திரத்தில் காணப்படுவது என்ன?
  - அங்குள்ள உணவு வகை (மீன், போஞ்சி, சோறு) ஆகியவற்றை உற்பத்தி செய்த தொழில் என்ன?
- அது தொடர்பாக கேள்வி எழுப்பி பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • உணவு வேலையொன்றைத் தயாரிக்கும் போது பலரது உழைப்பு பல தொழிகளின் கூட்டு முயற்சி அங்கு ஒன்று சேருகின்றது.<br>• ஒரு வேலை அல்லது தொழில் மற்றுமொரு வேலை அல்லது மொழிலுடன் தொடர்புற்றது.<br>• எல்லா வேலைகளின் மூலமும் அல்லது முயற்சிகளின் மூலமும் சமூகத்திற்கு யாதாயினும் ஒரு உற்பத்தியை அல்லது சேவையை பெற்றுத் தர முடியும்.<br>• ஒரு உற்பத்தி சீரானதாக விருக்குமாயின் அது சமுகம் நீடித்திருப்பதற்கு காரணமாகின்றது.<br>• நபரின் அல்லது சமூகத்தின் நிலவுகைக்கு எல்லாத் தொழில்களும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். |

(10 நிமிடங்கள்)

**படி 8.5.1.2.2 :**

- வகுப்பு மாணவர்களை 07 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.5.1.2.2 ஐ குழுக்களுக்கு வழங்கவும்.
- குழுக்களை 1 தொடக்கம் 7 வரை இலக்கமிடுங்கள்
- அவர்களுக்கு ஒதுக்கிய வேலைக்கேற்ப குழுக்களைப் பெயரிடுங்கள்.

(08 நிமிடங்கள்)

**படி 8.5.1.1.3 :**

- கண்டாய்வுகள் யாவற்றையும் முன்வைத்து மீளாய்விலீடுபடுங்கள்.


| |
|---|
| • எல்லா வேலைகளும் எல்லாத் தொழில்களும் சமுகத்தின் முன்னோக்கிய பயணத்திற்கும் நிலவுகைக்கும் காரணமாகின்றது.<br>• நல்ல வேலைகளும் நல்ல தொழில்களும் சமூகத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு அவசியமாகும்.<br>• ஒரு தொழில் அல்லது சேவை ஆற்றப்படாது விடுபடுமாயின் அதன் காரணமாக ஏனைய வேலைகள் தடைப்படும். இது முழு சமூகத்தின் நிலவுகையையும் பாதிக்கும்.<br>• எல்லோரது உழைப்புக்கும் மதிப்பும் பெறுமதியும் உள்ளது. அதனை யாவரும் போற்ற வேண்டும்.<br>• தொழிலின் பெருமையுடன் செயற்பட வேண்டும். அதனை மதிக்கவும் வேண்டும். |

(12 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சமூகத்தின் நிலவுகைக்கு ஏதுவாகும் எல்லா தொழல்களையும் பட்டியற் படுத்துவார்.
- எல்லாத் தொழில்களும் மதிப்பும் பெறுமதியும் உள்ளது என ஏற்றுக் கொள்வார்.
- தொழில் மற்றும் சேவை உலகின் இடைத் தொடர்பு பற்றி விவரிப்பார்.
- உழைப்பின் பெருமை பற்றி கௌரவமாக உரையாடுவார்.
- உழைப்பின் பெருமையை கட்டியெழுப்புவதுடன் தொடர்புடைய சேவையை ஒழுங்கு செய்வார்.
- உங்கள் பகுதியில் பல்வேறு வகையான தொழில்களிலீடுபட்டுள்ள தனித்தனியாகப் பட்டியற் படுத்துவார்.
- உழைப்பின் மகிமையை விவரித்துக் கூறும் கவிதைகள், பாடல்கள், ஓவியங்கள், சித்திரம், சிறுகதை ஆகியவற்றை உருவாக்கி அந்தந்த குழுக்களுக்கேற்ற வகையில் சிறு பிரசுரமொன்றை தயாரிப்பார்.

## இணைப்பு 8.5.1.2.1




கீழே அட்டவணையில் எமது வாழ்க்கைக்கு கட்டாயமாகத் தேவைப்படும் துறைகள் சில தரப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புடைய தொழில்கள் பலவாகும். அது பற்றி தேடியாயுங்கள்.

1. உங்கள் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்து அத்துறை தொடர்பாக உள்ள எல்லாத் தொழில்களையும் வேலைகளையும் அட்டவணைப் படுத்துங்கள்.

2. அத்தொழில் துறையில் பெறுமதி பற்றி சுருக்கமாகக் கூறுக.

3. அத்துறையின் தொழில் சார்பாக உருவாக்கப்பட்டுள்ள பாடல்கள், கவிதைகள் ஒன்று வீதம் எழுதிக் காட்டுங்கள்.

## இணைப்பு 8.5.1.2.2

| குழு இல | தொழில் துறை |
|---|---|
| 01 | உணவு ஊட்டம் தொடர்பான தொழில் |
| 02 | உடை, ஆடை அணிகள் தொடர்பான தொழில் |
| 03 | சுகாதாரம் தொடர்பான தொழில் |
| 04 | போக்குவரத்து காவுதலும் தொடர்பான தொழில்கள் |
| 05 | வீடு, மின்சாரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தொழில்கள் |
| 06 | கல்வி, தகவல் தொழினுட்பம் ஆகியன தொடர்பான தொழில்கள் |
| 07 | ஊடகத் துறை சார்ந்த தொழில்கள் |

**தேர்ச்சி 8.5** : வேலையுலகிற்கு இசைவாக்கமடைவார்.

**தேர்ச்சி மட்டம்** : பயிற்றப்பட்ட தொழிலாளியின் அல்லது உழைப்பாளியின் மதிப்பு பற்றி தேடியாய்வார்.

**செயற்பாடு 8.5.2.1:**

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.2.1 உம் இணைப்பு 8.5.2.2 உம்
- புதிய வேலை வாய்ப்பு பற்றிய அறிவுறுத்தல்
- பாடநெறி பற்றிய பத்திரிகை அறிவித்தல், கஸட் அறிவித்தல்
- எழுதும் தாள்கள்/ பேனா

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.2.1.1** :

- இணைப்பு 8.5.2.1.1 இல் அடங்கும் உரையாடல் தொடர்பான நடிப்பு.
- மேற்படி வகிபாகமேற்று நடித்தல் மூலம் பயிற்றப்பட்ட உழைப்பின் மகிமை பற்றி கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • ஒருவரது அடிப்படை தகைமை கல்வித் தகைமையாகும்.<br>• கல்வியானது நபரின் ஆளுமை வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் துணை புரியும்.<br>• தொழில் உலகினுள் பிரவேசிக்க கல்வி அடிப்படை தகைமையான போதிலும், தொழில் பயிற்சியைப் பெற்றிருத்தல் முக்கியமானதாகும்.<br>• தமது ஆற்றல்கள் திறமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி தொழில் அனுபவங்களையும் பயிற்சி நெறிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். |

(10 நிமிடங்கள்)

**படி 8.5.2.1.2** :

- வகுப்பு மாணவர்களை குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.5.2.1.2 ஐ குழுக்களுக்கு வழங்கவும்.
- இணைப்பு தொடர்பான பணியில் ஈடுபடுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.5.2.1.3 :**

- மாணவரை தேடியாய்ந்து தகவல்களை முன்வைக்க வாய்ப் பேற்படுத்துங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களை தேடியறியுங்கள்.
- மாணவர்களின் கருத்துக்களின் பலவீனங்கள் பலங்கள் ஆகியவற்றை இனங்கண்டு பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • தொழிலொன்றைத் தேடும் போது தனக்கு ஆற்றல் உள்ளதும் தனக்கு நாட்டமுள்ளதுமான தொழில் துறை பற்றி முதலில் தீர்மானிக்க வேண்டும்.<br>• இதற்கேற்றவாறான தகைமைகளை பாடசாலை காலததினுள் பெற்றக் கொள்ள வேண்டும்.<br>• பயிற்சி பாடநெறியைக் கற்பதன் மூலம் தொழில் வாய்ப்பை பெறல் இலகுவாகின்றது.<br>• பயிற்சி காலத்தின் போது அல்லது பயிலுனராக இருக்கும் போது அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்.<br>• சம்பிரதாய பூர்வமான தொழில்களிலும் பார்க்க புதிய தொழில்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் மூலம் பொருளாதார நன்மை மாத்திரமல்லாது தொழில் திருப்தியும் கிடைக்கும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பயிற்றப்பட்ட ஒரு உழைப்பாளியின் பெறுமதி பற்றி விவரிப்பார்.
- கல்வி தகைமைகளுக்கு மேலதிகமாக தொழில் தகைமைகளை பெற்றுக் கொள்வதன் மூலம் தொழிலைத் தேர்ந்தெடுத்தல் இலகுவாகும் எனக் கூறுவர்.
- தமது தொழில் நட்டத்திற்கேற்ப தாம் கற்க வேண்டிய பாடநெறிக்கான தகைமைகளை அட்டவணைப் படுத்துவார்.
- தொழில் அபிவிருத்தியின் தேவையை விளக்குவார்.
- நவீன உலகினுள் உள்ள புதிய தொழில் வாய்ப்பக்களை தேடியறிவார்.

## இணைப்பு 8.5.2.1.1

அமலன் : சமிர் எவ்வளவு காலமாகவோ நான் வீட்டில் வேலைத்தேடிக் கொண்டிருக்கிறேன். வேலைக்கு விண்ணப்பித்து அலுப்புத்தட்டி விட்டது. ஒரு விண்ணப்பத்திற்காவது நேர் முகப்பரீட்சைக்கு அழைப்பு வரவும் இல்லை.

சமீர் : அமலன் பாடசாலையிலிருந்து விலகிய பின்னர் என்ன செய்தீர்

அமலன் : எதுவும் செய்ய முடியாமற் போய்விட்டது. எனது பரீட்சை பெறுபேறுகள் நன்றாக வந்தனவே.

சமீர் : நான் பாடசாலையிலிருந்து வெளியேறிய பின்னர், முகாமைத்துவ பாடநெறியொன்றைப் பயின்றேன். பின்னர் இரண்டு வருடங்கள் பயிற்சி பெறுவதற்காகநிறுவனங்களில் தொழில் புரிந்தேன். பால இடங்களில் சம்பளம் கிடைக்கவுமில்லை. ஆனாலும் என்னால் தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்ள முடிந்தது.

தற்போது ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறேன். உமக்கு விருப்பமானால் எனது நிறுவனத்தில் சேர்ந்து கொள்ளலாம் அல்லது வேறு நிறுவனங்களுக்க விண்ணப்பிக்க முடியும்.

அமலன் : சரி நான் விண்ணப்பம் ஒன்றைத் தயாரித்துத் தருகிறேன்.

சமீர் : அண்மையில் சந்திப்போமே

***முக்கியம்:*** இச்செயற்பாட்டிலீடுபட முன்னர், தொழில் பயிற்சிகளை காட்டும் பத்திரிகை அறிவித்தல், வர்த்தமானி அறிவித்ல்களை சேகரிக்குமாறு மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.

## இணைப்பு 8.5.2.1.2

**இலங்கையில் பரவலாக உள்ள துறைகள் சில பின்வருமாறு**

01. ஆடைத் தொழிற்சாலை
02. கணினி தகவல் தொழில்நுட்பம்
03. கட்டடங்களும் நிருமாணங்களும்
04. மின் மற்றும் இலத்திரனியல்
05. தொலைபேசி துறை
06. பிளாத்திக் தொடர்பான உற்பத்திகள்
07. வீட்டுத் தளபாடம், அலங்காரப் பொருட்கள்
08. இரத்தினம், தங்க ஆபரணம்
09. விவசாய, உணவு தொழினுட்பம்
10. வர்த்தகங்கள்
11. வங்கி மற்றும் காப்புறுதித்துறை
12. அழகுக்கலை மற்றும் நர்த்தன கலை
13. உணவு தயாரித்தல்

இவற்றுள் உங்கள் குழுவினர் விரும்பும் தொழில்துறை ஒன்றை அல்லது சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, அதற்காக கற்க வேண்டிய பாடநெறி, அவற்றை நடித்தல் நிறுவனங்கள், அதற்காக இருக்க வேண்டிய தகைமைகள், பத்திரிகை அல்லது வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றின் துணையுடன் தேடியறிந்து அட்டவணை மூலம் காட்டுங்கள்.

**தேர்ச்சி 8.5 :** வேலையுலகிற்கு இசைவாக்கமடைவார்.

**தேர்ச்சி மட்டம் :** பயிற்றப்பட்ட தொழிலாளியின் அல்லது உழைப்பாளியின் மதிப்பு பற்றி தேடியாய்வார்.

**செயற்பாடு 8.5.2.2:** ''வாழ்க்கைக்கான புதிய வழிகளைத் தேடுவோம்''

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.5.2.1
- இணைப்பு 8.5.2.2 செயலட்டை
  (செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன்னர், புதிய வேலை வாய்ப்புக்களை காட்டும் பத்திரகை அறிவித்தல்கள், வர்த்தமானி அறிவித்தல்களை தேடிப் பெறுங்கள்)
- எழுதும் தாள்கள்/ பெல்ட் பேனா

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.2.2.1 :**

- இணைப்பு 8.5.2.2.1 இல் உள்ள தலைப்பை சமர்ப்பித்து சிந்தனை கிளர்வுடன் கூடிய கலந்துரையாடலை வழி நடாத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பயிற்றப்படாத உழைப்பாளிக்கு பயிற்சிப்பாடநெறிகள் மூலம் தொழில் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அது பயிற்றப்பட்ட உழைப்பாக மாறும்.<br>• தொழில் பயிற்சி மூலம் வேலையொன்றில் வினைத்திறனையும் பயனுறுதியையும் ஏற்படுத்த முடியும்.<br>• தொழிற் பயிற்சியைப் பெறுவதற்கான பல்வேறு வாய்ப்புக்கள் சுற்றாடலில் உள்ளன.<br>• பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. |

(10 நிமிடங்கள்)

**படி 8.5.2.2.2 :**

- வகுப்பு மாணவர்களை 04 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 8.5.2.2.2 ஐ குழுக்களுக்கு வழங்கவும்.
- பத்திரிகை அறிக்கை, வர்த்தமானி அறிக்கை, வேறு தகவல்கள் ஆகியவற்றை மாணவர்கள் மத்தியில் விநியோகியுங்கள்.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 8.5.2.2.3 :**

- குழு கண்டாய்வுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் தருக.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களைத் தேடியறியுங்கள்.
- முன்வைத்த விடயங்களின் வலிமைகளை வெளிப்படுத்தி குறைபாடுகளை நிவர்த்தி செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • வேலை உலகினுள் இலகுவில் இடம் பிடிக்க பயிற்சி பெறல், பாடநெறிகளை கற்றல் அவசியம்.<br>• அதற்காக பல்வேறு நிறுவனங்கள் உள்ளன.<br>• பாரம்பரிய தொழில்களிலும் பார்க்க கூடிய எண்ணிக்கையான தொழில் துறைகள் இன்று உருவாகி யுள்ளன.<br>• புதிய தொழில்களுக்கு அதிக வெற்றிடங்கள் உள்ளன. வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.<br>• புதிய தொழில்கள் மூலம் அதிக வருவாயைப் பெறலாம்.<br>• கல்வி தகைமையானது தொழில் பெறுவதற்கான அடிப்படை தகைமையான போதிலும் தொழில் பயிற்சி மூலம் தொழிலை தேடிப் பெறுவது இலகுவாகின்றது. |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- புதிய தொழில் துறைகளை கற்றாய்வார்.
- புதிய துறைகளில் ஈடுபடுவதன் மூலம், தொழில்களை எளிதில் தேடிப்பெற முடியும் என்பதை ஏற்பார்.
- புதிய தொழில் துறைகள் அவற்றுக்குத் தேவையான பயிற்சி பாடநெறிகள், நிறுவனங்களை அட்டவணைப் படுத்துவர்.
- தொழிற்பயிற்சியைப் பெறும் தேவைகளை விளங்கிக் கொள்வார்.
- புதிய தொழில் தேவைகளைப் பற்றி ஏனையோரை அறிவுறுத்துவார்.

## இணைப்பு 8.5.2.1.1

- பின்வரும் தலைப்பில் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் கலந்துரையாடலை வழிப்படுத்துங்கள்.
- முயற்சியின் பயனுறுதியையும் வினைத்திறனையும் ஏற்படுத்த தொழில் பயிற்சி தேவையா?
- இவ்வுரையாடலின்போது பின்வரும் விடயங்களை மேலெழச் செய்யுங்கள்.

> - பயிற்சி பெற்ற தொழிலாளியினதும் பயிற்சி பெறாத தொழிலாளியினதும் வேறுபாடுகள்.
> - தொழில் பயிற்சியை பெறுவதற்குரிய வாய்ப்புக்கள்
> - தொழில் பயிற்சிக்குள்ள பாடநெறிகளும் நிறுவனங்களும்

## இணைப்பு 8.5.2.2.2

- பின்வரும் தொனிப்பொருள் அடங்கும் அட்டவணையை 4 குழுக்களுக்கும் விநியோகியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தான் பெற்ற தலைப்பினூடாக புதிய தொழில் வகைகளை பத்திரிகை அறிவித்தல் மூலமும் வேறு தகவல்கள் மூலமும் இனமறிதல்.
- மேற்படி வேலை வாய்ப்புக்களுக்காக பயிற்சி தேவைகள், பாடநெறி வகைகள், தகைமைகள் ஆகியவற்றை எழுதுங்கள்.
- மேற்படி அட்டவணையை பூரணப்படுத்தி அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

## குழு 1

| கணணி தகவல் தொழினுட்பம் தொடர்பான தொழில்கள் | பயிற்சி பெற உள்ள பாடநெறி | தேவையான கல்வித் தேவைகள் |
|---|---|---|
| | | |

## குழு 2

| வெகுசன ஊடகம், வெகுசன தொடர்பாடல் தொடர்பான தொழில்கள் | பயிற்சி பெற உள்ள பாடநெறி | தேவையான கல்வித் தேவைகள் |
|---|---|---|
| | | |

## குழு 3

| புத்தாக்கங்கள் வடிவமைப்புகளுக்கான தொழில்கள் | பயிற்சி பெற உள்ள பாடநெறி | தேவையான கல்வித் தேவைகள் |
|---|---|---|
| | | |

## குழு 4

| வியாபார - விநியோகம் தொடர்பான தொழில்கள் | பயிற்சி பெற உள்ள பாடநெறி | தேவையான கல்வித் தேவைகள் |
|---|---|---|
| | | |

**தேர்ச்சி 8.5** : வேலையுலகிற்கு இசைவாக்கமடைவார்.

**தேர்ச்சி மட்டம்** : பயிற்றப்பட்ட தொழிலாளியின் அல்லது உழைப்பாளியின் மதிப்பு பற்றி தேடியாய்வார்.

**செயற்பாடு 8.5.2.3:** ''பயிற்றப்பட்ட ஊழியமிருந்தால் சிறப்புத் தேர்ச்சி பெறலாம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- பத்திரிகையில் வெளியான வேலை வாய்ப்புக்கள் பற்றிய விளம்பரங்களை உள்ளடக்கிய இணைப்பு 8.5.2.3.1

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.5.2.3.1** :

- வேலைவாய்ப்பு விளம்பர இணைப்பினை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- அதில் உள்ள விடயங்களை வாசிப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வேலை செய்வதில் உள்ள அனுபவம் தொடர்பாக என்ன கருதுகிறீர் என மாணவரிடம் வினவுவதனூடாக பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • நிகழ்காலத்தில் அநேக வேலைவாய்ப்பக்களுக்கு சேவைக்கால அனுபவம் வேண்டப்படுகிறது.<br>• அதனடிப்படையில் பயிற்றப்பட்ட ஊழியத்திற்கு கேள்வியும் உயர் பெறுமதியும் காணப்படுகிறது. |

(10 நிமிடங்கள்)

**படி 8.5.2.2.2** :

- வகுப்பு மாணவர்களை 04 குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும் வேலைவாய்ப்புக்களை 4 மாணவர் குழுக்களுக்கு பிரித்துக் கொடுத்து பயிற்சி பெற்றவர்களால் கிடைக்கும் நன்மைகளையும் பயிற்சி பெறாதவர்களால் கிடைக்கும் இழப்புக்களையும் எழுதிக்காட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  - தச்சுத் தொழில்
  - மின்சார தொழில் நுட்பத் தொழில்
  - வாகன ஓட்டுனர்
  - சங்கீதம் இசைப்பவர்

(10 நிமிடங்கள்)

**படி 8.5.2.2.3** :

- மாணவர்களுக்கு தத்தமது ஆக்கங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • பயிற்றப்பட்ட ஊழியத்தின் மூலம் கிடைக்கும் உற்பத்திகள், சேவைகளின் வினைத்திறன் அதிகம்.<br>• கூடிய சம்பளம் (வேதனம்) கிடைக்கும்.<br>• குறைந்த நேரத்தில் கூடிய உற்பத்தியை வழங்க முடியும்.<br>• தொழில் பயிற்சியினூடாக தொழில் விருப்பை ஏற்படுத்தலாம். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பயிற்றப்பட்ட ஊழியம் என்பதற்கான வரைவிலக்கணத்தை முன்வைப்பார்.
- ஊழியத்தின் மீதான விருப்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் வினைத்திறனான சேவையொன்றை வழங்குவதற்கு அவசியமான பயிற்றப்பட்ட ஊழியம் அவசியம் என்பதை உணர்வார்.
- பயிற்றப்பட்ட ஊழியத்தினால் கிடைக்கக் கூடிய நன்மைகளை எழுதிக்காட்டுவார்.
- தனது தொழிலை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்க அவசியமான கல்வி, தொழில்தகைமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தன்மையை விளங்கிக் கொள்வார்.
- தொழில் தேர்ச்சியினூடாக வினைத்திறனுள்ள சேவையை வழங்குவதற்காக ஆற்ற வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி விமர்சிப்பார்.

**பின்தொடர் வேலை :**

- அனைத்து மாணவர்களும் தான் எதிர்காலத்தில் விரும்பும் தொழில் பற்றிய கட்டுரை ஒன்றை எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அத்தொழிலுக்கு அவசியமான கல்வி, தொழில்சார் தகைமை தொடர்பாக அறிவுரை வழங்குக.
- அத்தொழிலுக்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறுவனங்கள் சிலதைக் குறிப்பிடுங்கள்.
- பயிற்சிக்கான நிறுவனங்கள் பல காணப்படுகின்றன.
  உதா:
  - தொழிற்பயிற்சி நிலையங்கள்.
  - தேசிய பயிலுனர் சபை
  - கெமிதரிய செயற்றிட்டம்
  - விதாதா நிலையம்

- தொழில் நுட்பக்கல்லூரிகள்
- இளைஞர் சேவைச் சங்கங்கள்
- ஹோட்டல் பாடசாலைகள் (Hotel Schools)
- தனியார் தொழில் பாடநெறிகள்
- ஜேர்மன் தொழில் பயிற்சி நிறுவனம்

- தொழில் வகைகளை அடிப்படையாகக் கொண்ட அரச, அரச சார்பற்ற தொழில்சார் பாடநெறிகள் காணப்படுகின்றன.

  உதா:
  - தாதித் தொழிற் பாடசாலை
  - இராணுவ பயிற்சிப் பாடசாலை
  - பாதுகாப்புக் கல்விப்பீடம்
  - விவசாயப் பயிற்சி மத்திய நிலையங்கள்
  - மருத்துவ பீடம்
  - சட்ட பீடம்
  - பட்டயக்கணக்காளர் பயிற்சி நிலையங்கள்.

## இணைப்பு 8.5.2.1.1






## இணைப்பு

# பதவி வெற்றிடங்கள்

கொழும்பு நகரில் உள்ள Plantation Company க்கு

**Sales Promotion Officer**

**Junior Marketing Executive**

**Marketing Executive**

பதவி வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை. கொழும்பில் உள்ளவர்களும் கொழும்பில் வசிக்கக்கூடிய வசதி உள்ளவர்களும் விண்ணப்பிக்கவும். தகைமை குறைந்தது O/L அல்லது A/L CIM மற்றும் Diploma in Marketing கற்றிருப்பின் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

ஆரம்ப சம்பளமாக 10,000/= உம் Insurance அல்லது Finance Company இல் Team Handling இல் அனுபவம் இருப்பின் Car Package வழங்கப்படும்.

**தொடர்பு M.வசந்தன்**

**PH :-0715218508**

---

# UNIVERSITY OF COLOMBO

## Learn English For a Business Environment

### CERTIFICATE IN BUSINESS ENGLISH JULY 2008 (13TH BATCH)

The Course is Designed for those who are interested in improving their competence in English language in order to be more successful in a business environment.

**Modules taught include:**

- Effective communication for business
- Business letter writing
- Telephone etiquette
- Presentations
- Negotiation Skills
- Report Writing
- Skills in conducting and facing interviews

Self-learning material is also available in the self Access Centre

Course Duration: Four Months (60 Hours)

**Classes**

| | Saturday | Sunday |
|---|---|---|
| Batch 1 | 8.00-12.15 | |
| Batch 2 | 1.00-05.15 | |
| Batch 3 | | 8.00-12.15 |

Classes will be allocated on a first come first seved basis

Course Fee: Rs.13,500/-

Application Procedure: 1. Application Fee of Rs.500/- Should be pain to the peoples' bank, thurstan Road Colombo (University Branch) on the prescribed paying-in voucher available at the bank (Application fees will not be accepted by any other branch of the peoples' Bank)

2.Applications Should be Obtained at the English Language Teaching Unit (2nd Floor, New Arts Building, Reid Avenue) , University of Colombo on submitting the bank receipt between 9.00 a.m. and 2.00 p.m. on weekdays.

Classes will be held at two Levels-Preliminary and Intermediate accouding to the proficiency level of the students. A placement test will be held on Saturday July 05th 2008 at 10.00 a.m. in the Old Library Building near the planetarium.

For Further details: Tel No:2506705

Registrar

## வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்
## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
## பகுதி II - குடியுரிமைக்கல்வி

# 8.1 எமது பிரதேசத்தின் பொதுச் சேவைகள்

**தேர்ச்சி:**

மக்கள் வாழ்வின் நலனுக்கான பொதுச் சேவைகளை பயன் உள்ளதாயும், முறையாகவும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:**

- பொதுச் சேவைகளையும் பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் அறிந்து மக்கள் வாழ்வின் நலத்திற்கு அவற்றைப் பயன்படுத்துவார்.
- பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் பொதுச் சேவை தொடர்பான குடிமக்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற முன்வருவார்.
- பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பான உரிமைகள், கடமைகள் தொடர்பாக அறிந்து வேலை செய்வார்.

**பாட உள்ளடக்கம்:**

8.1.1 எமது பிரதேச பொதுச்சேவைகள் பற்றிய அறிமுகம்

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கம், உள்ளூராட்சி நிறுவனங்கள், தொண்டர் தாபனங்கள் வழங்கும் சேவைகளும் பொதுச் சேவைகளும்
    * கல்வி
    * நீர்
    * சுகாதாரம்
    * போக்குவரத்து
    * மின்சாரம்
    * செய்திப்பரிமாற்றம்

- அரசு இலாப நோக்கம் இன்றி பொதுச் சேவைகளை வழங்குகின்றது.
- பொதுமக்களிடமிருந்து அறவிடும் வரிப்பணம் மற்றும் வேறு வகையான வருமானங்களினாலும் பொதுச்சேவைகள் வழங்கப்படுகின்றன.

## பொதுச்சேவைகளின் முக்கியத்துவம்

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவதற்கு பொதுச்சேவைகள் அவசியம்.
- மக்களது வாழ்க்கையின் அன்றாட கருமங்களை இலகுவாகவும், பயனுள்ள வகையிலும் நிறைவேற்றிக் கொள்வதற்கு பொதுச் சேவைகள் அவசியம்.
- தனித்தனியாக ஒவ்வொருவரும் அடைந்து கொள்ள முடியாதவைகளை அடைந்து கொள்வதற்கு பொதுச்சேவைகள் அவசியம்.
- சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொதுச்சேவைகள் அவசியம்.
- அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதனூடாக மனித உரிமைகளைப் பாதுகாக்க சமூகத்திற்கு பகிர்ந்தளித்தல், விற்பனை செய்தல் என்பவற்றுக்காக பொதுச் சேவைகள் அவசியம்.
- பிரதேசங்களுக்கிடையில் இடைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு பொதுச் சேவைகள் அவசியம்.

## பொதுச்சேவைகளின் வளர்ச்சி

- சனத்தொகைப் பெருக்கத்துடன் மனித தேவைகளும் அதிகரித்துச் செல்கின்ற அதேவேளை அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளனர்.
- பிற்காலத்தில் அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான நிறுவனங்கள் உருவாக்கப்பட்டமை. உதாரணமாக நீர்வழங்குதல் போன்ற சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- இலங்கையின் வரலாற்றில் அனுராதபுர காலத்தில் வைத்தியசாலைகள் நிறுவியமை, அவற்றை நிருவகித்தமை, மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கியமை, வைத்திய சேவைகளை முன்னெடுத்துச் சென்றமை போன்ற விடயங்களுக்கு அரசர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

## பொதுச்சேவைகளின் அடிப்படை இயல்புகள்

- சமூகத்தில் உள்ள அனைவருக்கும் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படல்.
- பொதுச் சேவைகளை அனைவரும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்
- பொது நலன் நோக்கில் முன்னெடுத்துச் செல்லப்படல்.
- அனைத்து மக்ளின் வாழ்க்கை முறையில் பண்பு ரீதியாக விருத்தியை ஏற்படுத்தல்
- குறை வருமானம் பெறுவோருக்கு விசேட சலுகைகளை வழங்கல்.
- தனியாள் விருத்தியூடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- பொதுச்சேவையைப் பாதுகாத்தல், அவற்றை கொண்டு நடாத்தல் தொடர்பாக சட்டதிட்டங்கள் காணப்படுதல்.

## பொதுச்சேவை வகைகள்

- கல்வி
- நீர்
- சுகாதாரம்
- மின்சாரம்
- செய்திப்பரிமாற்றம்

## பொதுச்சேவைகள் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள்

| ***பொதுச்சேவை*** | ***பணிகள்*** |
|---|---|
| நீர் | - குடிநீர் வழங்கல்<br>- உணவு சமைத்தல்<br>- துணி துவைத்தல்<br>- சுத்திகரிப்புப் பணிகள்<br>- பல்வேறு தொழில்களுக்கு |
| நீர்ப்பாசனம் | - விவசாய நடவடிக்கைகளுக்கு<br>- நன்னீர் மீன் வளர்ப்பு<br>- வேறு நீர்த்தேவைகளுக்கு |

| | |
|---|---|
| மின்சாரம் | - வீட்டுப் பாவனைக்காக<br>- கைத்தொழில்/ வியாபார நிலையங்களுக்காக<br>- வீதி அலங்காரங்களுக்காக<br>- பல்வேறு சேவைகளுக்காக |
| சுகாதாரம் | - வைத்தியசாலைகளை நிர்வகித்தல்<br>- தொற்று நோய்த் தடுப்பு<br>- சுகாதார நடவடிக்கைகள்<br>- சிகிச்சை அளித்தல்<br>- நோய்த்தடுப்பு நடவடிக்கைகள்<br>- வைத்திய ஆலோசனைகள் வழங்கல் |
| கல்வி | - அனைவருக்கும் கல்வி வழங்கல்<br>- 5 - 14 வயதுக்குட்பட்டவர்களுக்குக் கட்டாயக் கல்வி<br>- தனியாள் சமூக அபிவிருத்தி<br>- நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஊழியப்படையை உருவாக்குதல்.<br>- சமூகத்திற்கான சிறந்த பிரஜைகளை உருவாக்குதல் |
| போக்குவரத்துச் சேவை | - பிரயாணிகள் போக்குவரத்து<br>- பொருள் போக்குவரத்து<br>- பிரதேசங்களுக்கிடையிலான தொடர்புகள் விருத்தியடைதல்.<br>- நாளாந்த நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படல் |
| செய்திப் பரிமாற்றம் | - கருத்துப் பரிமாற்றத்தை இலகுபடுத்தல் (உதா: தபாற் சேவை, கடிதம், தந்திச்சேவை)<br>- இலகுவாகவும் துரிதமாகவும் செய்தி கிடைத்தல் (உதா: தொலைபேசி, மின் அஞ்சல், தொலை நகல்) |

## அரசினால் வழங்கப்படும் வேறு பொதுச் சேவைகள்

- சுற்றாடல் பாதுகாப்பு
  உதாரணம்: காடு வளர்ப்புத் திட்டம்/ பாதுகாக்கப்பட்ட வனங்களை உருவாக்கல், வனவிலங்குகளைப் பாதுகாத்தல் தொடர்பான திட்டங்கள்.

- சமூகப் பாதுகாப்பு
  உதாரணம்: சமுர்த்தி வழங்கல்/ வறுமை நிவாரணம் பெற்றுக் கொடுத்தல் முதியோர் இல்லங்களை நடாத்துதல்.

- வேறு நலன்புரிப் சேவைகளை வழங்கல்

எமது பிரதேசத்தில் பொதுச் சேவைகள் வழங்கும் வேறு அமைப்புகளுடாக வழங்கும் பொதுச் சேவைகள்.

உதாரணம் :- கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்படும் சேவைகள் சில

- நுகர்வுப் பொருள் சந்தைப்படுத்தல்
- கடன் வழங்கும் சங்கம்
- போக்குவரத்துச் சேவை
- இறுதிக் கிரிகைக்கான சேவை

## பொதுச்சேவைகள் தொடர்பான நிறுவனங்களின் பொறுப்புக்களும் கடமைகளும்

| பொதுச்சேவை | செயற்படுத்தும் நிறுவனங்கள் | அந்நிறுவனங்களது கடமைகளும் பொறுப்புக்களும் |
|---|---|---|
| 01. நீர் வழங்கல் | தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, நகர சபை, பிரதேச சபை | • சுத்தமான குடிநீர் விநியோகம்<br>• முறையாக நீர் வழங்கல்.<br>• நீர் விரயமாதலைத் தடுத்தல்<br>• நீர்க்குழாய்த் தொகுதிகளை முறையாகப் பேணல்<br>• மேலதிக சேவைகளை வழங்கல் |
| 02. மின்சாரம் | இலங்கை மின்சார சபை, இலங்கை தனியார் மின்சார கம்பனி | • தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கல்<br>• நுகர்வோர் தேவைகள், முறைப் பாடுகள் தொடர்பாக அவதானம் செலுத்தல்.<br>• மின் கம்பித் தொகுதிகளை முறை யாகப் பேணல். பாதுகாப்பை உறுதிப்படுத்தல் |
| 03. சுகாதாரம் | வைத்தியசாலை | • நோயாளிக்கு உரிய பரிகாரம் மேற்கொள்ளல்.<br>• பாவனைக்குகந்த மருந்துப் பொருட்களை மாத்திரம் வழங்குதல்<br>• தொற்று நோய்களைத் தடுத்தல்.<br>• நோயாளிகளின் உடல், உள சௌக்கியம் தொடர்பாக மிக அவதானத்துடன் செயற்படல்.<br>• நோயாளிகளின் உயிரைப் பாதுகாத்தல்.<br>• அவசியமான வசதிகளை செய்து கொடுத்தல்.<br>• வைத்திய ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கல். |

| பொதுச்சேவை | செயற்படுத்தும் நிறுவனங்கள் | அந்நிறுவனங்களது கடமைகளும் பொறுப்புக்களும் |
|---|---|---|
| 04. கல்வி | பாடசாலை, பல்கலைக் கழகம், பிரிவெனாக்கள், தொழில் நுட்பக்கல்லூரிகள், உயர் தொழிநுட்ப நிறுவனங்கள்,வேறு நிறுவனங்கள் | • மாணவர்களுக்கு உரிய முறையில் கல்வியை வழங்கல்.<br>• மாணவர்களின் தேர்ச்சிகளை மேம் படுத்தல்.<br>• சமூகத்திற்குப் பொருத்தமான பிரஜைகளை உருவாக்கல்.<br>• தேசிய தேவைகளுக்குப் பொருத்தமான ஊழியப்படைகளை உருவாக்கல். |
| 05. போக்குவரத்து | இலங்கை போக்குவரத்து சபை,<br>தனியார் பஸ் கம்பனி,<br>இலங்கை புகையிரத திணைக்களம் | • உரிய பயிற்சி பெற்றவர்களை வேலையில் அமர்த்தல்.<br>• உரிய நேரத்திற்குச் சேவை வழங்கல்.<br>• பயணிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்தல்.<br>• வீதியைப் பயன்படுத்தும் ஏனைய மக்களதும், சொத்துக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.<br>• சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டல்.<br>• சேவைக்குரிய கட்டணத்தை அறவிடல்.<br>• கட்டணத்துக்குரிய பற்றுச்சீட்டை வழங்குதல். |
| 06. செய்திப்பரிமாற்றம் | தபாற் கந்தோர்,<br>டெலிகொம்,<br>வேறு கம்பனிகள் | • உரிய நேரத்தில் கடிதங்களை ஒப்படைத்தல்.<br>• சேவையை முறையாக மேற் கொள்ளல்.<br>• பொது மக்களுடன் சீரிய தொடர்பைப் பேணல்.<br>• அந்தரங்கம் பேணல்.<br>• தொலைபேசி மற்றும் இணைய வசதிகளை வழங்குதல். |

## பொதுச்சேவையைப் பயன்படுத்துவோரின் பொறுப்புக்களும் கடமைகளும்

| பொதுச்சேவை | பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவோர் தொடர்பான பொறுப்புக்களும் கடமைகளும் |
|---|---|
| 01. நீர் | • நீரை வீண்விரம் செய்யாது சிக்கனமாகப் பயன்படுத்தல்.<br>• உரிய நேரத்தில் கட்டணம் செலுத்துதல்.<br>• துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர்த்தல்.<br>• நீரூற்றுக்களையும் நீர்க்குழாய்களையும் பாதுகாத்தல். |
| 02. மின்சாரம் | • உரிய நேரத்தில் கட்டணம் செலுத்துதல்.<br>• மின்சாரம் தொடர்பான சொத்துக்களைப் பாதுகாத்தல்.<br>• துஷ்பிரயோகம் செய்வதைத் தவிர்த்தல்.<br>• முறையான பாவனை. |
| 03. சுகாதாரம் | • வைத்திய ஆலோசனையைப் பின்பற்றல்.<br>• சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைப் பின்பற்றல்.<br>• சுகாதாரம் தொடர்பான சொத்துக்களைப் பாதுகாத்தல். அவற்றை விருத்தி செய்ய உதவுதல். |
| 04. கல்வி | • சிறந்த மனப்பாங்கு, திறன் விருத்தியூடாக நல்ல பிரசைகளை உருவாக்குதல்<br>• கல்வி பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படல்.<br>• பாடசாலை சொத்துக்கள், உபகரணங்களைப் பாதுகாத்தல். (கட்டிடங்கள், கதிரை, மேசை, புத்தகம்)<br>• தனியாள் விருத்தியூடாக சமூக விருத்தியை ஏற்படுத்தல். |
| 05. போக்குவரத்து | • போக்குவரத்து தொடர்பான சொத்துக்களைப் பாதுகாத்தல்.<br>• கட்டணங்களில் நேர்மையாக நடந்து கொள்ளல்.<br>• சட்டத்திற்கு கட்டுப்பட்டு பண்பாக நடந்து கொள்ளல். |
| 06. செய்திப்பரிமாற்றம் | • பண்பாக நடந்து கொள்ளல்.<br>• புத்தி சாதுரியமாக நடந்து கொள்ளல்.<br>• செய்திப் பரிமாற்றம் தொடர்பான சொத்துக்களைப் பாதுகாத்தல்.<br>• தவறாக பயன்படுத்தாதிருத்தல். |

**தேர்ச்சி 8.1** : மக்களின் நல்வாழ்வுக்காக வழங்கப்படும் பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் முறையாகவும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : பொதுச் சேவைகளையும் பொதுச் சேவை வழங்கும் நிறுவனங்களையும் அறிந்து மக்கள் வாழ்வின் நலத்திற்கு அவற்றைப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 8.1.1** : "பொதுச் சேவைகளை இனங்காண்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.1.1.1 இற்கான படம்
- இணைப்பு 8.1.1.2 இற்பான செயற்பாட்டுப்பத்திரம்
- எழுதும் தாள்கள்/ பெல்ட் பேனா

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.1.1** :

- இணைப்பு 8.1.1.1 ற்கான படம் வகுப்பில் முன்வைக்கவும்.
- பொதுச் சேவைகளை இனங்காண மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • சனத்தொகைப் பெருக்கத்துடன் மனித தேவைகளிலும் சிக்கார்ந்தத்தன்மை ஏற்பட்டுள்ளது. |
| • இந்த தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற் பட்டுள்ளமை. |
| • இந்த சவால்களை வெற்றி கொள்வதற்கு பிரதேசத்தில் பல்வேறு பொதுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| • பொது மக்களிடம் அறவிடப்படும் வரிப்பணம் வேறு வருமானங்களுடாக அரசு பொது மக்களுக்கு பொதுச் சேவைகளை வழங்குகின்றன. |
| • இலாப நோக்கமின்றி அரசினால் பொதுச் சேவைகளை வழங்குவதற்கு அரசு கட்டுப்பட்டுள்ளது. |
| • சமூகம் சிக்கலர்ந்த தன்மையடையம் போது பொதுச் சேவைகளின் தேவையும் அதிகரித்துச் செல்கின்றன. உதாரணம் : நீர், மின்சாரம், சுகாதாரம் |

(10 நிமிடங்கள்)

**படி 8.1.1.2 :**

- வகுப்பு மாணவர்களை 06 குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பொதுச் சேவை மூலம் வழங்குங்கள்.
- இணைப்பு 8.1.1.2 விடய பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ளவாறு குழுக்களுக்கு தகவல் சேகரிப்பதற்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 8.1.1.3 :**

- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம், நீர், தகவல் பரிமாற்றம் என்பன அத்தியவசிய பொதுச் சேவைகளாகும்.<br>• பொதுச் சேவைகள் அரசினூடாகவும், தனியார் துறையூடாகவும் வழங்கப்படுகின்றன.<br>• அரசு பொதுச் சேவைகளை இலாப நோக்கமின்றி நலன்புரி நோக்கிலேயே வழங்குகின்றது.<br>• பொது மக்களிடமிருந்து அறவிடப்பட்ட நேரில் வரிப்பணம், வேறு வருமானங்கள் மூலம் அரசு பொதச் சேவையை வழங்குவதற்காக செலவிடுகின்றது.<br>• பொதுச்சேவைகளை வழங்குவதில் பல் நிறுவனங்களும், அதிகாரிகளும் பங்கு கொள்கின்றன.<br>• பொதுச் சேவைகள் வழங்கம் நிறுவனங்களும் அவற்றுடன் தொடர்புபட்ட அதிகாரிகளும் பொறுப்பு டனும் கடமையுணர்வுடனும் செயலாற்ற வேண்டும். |

(20 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**


- பொதுச் சேவைகளை வழங்கம் நிறுவனங்கள் சிலவற்றைப் பெயரிடுங்கள்.
- பொதுச் சேவைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் போற்றுவார்.
- பொதுச் சேவைகளின் பொது இயல்புகளை விளக்குவார்.
- ஆக்கபூர்வமான முறையில் குழுச் செயற்பாடுகளை முன்வைப்பார்.
- பொதுச் சேவை வழங்கும் நிறுவனங்களின் பணிகளை விமர்சிப்பார்.


**பின்தொடர் வேலை :**

- பொதுச் சேவைகளை வழங்கும் வேறு நிறுவனங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க.


## இணைப்பு 8.1.1.1


நீர்


மின்சாரம்


போக்குவரத்து


செய்திப் பரிமாற்றம்



கல்வி


சுகாதாரம்


## இணைப்பு 8.1.1.2

ஒவ்வொரு குழுக்களுக்கும் கிடைத்துள்ள விடய பத்திரத்தின்படி பொதுச் சேவை தொடர்பாக தகவல்களைப் பட்டியற்படுத்துக.


### குழு 1





### குழு 2




**குழு 3**





**குழு 4**




**குழு 5**




**குழு 6**



**தேர்ச்சி 8.1.2** : மக்களின் நல்வாழ்வுக்காக வழங்கப்படும் பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் முறையாகவும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : பொதுச் சேவைகளை பயன்படுத்துவது தொடர்பான உரிமைகள், கடமைகள் பற்றி அறிந்து செயற்படுவார்.

**செயற்பாடு 8.1.2** : ''பொதுச் சேவைகளைப் பாதுகாப்போம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.1.2.1 இற்கான கவிதை வரிகள்
- இணைப்பு 8.1.2.2 இற்கான செயற்பாட்டுப்பத்திரம்
- பாடப்புத்தகம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.2.1** :

- இணைப்பு 8.1.2.1 ற்குரிய கவிதையை மாணவர்களுக்கு படிக்கச் செய்து பின்னர் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.
  1. இந்த கவிதை வரிகள் எதனைக் குறிப்பிடுகிறது.
  2. இதற்கு மேலாக நீங்கள் அனுபவிக்கும் பொதுச் சேவைகள் எவை?
  3. அவற்றைப் பயன்படுத்தும் போது உங்களின் உரிமைகள் கடமைகள் எவை?

  போன்ற வினாக்களுக்கு விடையை மாணவர்களிடமிருந்து பெற்று பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பொதுச் சேவைகளை அனுபவிப்பதற்கு அனைத்து மக்களுக்கும் உரிமை உள்ளது.<br>• தனது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றினாலேயே அவ்வுரிமைகளை அனுபவிக்க முடியும்.<br>• பொதுச் சேவைகளை அனைவரும் பொதுவாக பெற்றுக் கொள்ள வழி செய்ய வேண்டும்.<br>• பொதுச் சேவைகள் சுயநலநோக்கில் இடம் பெறலாகாது. |

(10 நிமிடங்கள்)

**படி 8.1.2.2** :

- வகுப்பு மாணவர்களை 06 குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு இணைப்பு 8.1.2.1 செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பாடுகளுக்கு அவசியமான வழிகாட்டலை வழங்குங்கள்
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்

(10 நிமிடங்கள்)

**படி 8.1.2.3** :

- ஒவ்வொரு குழுக்களுக்கும் வெவ்வேறு செயற்பாடுகள் வகுப்பறையில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுக்களினதும் பலம், பலவீனங்களை இனங் காண்க.
- முக்கிய விடயங்களை குறிப்பெடுத்து கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்குங்கள்.
- கண்டறிந்த பலம், பலவீனங்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

> - பொதுச் சேவைகளைப் பொறுப்புடன் பயன்படுத்துவது எமது கடமையாகும்.
> - பொதுச் சேவைகளை வழங்குவதற்கு அரசு பெருமளவு செலவினை செலவிடுகின்றது.
> - பொதுச் சேவைத்துறைக்கு தீங்கு விளைவிப்பது தண்டிக் கக் கூடிய தவறாகும்.
>   உதாரணம்:
>   - தண்டனை சட்டக் கோவையின்படி பொது நீர் ஊற்று அல்லது நீர்நிலைகளை நாசப்படுத்தலுக்கான தண்டனை - 03 மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கல்
>   - பிரதான வீதிகளில் நாசப்படுத்தும் வகையில் வண்டிகளை ஓட்டல், விலங்குகளை வீதிகளில் விடல். தண்டனை - 06 மாத சிறைத்தண்டனை
>   - குளங்களுக்கு சேதம் விளைவித்தல் நீரை வீண் விரயம் செய்தல். தண்டனை - 5 வருட சிறைத் தண்டனை
> - பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்த்தல். அவற்றைப் பாதுகாப்பது தொடர்பான அறிவுரைகளை வழங்கல்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பொதுச் சேவை பாதுகாப்பு முறைகளை விளக்குவார்.
- பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிப்பது பெரும் குற்றமாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிப்போர் அதிகரித்து விடுபடவும் அவற்றை பாதுகாக்கவும் அறிவுரை வழங்குவார்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்து முறையாகக் கையாள்வார்.
- சுமுகமான முறையில் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவார்.

## இணைப்பு 8.1.2.1

தண்ணி பில்லும் கூடிட்டு
மின்சார பில்லும் கூடிட்டு
அப்பாவுக்கு கோபம் வந்து
எல்லோருக்கும் ஏசினார்

இங்கே பாருங்கோ, விரைவாக வாருங்கோ
நிமல் நன்றாய் கேட்டுக்கொள்ளுங்கோ
நீர், மின்சாரம் சிக்கனமாக பாவியுங்கோ
பழகிக் கொள்ளுங்கள் மனதிற் கொள்ளுங்கள்

(மேற்படி கருத்துக்கள் துலங்கும் வண்ணம் ஆசிரியர்கள் சுயமாகப் பாடலை இயற்றிப் பயன்படுத்தலாம்.)

## இணைப்பு 8.1.2.2

### செயற்பாட்டுப்பத்திரம்

### குழு 1

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படை நீர் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான சுவர்ப்பத்திரிகையொன்று/ படம் ஒன்று/ பாடல்/ கவிதை/ கார்டூன் ஏதாவது ஒன்றை ஆக்குவதாகும்.

### குழு 2

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தல் தொடர்பான சுவர்ப்பத்திரிகையொன்று/ படம் ஒன்று/ பாடல்/ கவிதை/ கார்டூன் ஏதாவது ஒன்றை ஆக்குவதாகும்.

### குழு 3

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படை நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நல்ல சுகாதார பழக்க வழக்கங்களை வலியுறுத்தும் வகையில் சுவர்ப்பத்திரிகையொன்று/ படம் ஒன்று/ பாடல்/ கவிதை/ கார்டூன் ஏதாவது ஒன்றை ஆக்குவதாகும்.

### குழு 4

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படை கல்விச் சேவைகளை வழங்கும் பொது வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான சுவர்ப்பத்திரிகையொன்று/ படம் ஒன்று/ பாடல்/ கவிதை/ கார்டூன் ஏதாவது ஒன்றை ஆக்குவதாகும்.

## குழு 5

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படை உரிய முறையில் தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்தல் தொடர்பான சுவர்ப்பத்திரிகையொன்று/ படம் ஒன்று/ பாடல்/ கவிதை/ கார்டுன் ஏதாவது ஒன்றை ஆக்குவதாகும்.

## குழு 6

உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படை யாதெனில் போக்குவரத்து சேவையுடன் தொடர்பான வளங்களை பாதுபாத்தலை சித்தரிக்கும் சுவர்ப்பத்திரிகையொன்று/ படம் ஒன்று/ பாடல்/ கவிதை/ கார்டுன் ஏதாவது ஒன்றை ஆக்குவதாகும்.

**தேர்ச்சி 8.1.3** : மக்களின் நல்வாழ்வுக்காக வழங்கப்படும் பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் முறையாகவும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பான உரிமைகள், கடமைகள் பற்றி அறிந்து செயற்படுவார்.

**செயற்பாடு 8.1.3** : "பொதுச் சேவைகளைப் பாதுகாப்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.1.3.1 இற்கான படம்/ சுவரொட்டி
- இணைப்பு 8.1.3.2 இற்கான செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.1.3.1** :

- முறையாக பயன்படுத்துதல் முறையற்ற விதத்தில் பயன்படுத்தலுக்குட்பட்ட சில புத்தங்களை வகுப்பறையில் காட்சிப் படுத்துங்கள்.
- அப்புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பாக மாணவர்களின் அபிப்பிரயாயங்களைக் கேட்டறிதல்
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் நோக்கில் அரசு, தனியார் நிறுவனங்கள் மூலம் வழங்கும் சேவைகள் பொதுச் சேவைகள் எனலாம்.
  உதாரணம் : நீர், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்றன
- பொதுச் சேவைகள் வழங்குதல் தொடர்பாக அரசு பெரியளவு செலவினங்களை செய்கின்றது. அந்த பணத்தை மக்களிடமிருந்து அறவிடும் வரிப்பணத்தி னாலும் வேறு வருமானங்களினாலும் அரசு பெற்றுக் கொள்கிறது.
- பொதுச் சேவைகளுக்காகவும் வேறு அத்தியவசியத் தேவைகளுக்காகவும் அரசு பொறுப்பாக இருத்தல்.
- பொதுச் சேவைகளைப் பாதுகாத்தல், எதிர்கால சந்ததி களுக்காக பேணிப்பாதுகாத்தல் என்பது தத்தமது கடமையாகும்.
- அனைத்து தனியாட்களுக்கும் பொதுச் சேவையை அனுபவிக்கும் உரிமை காணப்படுகிறது.

(10 நிமிடங்கள்)

**படி 8.1.3.2** :

- வகுப்பு மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.1.3.1 ற்கான படம், சுவரொட்டி என்பவற்றை வழங்குங்கள்.
- இணைப்பு 8.1.3.2 ற்கான விடயபத்திரத்தை குழுக்களுக்கு வழங்கி அவற்றை அவதானிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 8.1.3.3** :

- அவதானித்த விடயங்களை முன்வைப்பதற்கு மாணவர் குழுக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

- தண்டச் சட்டக் கோவையின்படி பொதுச் சேவைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.
  உதாரணம் :
  1. உறுப்புரை 270 இன் படி: பொதுக் கிணறு அல்லது நீர் நிலைகளை அசுத்தப்படுத்தல்.
     தண்டனை: 03 மாதம் சிறைத்தண்டனை
  2. உறுப்புரை 272 இன்படி: பொது வீதியில் காதுகாப்பற்ற முறையில் வாகனம் செழுத்துதல், விலங்ககளை மோதுதல்.
     தண்டனை: 06 மாத சிறைத்தண்டனை
  3. உறுப்புரை 413 இன்படி: நீர்ப்பாசன முறைகளுக்கு தீங்கு விளைவித்தல் அல்லது கால்வாயை திசை திருப்பல்.
     தண்டனை: 05 வருட சிறைத்தண்டனை
  4. உறுப்புரை 261 இன்படி: பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் விதத்தில் அல்லது அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதத்தில் குப்பை கூலங்கைள இடுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
     தண்டனை: 05 வருட சிறைத்தண்டனை
- பொதுச் சேவைகளிலிருந்து பயன்பெறுவது ஒருவரின் உரிமையாகும். அதனை முறையாகப் பயன்படுத்துவது அவரது கடமையும் பொறுப்புமாகும்.
- பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிப்போர் அதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் உள்ள கடமைகள்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பொதுச் சேவைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சந்தர்ப் பங்களை குறிப்பிடுவார்.
- பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிப்பது தவறாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிப்போர் அதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கம் அவற்றைப் பாதுகாப்பதற்கும் கடைபிடிக்கப்படும் வழிமுறைகளை எழுதிக் காட்டுவார்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்து பொருளுள் வகையில் பயன்படுத்துவார்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க தனது அயற் சமுதாயத்துடன் இணைந்து செயற்படுவார்.

## இணைப்பு 8.1.3.1

- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு வரைப்படச்சித்திரம், சுவரேடு என்பவற்றை வழங்குங்கள்.
  1. நீர்க்கால்வாய்களுக்கு தீங்கு ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்.
  2. பொது நீர்த்தேக்கங்கள், நீர் ஊற்றுக்கள் என்பவற்றை உதாசீனம் செய்யும் சந்தர்ப்பங்கள்.
  3. கழிவு நீர் வடிகால்களை நாசப்படுத்தும் சந்தர்ப்பங்கள்
  4. முறையற்ற விதத்தில் குப்பை கூழங்களை அகற்றும் சந்தர்ப்பங்கள்.

## இணைப்பு 8.1.3.2

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள சித்திரம், சுவரேடு என்பவற்றைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை காணும் நோக்கில் கலந்துரையாடி அறிக்கை யொன்றை சமர்ப்பிக்கவும்.
  1. படத்தில் காட்டப்பட்டுள்ளபடி அங்கு காணப்படும் தீங்கு என்ன?
  2. அது போன்ற தீங்கு ஏற்படுத்தப்படுவதால் மனித உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களை எழுதுங்கள்.
  3. அவற்றைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமறைகள் எவை?
  4. அவை பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் யாது?

# 8.2 ஜனநாயக மக்கள் சமூகம்

**தேர்ச்சி:**

ஜனநாயக வாழ்க்கை முறையின்மூலம் சீரான சமூகத்திற்கு பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம்:**

- ஜனநாயக ரீதியான வாழ்க்கை முறையின் பண்புகளை பகுப்பாய்ந்து உபயோகிப்பார்.
- தனது குடும்பம், மற்றும் குடும்பத்தினுள் காணப்படுகின்ற ஜனநாயக ரீதியான பண்புகளுக்கு இயைபாக்கமடைவார்.
- சிறுவர் உரிமைகள், கடமைகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.
- ஜனநாயக ரீதியான வாழ்க்கைக்கான தனது தயார் நிலையை வெளிப்படுத்துவார்.

**பாட உள்ளடக்கம்:**

8.2.1 ஜனநாயக வாழ்க்கையை அறிமுகஞ் செய்தல்.

- மக்கள் அபிலாசைகளுக்கு ஏற்பத் தொழிற்படும் வாழ்க்கை முறை
- சுதந்திரமும் சமத்துவமும் பற்றிய எண்ணக்கருவை முதன்மையாகக் கொண்டு செயற்படுத்தும் வாழ்க்கை முறையை ஜனநாயக வாழ்க்கை முறை என்பர்
- ஜனநாயக வாழ்க்கை முறையின் பண்புகள்
  உதா: அந்நியோன்னிய ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- சரியான கருத்துக்கு மதிப்பளித்தல்
- வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமளித்தல்
- கலந்துலையாடல் மூலம் முடிவுக்கு வரல்
- சுய கட்டுப்பாட்டுடன் செயற்படல்
- ஒளிவு மறைவின்றிச் செயற்படல்

**சிறுவர் உரிமையும் அவரால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளும்**

உதா: தனக்கு, குடும்பத்துக்கு, பாடசாலைக்கு, சமூகத்திற்கு நிறைவேற்றப்பட வேண்டிய கிடைக்கக் கூடிய கடமைகளும் உரிமைகளும்.

**சிறுவர் உரிமைகள்**

பாதுகாப்புப் பெறுவதற்கு உள்ள உரிமை.

- துன்புறுத்தல்கள், இம்சைகளிலிருந்து விடுபடுவதற்குள்ள உரிமை
- சிறுவர்களின் உழைப்பை முறையற்ற விதமாக மதிப்பதன் பயன்படுத்துவதைத் தடுக்கும் உரிமை
- தக்க பாதுகாப்பை பெறுவதற்குள்ள உரிமை
- துஷ்பிரயோகத்திற்கும் பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகாதிருப்பதற்குள்ள உரிமை

பங்கேற்பதற்கு உள்ள உரிமை.

- சுயாதீனமாக கருத்தறிவிக்கும் உரிமை
- நற்புரிமை பாராட்டுவதற்குள்ள உரிமை
- சங்கங்கள், சமூகங்களுக்கு அங்கத்துவம் பெறுவதற்குள்ள உரிமை

அபிவிருத்தியடைய உள்ள உரிமை.

- விளையாட்டு, ஓய்வு, விநியோகங்களிலீடுபடுதவற்குள்ள உரிமை
- கல்வி பெறுவதற்குள்ள உரிமை

வாழ்வதற்கு உள்ள உரிமை.

- சுகாதார வசதிகளைப் பெறுவதற்குள்ள உரிமை
- வாழ்வதற்குள்ள உரிமை
- சமய சுதந்திரம்
- ஏனையோரின் சுதந்திரத்திற்கு தடை ஏற்படுத்தாமை
- சட்டத்தை மதித்தலும், சட்டத்திற்க கட்டுப்பட்டு நடத்தலும்
- தமது உரிமைகளையிட்டும் அக்கறை செலுத்துதல்

**தமது குடும்பங்களிலும் பாடசாலையிலும் காணக்கூடிய ஜனநாயகப் பண்புகள்**

குடும்பத்தினுள் காணப்படுகின்ற ஜனநாயகப் பண்புகள்

- அன்பும், பாதுகாப்பும் நியாயமாகக் கிடைத்தல்
- கலந்துரையாடி முடிவுகளுக்கு வரல்.
- சமாதானமாக பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல்
- ஒற்றுமையாக வீட்டு வேலைகளில் பங்கேற்றல்
- சமத்துவம்
- மூத்தோரை மீறாமை
- பெற்றோர், மூத்தோர் தலைமைத்துவம் ஆகியவற்றை மதித்தல்
- தமது உரிமைகளைப் பேணியபடி கடமைகளை நிறைவேற்றல்

பாடசாலையினுள் காணப்படுகின்ற ஜனநாயகப் பண்புகள்

- பாடசாலையினுள் நிலவும், சட்ட திட்டங்களையும் சம்பிரதாயங்களையும் ஏற்றுக் கொண்டு பாதுகாத்தல்.
- ஏனையோரின் கருத்தை மதித்தல்
- பெரும்பான்மையோரின் கருத்தை மதித்தல்
- கல்வி நடவடிக்கைகளில் சுயாதீனமாகவும் நியாயமாகவும் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்தல்
- பாதுகாப்பும் புகலிடமும் வழங்கல்
- வெற்றி தோல்வியைச் சமமாக ஏற்றுக் கொள்ளல்
- கலந்துரையாடல் மூலம் சரியான முடிவுக்கு வருதல்
- போரடுபவராக முரண்பாடுகளைத் தீர்ப்பதிலீடுபடல்
- சங்கங்கள், நிறுவனங்கள் போன்றவற்றில் நியாயமான முறையில் பதவிகளைப் பெறல்.
- சுயாதீனமாக கருத்தறிவித்தலும், வாக்களித்தலும்.
- நூல் நிலைய, விளையாட்டு, வேறு வசதிகளை நியாய பூர்வமாகப் பெறல்

## பிள்ளைகளினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்

- ஏனையோரை துன்புறுத்தாதிருத்தல்.
- பெற்றோருக்கும் மூத்தோருக்கும் உதவுதல்.
- திடீர் அனர்த்தங்களின் போது ஏனையோருக்கு உதவுதல்.

## பங்கேற்றலுடன் தொடர்புடைய கடமைகள்

- ஏனையோருக்கு இடையூறு ஏற்படாதவாறு கருத்து வெளியிடல்.
- வயதுக்கேற்ற நண்பர்களை புத்திசாதுரியமாகத் தேர்ந்தெடுத்தல்.
- ஏமாற்றுதல், களவெடுத்தல், குற்றச் செயல்கள் போன்றவற்றை தவிர்த்தல்.
- தமக்குப் பொருத்தமான வேலைகளிலீடுபடல்.

## அபிவிருத்தியுடன் தொடர்புடைய கடமைகள்

- கல்வி நடவடிக்கைகளுக்கு தடையேற்படாதவாறு விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடல்
- தக்கவாறு கல்வி பெறல்
- சமூகத்தின் அபிவிருத்தியில் பங்கேற்றல்

## நிலவுகையுடன் தொடர்புடைய கடமைகள்

- நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றல்
- ஏனையோரின் வாழ்க்கையைப் பேணல்
- சமய சகவாழ்வு
- ஏனையோருக்கு அன்பும் நேசமும் காட்டுதல்

**தேர்ச்சி 8.2** : ஜனநாயக வாழ்க்கை முறையினூடாகச் சிறந்த சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : ஜனநாயக வாழ்க்கை முறையின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்து பயன்படுத்துவார்.

**செயற்பாடு 8.2.1** : ''ஜனநாயக வாழ்க்கை முறையை அறிந்து கொள்வோம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.2.1.1 பிரவேசத்திற்கானது
- இணைப்பு 8.2.1.2 இற்கான செயற்பாட்டுப்பத்திரம்
- டிமைப்பேப்பர்
- பாட நூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.1.1** :

- இணைப்பு 8.2.1.1 பிரவேசத்திற்கான வெளியீட்டை வகுப்பறையில் முன்வைத்து டிமை பேப்பரில் எழுதுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள். பின்வரும் வினாக்களை மாணவர்களிடம் முன்வையுங்கள்.
- இதில் வெளிப்படுத்தப்படும் சமூகம் எவ்வாறானது?
- இவ்வாறான சமூகமொன்றை எவ்வாறு கட்டியெழுப்பலாம்? போன்ற வினாக்களுக்கு பெறப்பட்ட விடைகளின்படி சிறிய கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்

> - ஒரு நாட்டில் அல்லது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் கூட்டாக வாழும் மக்கள் கூட்டத்தை ஒரு சமூகம் எனலாம்.
> - மக்கள் சமூகமொன்றுடன் இணைந்து செயற்படும் போது சுமுகமான முறையில் வேலைகளை செய்ய வேண்டியுள்ளது.
> - சுமுகமான முறையில் வேலையிலீடுபடும் பொழுது ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல் வேண்டும்.
> - மேலும் அந்நியோன்யமாக, பொறுமையுடன் சரிசமமாக வேலையிலீடுபடல் வேண்டும்.
> - அவற்றினூடாக ஜனநாயகப் பண்புடன் கூடிய வாழ்க்கை முறையொன்றை கட்டியெழுப்ப வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 8.2.1.2** :

- வகுப்பு மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.1.2 விடயப்பத்திரம் என்பவற்றை வழங்குங்கள்.
- செயற்பாடுகளிலீடுபட மாணவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்யுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.2.1.3** :

- குழு வேலைகளை வகுப்பறையில் முன்வைக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு முன்வைக்கும் விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்க மிகுதிக் குழுக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • நற்பண்புகள் நிறைந்த சிறந்த மக்கள் கூட்டத்தினர் ஜனநாயக பண்புள்ள சமூகமாகும்.<br>• அவ்வாறான சமூகமொன்றில் தனது விருப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதனூடாக ஏனையவர்களுக்கு இடையூறின்றி செயற்பாடுகளிலீடுபட்டு ஜனநாயக வாழ்க்கைக் கோலத்தை கட்டியெழுப்பலாம்.<br>• பரஸ்பர ஒத்துழைப்பு, பெரும்பான்மை கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், சுதந்திரம், சமத்துவம், கலந்துரையாடல் மூலம் உள நெருக்கிடைகளுக்கு தீர்வு இரண்டு ஜனநாயக வாழ்க்கை முறையை கட்டியெழுப்பலாம். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஜனநாயக வாழ்க்கை முறையை விளக்குவார்.
- ஜனநாயக முறையிலான வாழ்வை மதிப்பார்.
- ஜனநாயக வாழ்க்கை முறை ஒன்றின் பண்புகளை எழுதிக் காட்டுவார்.
- சுமூகமாக வேலை செய்வதால் கூட்டாகச் சேர்ந்து செயலாற்றும் திறனை வளர்த்துக் கொள்வார்.
- ஜனநாயக பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.

## இணைப்பு 8.2.1.1

### பிரவேசக் கூற்று

சமூகம் என்பது மக்களாவார். சிறந்த பிரஜையாக சமுகத்தில் வாழும் போது தாம் நினைத்த மாதிரி தனித்து வாழ முடியாது. பெரும்பான்மை சமுக அமைப்பினுள் ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்து பொறுமையுடனும் சமத்துவத்துடனும் செயலாற்றுவதன் மூலம் முரண்பாட்டு சந்தர்ப்பங்களைக் குறைத்துக் கொள்ளலாம். அவற்றினூடாக நற்பண்புடைய நற்பிரஜைகளை விருத்தி செய்து சமூகத்தினுள் ஜனநாயக வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்புலாம்.

## இணைப்பு 8.2.1.2

### செயற்பாட்டுப்பத்திரம்

- ஜனநாயக வாழ்க்கை முறை என்பது என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குவார்.
- ஜனநாயக வாழ்க்கை முறையின் பண்புகளை பட்டியல் படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.2** : ஜனநாயக வாழ்க்கை முறையினூடாக சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : தனது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படுகின்ற ஜனநாயக பண்புகளுக்கு இயைபாக்கமடைவார்.

**செயற்பாடு 8.2.2** : ''தமது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் ஜனநாயகப் பண்புகளை இனங்காண்போம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.2.2.1 குடும்பத்தில் ஒத்துழைப்புடன் செயற்படும் சந்தர்ப்பங்களைக் காட்டும் சித்திரம்
- இணைப்பு 8.2.2.2 பாடசாலையினுள் பல்வேறு பணிகளில் ஈடுபடும் சந்தரப்பங்களை காட்டும் சித்திரம்
- இணைப்பு 8.2.2.3 வேலைப்படிவம்
- டிமைத்தாள்
- பெல்ட் பேனாக்கள்
- பாட நூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.2.1** :

- இணைப்பு 8.2.2.1 இல் குறிப்பிடும் சித்திரமும் 8.2.2.2 இணைப்பில் காட்டப்படும் சித்திரமும் மாணவருக்கு காட்சிப்படுத்துங்கள்.
- படத்தை நன்கு அவதானிக்க வாய்ப்பு வழங்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரத்தக்க வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்

| |
|---|
| • சமூகத்தின் மிகச் சிறிய அலக குடும்பமாகும் என.<br>• குடும்ப அங்கத்தவர்களுக்கென பல்வேறு பணிகள் உள்ளதென.<br>• எல்லா குடும்ப அங்கத்தவர்களதும் துடிதுடிப்பான பங்களிப்பு கிடைக்க வேண்டுமென.<br>• ஒற்றுமையாகவும், நட்புறவாகவும், பரஸ்பர புரிந்துணர்வு டனும் தமது வேலைகளை நிறைவேற்ற வேண்டுமென.<br>• குடும்ப வேலைகளை நிறைவேற்றும் போது உறவினரின் கருத்துக்கு மதிப்பளித்தல், பல்வேறு கருத்துக்களையும் சகித்துக் கொள்ளல், நியாயமாக பகிர்ந்து கொள்ளல், கலந்துரையாடல் மூலம் முடிவுகளுக்கு வரல் போன்ற ஜனநாயக பண்புகள் குடும்பத்தினுள் காணப்படுமென.<br>• குடும்பத்தினுள் மாத்திரமல்லாமல் பாடசாலையினுள் ளும் அவ்வாறான ஜனநாயக பண்புள் காணப்படு கின்றன என.<br>• சுந்திரம் சமத்துவம், வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளல், சட்டத்திற்கு கட்டுப்படல், தலைவருக்கு கட்டுப்படல் போன்ற ஜனநாயக பண்புகள் பாடசாலையினுள் உள்ளதென. |

(15 நிமிடங்கள்)

**படி 8.2.2.2** :

- வகுப்பு மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.2.3 இல்தரப்பட்டுள்ள வேலைப்பத்திரம் என்பவற்றை வழங்குங்கள்.
- செயற்பாடுகளிலீடுபட மாணவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்யுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 8.2.2.3** :

- குழு வேலைகளை வகுப்பறையில் முன்வைக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சமர்ப்பித்த தகவல்களில் காணப்படுகின்ற பொதுவான விடயங்கள் பற்றி மாணவரிடம் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.


| |
|---|
| • குடும்பத்தினுள் போன்றே பாடசாலையிலும் பெரும்பாலான பணிகளை ஒற்றுமையாக நிறைவேற்ற வேண்டும் என.<br>• கூட்டாக செயற்படும் போது ஜனநாயகப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என.<br>• நல்ல பழக்க வழங்ககங்களையும், பண்புகளையும் கொண்டிருக்கும் நபர்கள் மூலமாக ஜனநாயக வாழ்க்கை முறையை கட்டியெழுப்ப முடியும்.<br>• ஜனநாயக வாழ்க்கை மூலம் நல்ல சமுகமொன்றை உருவாக்கலாம் என. |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- குடும்பம் பாடசாலை ஆகியவற்றினுள் காணப்படுகின்ற ஜனநாயக பண்புகளை பெயரிடுவார்.
- குடும்பத்தினுள்ளும் பாடசாலையினுள்ளும் ஜனநாயக ரீதியாக செயற்பட வேண்டும் என ஏற்றுக் கொள்வார்.
- குடும்பத்தினுள்ளும் பாடசாலைலையினுள்ளும் காணப்படுகின்ற ஜனநாயக பண்புகளை தனித்தனியாக எழுதுவார்.
- குடும்பத்தினுள் போன்றே பாடசாலையினுள்ளும் ஜனநாயக முறையில் செயற்படுவதில் பங்களிப்பார்.
- குடும்பத்தினுள்ளும் பாடசாலையினுள்ளும் ஜனநாயக ரீதியாக துணிவாக செயற்படுவார்.

**இணைப்பு 8.2.2.1**




## இணைப்பு 8.2.2.2











## இணைப்பு 8.2.2.3

## வேலைப்படிவம்

### *குழு 1*

குடும்பத்தினுள் காணப்படுகின்ற ஜனநாயக ரீதியான பண்புகளை மேலெழக் கூடியவாறு பாகமேற்று நடிக்கப் பொருத்தமான சம்பாஷணையொன்றை வடிவமைக்க உங்கள் குழுவுக்கு பொறுப்புத்தரப்பட்டுள்ளது.

### *குழு 2*

குடும்பத்தினுள் காணப்படுகின்ற ஜனநாயக ரீதியான பண்புகள் அடங்கும் படிவமென்றைத் தயாரிக்க உங்கள் குழுவுக்கு பொறுப்புத்தரப்பட்டுள்ளது.

### *குழு 3*

பாடசாலையில் காணப்படுகின்ற ஜனநாயக ரீதியான பண்புகள் அடங்கும் படி கையேடு தயாரிக்க உங்கள் குழுவுக்கு பொறுப்புத்தரப்பட்டுள்ளது.

### *குழு 4*

பாடசாலையில் காணப்படுகின்ற ஜனநாயக ரீதியாக நடந்து கொள்வதனால் நீர் அடையும் நன்மைகளை சுருக்கமாக விவரிக்க உங்கள் குழுவுக்கு பொறுப்புத்தரப்பட்டுள்ளது.

### *குழு 5*

''ஜனநாயக ரீதியில் வாழ்ந்து குடும்ப முன்னேற்றத்திற்கு ஏதுவாகும் விதம்'' எனும் தலைப்பில் பேச்சொன்றைத் தயாரித்து வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

**தேர்ச்சி 8.2** : ஜனநாயக வாழ்க்கை முறையினூடாகச் சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : சிறுவர் உரிமைகளதும் கடமைகளும் பற்றிய விளக்கத்துடன் செயலாற்றுவார்.

**செயற்பாடு 8.2.3** : "சிறுவர் உரிமைகளையும் கடமைகளையும் இனங்காண்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.2.3.1 வரைபடம்
- இணைப்பு 8.2.3.2 சிறுவர் உரிமைகளையும் அவர்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளையும் காட்டும் வரைபடம்
- இணைப்பு 8.2.3.3 செயற்பாட்டுப்பத்திரம்
- பாட நூல்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.2.3.1** :

- இணைப்பு 8.2.3.1 வரைபடத்தை மாணவருக்கு காட்சிப்படுத்துங்கள்.
- அதனை அவதானிக்க வாய்ப்பு வழங்குக.
- படத்தில் காட்டப்படுகின்ற மாணவன் கூறுவது பற்றி கருத்துக் கூறுங்கள்.
- மாணவரின் கருத்து பற்றி கவனம் செலுத்தி பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரத்தக்க வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்

| |
|---|
| • பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு பெற்றோரின் பொறுப்பாகும்.<br>• பிள்ளைகள் கௌரவமாக வாழத் தேவையான சூழலை உருவாக்குவது பெற்றோரினால் ஆற்றப்படவேண்டிய பணியாகும்.<br>• அவற்றிற்கேற்ப பிள்ளைகள் பல்வேறு சிரமங்களுக்கும் முகங்கொடுக்க நேரிடும்.<br>• நிறுவர்களின் சிறு பருவத்தை பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் கழிக்க ஐக்கிய நாடுகளின் சங்கம் சிறுவர் உரிமைகள் பற்றி சாசனமொன்றை தயாரித்து வெளியிட்டுள்ளது.<br>• சிறுவர் ஒருவருக்கு உரிமையானதும் மேற்படி உரிமைகளுக்கா அவர் தமது கடமைகள் நிறைவேற்றப் பட வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**படி 8.2.3.2 :**

- வகுப்பு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.2.3.2 இல் தரப்பட்டுள்ள குறிப்பும் இணைப்பு 8.2.3.3 இலுள்ள வேலைப்பத்திரம் என்பவற்றை வழங்குங்கள்.
- செயற்பாடுகளிலீடுபட மாணவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்யுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.2.3.3 :**

- தகவல் படிவங்களை வகுப்பறையில் முன்வைக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் கருத்துக்களில் காணப்படுகின்ற பலவீனங்கள் வலிமைகள் பற்றிய கருத்துக்கள் சமர்ப்பியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • ஆகக் கூடியளவு கண்ணியமாக வாழ பிள்ளைகளுக்கு வழி காட்டும் நிபந்தனைத் தொகுதி உரிமைகளாகும்.<br>• சாதி சமயம், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி உரிமைகள் அனுபவிக்க வாய்ப்பு வழங்க வேண்டும்.<br>• எல்லாச் சிறார்களையும் நமத்துவமாக நடாத்த வேண்டும்.<br>• சிறுவர் உரிமை சாசனத்தின்படி எல்லாச் சிறார்களுக்கும் உயிர் வாழவும், அபிவிருத்தியடையவும் பாதுகாப்பு பெறவும் பங்க பற்றவும் உரிமை உள்ளதென.<br>• உரிமைகளை அனுபவித்தவாறு கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம், சமுகத்திற்கு பயனுறுதியுள்ள பிரசைகளை உருவாக்க முடியும். |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**


- சிறுவர் உரிமைகளையும் கடமைகளையும் விவரிப்பார்.
- சிறுவர் உரிமைகளுடாக சிறார்களுக்கு கண்ணியமாக வாழ வழியேற்படுத்த வேண்டும் என ஏற்றுக் கொள்வார்.
- சிறுவர் உரிமைகளையம் கடமைகளையும் அட்டவணைப்படுத்துவார்.
- சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு பங்களிக்கக் கூடியவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்.

## இணைப்பு 8.2.3.1


கட்டாயப்பாடசாலை கல்வி எனக்கு கிடைக்கவில்லை
வயிறு நிறைய எனக்கு உணவு கிடைப்பதில்லை
பெற்றோரின் அன்பை அனுபவிக்க எனக்கு வாய்ப்பில்லை
நண்பர்களுடன் விளையாட எனக்கு உரிமையில்லை
அன்புக் கருணையும் எனக்குக் கிடைப்பதில்லை

## இணைப்பு 8.2.3.2

## சிறுவர் என்ற முறையில் உமக்கு உரிமையாகும் உரிமைகளும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும்



## இணைப்பு 8.2.3.3

# செயற்பாட்டுப்பத்திரம்

### *குழு 1*

சிறுவர் என்ற வகையில் உமக்குரித்தாகும் உரிமைகளும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பற்றி அட்டவணைப்படுத்த உமது குழுவிற்கு தரப்படும் செயற்பாடாகும்.

### *குழு 2*

பாடசாலை அபிவிருத்திக்காக நீர் ஆற்ற வேண்டிய கடமைகளின் பட்டியலை தயாரிக்க உமது குழுவின் செயற்பாடு வழங்கப்படும்.

### *குழு 3*

பிரசையென்ற வகையில் உமது குற்றாகும் கடமைகளும் உரிமைகளும் பற்றிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அதனுதவியுடன் கடமைகளையும் உரிமைகளையும் வேறுப்படுத்திக் காட்டுக.

- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- பொதுச் சொத்துக்களை கையாளல்.
- பெற்றோரின் அரவணைப்பைப் பெறல்.
- பெற்றோரை மதித்தல்.
- நற் சுகாதார பழக்கங்களை பின்பற்றல்.
- கல்வி கற்பதற்குள்ள உரிமை.
- கல்வி பெறல்.
- சமூக சேவைகளில் பங்கு பற்ற பங்களிப்பு வழங்கல்.
- ஆதரவற்றோரை அலட்சியப்படுத்தாதிருத்தல்.
- தொழிலிலீடுபட வாய்ப்பிருத்தல்.
- சட்ட விரோத தொழிலிலீடுபடாதிருத்தல்.
- தக்கவாறு ஊட்டத்தையும் வயிறாற உணவையும் பெறல்.
- ஓய்வை பயன்படுத்தும் சுதந்திரம்.
- உடல் மற்றும் உளரீதியான அபிவிருத்திக்காக வசதிகளைப் பெறல்.
- அன்பையும் ஆதரவையும் பெறல்.
- ஏனையோரின் சுதந்திரத்திற்கு தடையேற்படுத்தாதிருத்தல்.

| ***கடமைகள்*** | ***உரிமைகள்*** |
|---|---|
| | |

### *குழு 4*

சமூகத்தின் சீரான நிலவுகைக்கு ஜனநாயக ரீதியிலான வாழ்க்கை முறை ஏதுவாகும் விதத்தைப் பற்றி சுருக்கமான விளக்கமொன்றை வழங்க உமது குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

# 8.3 பல்கலாசார சமூகம்

## தேர்ச்சி:

பல்கலாசார சமூகமொன்றில் சிறந்த பிரசையாக வாழ்வார்.

## தேர்ச்சி மட்டம்:

8.3.1 பல்கலாசார சமூகமொன்றின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்வார்.
8.3.2 கலாசாரப் பல்வகைமைக்குள் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் கருமமாற்றுவார்.
8.3.3 கலாசாரப் பல்வகைமையானது அபிவிருத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் மாற்றத்தைத் தேடியறிவார்.

## பாட உள்ளடக்கம்:

- பல்கலாசார மக்கட் சமூகம் - அறிமுகம்
    * ஒரு சமூகத்தில் இன, சமய, மொழி, கலை, நிற, பிரதேச, நம்பிக்கைகள் என்றவாறாக பல்வகையையுடைய கலாசாரங்களை உள்ளடக்கிய ஒரு சமூகமே பல்பண்பாட்டுச் சமூகமாகும் எனலாம்.

- பல் கலாசார மக்கட் சமூகத்தின் இயல்புகள்
    * வெவ்வேறு மக்கட் பிரிவினர் வாழ்தல்
      உதா: இலங்கையில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர், பரங்கியர் போன்ற மக்கட் பிரிவினர்.
    * வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றும் மக்கள் இருத்தல்
      உதா: இலங்கையில் இந்து, கத்தோலிக்கம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற சமசங்களைப் பின்பற்றுவோர் காணப்படும்.
    * பல்வேறு மொழிகளைப் பேசுவோர் இருத்தல்
      உதா: இலங்கையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலே போன்ற மொழிகளைப் பேசுவோர் இருத்தல்.
    * பல்வேறு பழக்க வழக்கங்கள் கணப்படல்
      உதா:
        - பௌத்த பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள்
        - இந்து பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள்
        - இஸ்லாம் பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள்
        - கிறிஸ்தவ பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள்
        - பிரதேச ரீதியில் காணப்படும் பழக்க வழக்கங்கள்
        - பல்வேறு மக்கட் பிரிவினர் தொடர்பான பழக்க வழக்கங்கள்

## இலங்கையின் கலாசாரப்பல்வகைமை

மொழிகள்
- தமிழ்
- சிங்களம்
- மலே
- ஆங்கிலம்
- அரபு

சமயங்கள்
- இந்து
- கத்தோலிக்கம் அல்லது கிறிஸ்தவம்
- இஸ்லாம்
- பௌத்தம்
- ஏனையவை

- மொழிகள், சமயங்கள், மக்கட் பிரிவினர் பின்பற்றும் பழக்க வழங்க்கங்கள், பாரம்பரியங்களுக்கு அமைய கலாசாரப் பல்வகைமை உருவாகும்.
- பல்வகைமையுள் ஒற்றுமையாக ஒத்துழைத்து வாழ்தல்
  - நாட்டின் அபிவிருத்தியில் சகல மக்கட் பிரிவினரும் பங்குபற்றல்
  - ஒரே பிரதேசத்தில் வெவ்வேறு மக்கட் பரிவினர்கள் ஒற்றுமையாக ஒத்துழைத்து வாழ்தல்
  - வெவ்வேறு பண்பலாடுகளை ஏற்றுக் கொள்ளும் மக்கட் பிரிவருக்கு இடையே திருமண பந்தங்கள் ஏற்படுதல்.
  - இயற்கை அனர்த்தங்களின் போது பரஸ்பரம் உதவி ஒத்தாசை புரிதல்.
  - சமய முக்கியத்துவமுடைய சில இடங்களுக்கு வெவ்வேறு கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் செல்லல்.
    உதாரணம்: கதிர்காமம், சிவனொளிபாதமலை
- பாடல் இயற்றல், பாடுதல் உட்பட ஏனைய அழகியற் பணிகளில் வெவ்வேறு பண்பாடுகளைச் சேர்த்தவர்கள் வேறுபாடுகளின்றி பங்குபற்றல்.

### வெவ்வேறு சமயங்களும் வெவ்வேறு பண்பாட்டுப்பாரம்பரியங்களும் பண்டிகைகளும்

| இந்து | | கிறிஸ்தவம் | | இஸ்லாம் | | பௌத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| **பண்டிகைகள்** | **பாரம்பரியங்கள்** | **பண்டிகைகள்** | **பாரம்பரியங்கள்** | **பண்டிகைகள்** | **பாரம்பரியங்கள்** | **பண்டிகைகள்** | **பாரம்பரியங்கள்** |
| தைப் பொங்கல் | சூரியனுக்கு நன்றி செலுத்துதல் | நத்தார் | பிரார்த்தனை புரிதல் | ஹஜ்ஜுப் பெருநாள் | - தியாகம் செய்தல் | வெசாக் | - ஒளிப் பந்தல் அமைத்தல் |
| மகாசிவ ராத்திரி | - சிவனை நோக்கி நேன்பிருத்தல்<br>- இரவு விழித்திருத்தல் | பெரிய வெள்ளி | | நேன்புப் பெருநாள் | - ஈகை | பொசன் | - தானம் வழங்கல் |
| தீபாவளி | - ஒளி ஏற்றல் (ஆணவத்தை அழித்தல்) | உயிர்த்தெழுந்த ஞாயிறு | | றமழான் | - நோன்பு இருத்தல் | ஏனைய நோன்மதி நாட்கள் | - சீலம் அனுட்டித்தல் |
| | | | | நபியவர்களின் பிறந்த நாள் | | | |

**வெவ்வேறு மக்கட் பிரிவினரின் பாரம்பரியங்கள்**

உதா:

- பிறப்பு
- அமுதூட்டல்
- ஏடு தொடக்கல்
- பூப்புனித நீராட்டல்
- ஞானஸ்நானஞ் செய்தல்
- திருமணம் சார்ந்தவை
- கிருகப்பிரவேசம் அல்லது புது மனை குடிபுகுதல்
- மரணம் சார்ந்தவை

(அந்ததந்த மக்கட் பிரிவினரின் பாரம்பரியங்கள் வெவ்வேறுபட்டவையாகும். எனவே வெவ்வேறு மக்கட் பிரிவினரின் பாரம்பரியங்கள் பற்றி அறிந்திருப்பது முக்கியமானதாகும்.)

**பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்களின் முக்கியத்துவம்**

- அந்தந்த கலாசாரங்களின் தனித்தன்மையை உறுதிப்படுத்துதல்.
- அந்தந்த கலாசார அம்சம் தொடர்பாக விளக்கம் பெறல்
- பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக முரண்பாடுகள் இழிவளவாதல்
- மக்கட் பிரிவினரிடையே ஒற்றுமை உறுதியடைதல்

**தேர்ச்சி 8.3** : பல் கலாசார சமூகமொன்றில் சிறந்த பிரசையாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம்** : பல் கலாசார சமூகமொன்றின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு 8.3.1** : "பல்வகைமையை மதிப்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.3.1.1 இல் தரப்பட்டுள்ள படம்
- இணைப்பு 8.3.1.2 இல் தரப்பட்டுள்ள குழுத்தேடியாய்வுப் படிவம் 4 பிரதிகள்
- டிமை கடதாசி, மாக்கர் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.1.1** :

- இணைப்பு 8.3.1.1 இல் தரப்பட்டுள்ள படத்தை மாணவருக்கு காட்சிப்படுத்துங்கள்.
- அது குறித்து மாணவர்களின் கருத்துக்களை வினவியறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரத்தக்க வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்

- பூந்தோட்டத்தில் வெவ்வேறு நிற, வெவ்வேறு வகையான, வெவ்வேறு வடிவமுடைய, வெவ்வேறு வாசனையுடைய பூக்கள் காணப்படுவதைப் போன்றே, மனித சமூகத்திலும் பல்வேறு மக்கட் பிரிவினர் காணப்படுகின்றனர்.
- அந்தந்த மக்கட் பிரிவினருக்கேயுரிய மொழி, பழக்க வழக்கங்கள் பாரம்பரியங்கள் உள்ளன.
- மனித சமூகம் பல்கலாசாரப் பண்புகளைக் கொண்டது.

(05 நிமிடங்கள்)

**படி 8.3.1.2** :

- வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.1.3.2 இல் தரப்பட்டுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தற் பத்திரப்பிரதியை வழங்குங்கள்.
- குழுக்களை தேடியாய்வில் ஈடுபடுத்துங்கள்.
- அறிக்கையை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.3.1.3** :

- குழு அறிக்கைகளை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.
- முதலில் விரிவுபடுத்துவதற்காக அதே குழுவுக்கு இடமளியங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • சமூகம் பல்வகைமையுடையது.<br>• சமூகத்தில் வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றும் வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற, வெவ்வேறு பாரம்பரியங்களைப் பேணுகின்ற மக்கட் பிரிவினர் வாழ்கின்றனர்.<br>• அவ்வாறான சமூகம் பல்கலாசாரச் சமூகம் எனப்படும்.<br>• கலாசாரப்பல் வகைமை காரணமாக அந்தந்த மக்கட் பிரிவினருக்குரிய தனித்தன்மைகள் காணப்படுகின்றன.<br>• இப்பல்வகைமையை நாம் அங்கீகரித்தல் வேண்டும். |

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பல் கலாசார மக்கட் சமூகத்தின் பண்புகளைக் குறிப்பிடுவார்.
- அந்தந்தக் கலாசாரங்களுக்குரிய சமயப் பண்டிகைகளையும் பண்பாடுகளையும் வேறாக்கிக் குறிப்பிடுவார்.
- பல் கலாசார மக்கட் சமூக அங்கத்தவர் என்ற வகையில் ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- பல்வகைமையை ஏற்று ஒருங்கு வாழ்வதற்காக தமது சமூகத்தை நெறிப்படுத்துவார்.

## இணைப்பு 8.3.1.1

பல்வகை மலர்கள் பூத்துக்குழுங்கும் காட்சி



## இணைப்பு 8.3.1.2

### பல்வகைமையை மதிப்போம்

பல் கலாசாரச் சமூகத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள் பண்பாடுகளைக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள் (உதாரணம் தரப்பட்டுள்ளது)

| | சமயம் | பண்டிகை | பழக்க வழக்கங்கள்/ சம்பிரதாயங்கள் |
|---|---|---|---|
| குழு 1 | இந்து | தைப்பொங்கல் | |
| | | மகா சிவராத்திரி | |
| | | தீபாவளி | |
| குழு 2 | கிறிஸ்தவம்/ கத்தோலிக்கம் | நத்தார் | |
| | | பெரிய வெள்ளி | |
| | | உயரித்தெழுந்த | |
| | | ஞாயிறு | |
| குழு 3 | இஸ்லாம் | ஹஜ்ஜுப் பெருநாள் | |
| | | நோன்புப் பெருநாள் | |
| | | நபியவர்களின் | |
| | | பிறந்தநாள் | |
| குழு 4 | பௌத்தம் | வெசாக் | |
| | | பொசோன் | |
| | | எஸல | |

**தேர்ச்சி 8.3** : பல் கலாசார சமூகமொன்றில் சிறந்த பிரசையாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம்** : கலாசாரப் பல்வகைக்குள் ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் கருமமாற்றுவார்.

**செயற்பாடு 8.3.2** : ''பல்வகைமையுடன் ஒற்றுமையாகச் செயற்படுவோம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 8.3.2.1 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள்
- இணைப்பு 8.3.2.2 இல் தரப்பட்டுள்ள குழுத்தேடியாய்வுப் படிவப்பிரதிகள்
- டிமை கடதாசி, மாக்கர் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.3.2.1** :

- இணைப்பு 8.3.2.1 இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி மாணவர்களை செயலில் ஈடுபடுத்துங்கள்.
- அது குறித்து மாணவர்களின் கருத்துக்களை வினவியறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரத்தக்க வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்

> - கைவிரல்களின் பல்வகைமை போன்ற மனித சமுதாயத்திலும் பல்வகைமை காணப்படுகிறது.
> - மனித சமுதாயத்தின் வெவ்வேறு மக்கட் பிரிவினர் ஒற்றுமையாகச் செயற்படுதல் வேண்டும்.
> - ஒற்றுமையாக ஒத்துழைத்துச் செயற்படுவதால் வலிமை அதிகரிக்கும்.

(05 நிமிடங்கள்)

**படி 8.3.2.2** :

- வகுப்பு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 8.3.2.2 இல் தரப்பட்டுள்ள குழுத்தேடியாய்வு அறிவுறுத்தற் பத்திரப்பிரதியை வழங்குங்கள்.
- குழுக்களை தேடியாய்வில் ஈடுபடுத்துங்கள்.
- அறிக்கையை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 8.3.2.3** :

- குழு அறிக்கைகளை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.
- முதலில் விரிவுபடுத்துவதற்காக அதே குழுவுக்கு இடமளியங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • இலங்கைச் சுதந்திரம் பெறுவதில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் கூட்டாகச் செயற்பட்டனர். |
| • கூட்டாக வாழ்வதால் பரஸ்பர புரிந்துணர்வ உருவாகும். |
| • பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக முரண்பாடுகள் ஏற்படுவது இழிவாகும். |
| • பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக மக்கட் பிரிவினர் களிடையே ஒற்றுமை உறுதிபெறும். |
| • இந்த எல்லா அம்சங்களும் ஒன்றிணைந்தால் அபிவிருத்திக்கு ஏதுவாகும். |

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வெவ்வேறு மக்கட் பிரிவினர், கூட்டாக ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- பல்பண்பாட்டு மக்கட் சமுகத்தில் ஒற்றுமையாக ஒத்துழைத்துச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- இலங்கைக்குச் சுதந்திரம் பெருவதற்காக முன்னின்று உழைத்த வெவ்வேறு மக்கட் பிரிவுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- மக்கட் பிரிவினருக்கு இடையே பல்வகைமையைப் பேணி ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- ஒரு நற்பிரசையாக சமுகத்தின் மேம்பாட்டுக்காகப் பங்களிப்புச் செய்வார்.

## இணைப்பு 8.3.2.1

பின்வரும் அறிவுறுத்தல்களின்படி மாணவர்களைச் செயலில் ஈடுபடுத்துங்கள்

- மாணவருக்குத் தமது புத்தகப்பைகளில் சகல புத்தகங்களையும் இட்டு பையை மேசை மீது வைக்குமாறு கூறுங்கள்.
- வளமான கையின் ஒரு விரலினால் புத்தகப்பையைத் தூக்க முயற்சிக்குமாறு அல்லது தூக்குமாறு கூறுங்கள்.
- பின்னர் ஐந்து விரல்களையும் பயன்படுத்தி அப்பையைத் தூக்குமாறு கூறுங்கள்
- இரண்டு முறைகளுள் எந்த முறையைப் பயன்படுத்தி பையை உயர்த்துவது இலகு என வினவுங்கள்.

## இணைப்பு 8.3.2.2

இலங்கைக்கு சுதந்திரம் பெறுவதற்காக முன்னின்று உழைத்த முக்கியத்தர்கள் தொடர்பான தகவல்களை தேடியறிந்து பின்வரு் அட்டவணையை உங்களது குழுவுக்குரிய நிரலைப் பூத்தி செய்யுங்கள்.

**மக்கட் பிரிவினர்**

| தமிழர் | | முஸ்லிம்கள் | | சிங்களவர் | |
|---|---|---|---|---|---|
| தலைவர்/ முக்கியஸ்தர் | ஆற்றிய பணிகள் | தலைவர்/ முக்கியஸ்தர் | ஆற்றிய பணிகள் | தலைவர்/ முக்கியஸ்தர் | ஆற்றிய பணிகள் |
| | | | | | |

## 8.4 சமகாலப் பிரச்சினைகள்

### அறிமுகம்

மனிதனின் சுமுகமான வாழ்க்கைக்குச் சவாலாக விளங்குகின்ற இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவது இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். இவற்றை இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் விபத்துக்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். புவியின் உட்பகுதியில் ஏற்படும் பௌதிக மாற்றங்களின் விளைவாகவே நில அதிர்வு, நில நடுக்கம், சுனாமி போன்ற இயற்கை அனர்தங்கள் ஏற்படுகின்றன. கால நிலை மற்றும் வானிலை மாற்றங்கள் காரணமாக ஆறு பெருக்கெடுத்து வெள்ளப்பெருக்கு, வரட்சி, இடி மின்னல் போன்ற அனர்த்தங்கள் ஏற்படலாம். மனித நடவடிக்கைகளின் எதிர்த் தாக்கமும் இவ்வனர்த்தங்களுக்குக் காரணமாக அமையலாம். இவ்வனர்த்தங்கள், விபத்துக்கள் தொடர்பாக மாணவர்களை விழிப்பூட்டி அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் முறைகள் பற்றி பயிற்றுவிப்பது மிக முக்கியமானதாகும்.

வீதி விபத்துக்கள், இரசாயனப் பொருட்கள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் நேரடி மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படுகின்றன. மனிதனின் கவனயீனம், போதிய அறிவின்மை என்பன இவ்வனர்த்தங்களை அதிகரிக்கச் செய்வதில் தாக்கம் செலுத்துக்கின்றன. எனவே வீதி விபத்துக்களை தவிர்த்துக் கௌர்ளல் மற்றும் இரசாயனப் பொருட்களை பயன்படுத்தல் தொடர்பான அறிவை பெறுவதும் இவ்வலகை கற்பதன் நோக்கமாகும்.

### தேர்ச்சி:

மக்கள் வாழ்க்கையின் நிலவுகையில் தாக்கம் செலுத்துகின்ற இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள செயற்படுவார்.

### தேர்ச்சி மட்டம்:

- அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களை இனங்கண்டு அவற்றை இழிவளவாக்குவதில் பங்களிப்புச் செய்வார்.
- வீதி ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதன் மூலம் வீதி விபத்துக்களை இழிவளவாக்குவார்.
- இரசாயனப் பொருட்களின் பாவனையின் மூலம் ஏற்படும் விபத்துக்களை அறிந்து அவற்றை இழிவளவாக்குவதில் பங்களிப்புச் செய்வார்.

### பாட உள்ளடக்கம்:

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் விபத்துக்கள்.
  - * இயற்கை அனர்த்தங்கள் - அறிமுகம்

    புவி மற்றும் அதன் அயற் சூழலின் இயற்கை நிலைமைகளில் ஏற்படுகின்ற தீவிரத்தன்மை காரணமாக உண்டாகும் அசாதாரண நிலை இயற்கை அனர்த்தம் எனப்படும்.

    உ-ம்: நில நடுக்கம்/ சுனாமி/ மண் சரிவு/ ஆற்றுப் பெருக்கு/ சூறாவளி

- இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள்
  * உயிர்ச் சேதங்கள்
  * பொருட் சேதங்கள்

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் உச்சமடைவதற்கு காரணமான மனித நடவடிக்கைகள்
  * காடழிப்பு
  * ஆற்றிலிருந்து மணல் அகழ்தல்
  * முருகைக் கற்களை அகழ்தல்
  * கனிய வள அகழ்வு
  * ஒழுங்கின்றி தாழ் நிலங்களை நிரப்புதல்
  * உக்காத பொருட்களை ஒழுங்கின்றி அகற்றுதல்

- அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
  * நிதானமாகச் செயற்படல்.
  * பாதிப்புற்றோரைக் காப்பாற்றுதல்.
  * முதலுதவிகளை முறையாக மேற்கொள்ளல்.
  * பாதிப்புற்றோரையும் அவர்களின் சொத்துக்களையும் பாதுகாத்தல்.
  * உரிய இடங்களுக்கு அறிவித்தல்.
    உ-ம்: பொலிஸ்/ மருத்துவமனை
  * அனர்த்தத்தின் தன்மையினை இனங்கண்டு அவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பொருத்தமான நடைமுறையைப் பின்பற்றுதல்.
  * அனர்த்தம் நடைபெறப்போவதை அறிந்ததும் உரிய இடங்களுக்கும் அயலிலுள்ள மக்களுக்கும் அறிவித்தல்.
  * அனர்த்தம் நடைபெறப் போவதை அறிந்ததும் உரிய இடங்களுக்கும் அயலிலுள்ள மக்களுக்கும் அறிவித்தல்.
  * அனர்த்தம் நடைபெற்ற அல்லது நடைபெறும் இடத்திலுள்ள மக்களை அப்புறப்படுத்தல்.
  * மேலும் அனர்த்தம் நடைபெறாது என்பதை உறுதிப்படுத்திய பின்பு பாதிப்புற்றோருக்குத் தேவையான உதவிகளைச் செய்தல்.
  * பாதிப்புற்றோருக்கு மனிதாபிமான முறையில் உதவி செய்தல்.
  * அனர்த்தங்களைத் தவிர்த்தல் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களை இழிவளவாக்கல் தொடர்பான சேவைகளை வழங்கும் நிறுவனங்களோடு தொடர்புபடுத்தல்.

## வீதி விபத்துக்கள்

- வீதி விபத்துக்களுக்கான காரணிகள்
    * வாகனச் சாரதிகளினால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள்
    உ-ம்: வேகமாக வாகனம் ஓட்டுதல், குடி போதையில் ஓட்டுதல், கவனயீனமாக ஓட்டுதல், வீதி ஒழுங்கு விதிகளை முறையாகப் பேணாமையும் அறியாமையும், வீதியைப் பயன்படுத்துவதில் ஒழுங்கின்றி நடந்து கொள்ளல்.
    (2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை 2069 ஆகும். இவ்வாண்டில் 4729 பெரிய விபத்துக்கள் நடைபெற்றன. மரணமடைந்தோர் தொகை 2339, 6812 பேர் கடுமையாக காயமடைந்தனர்.)

    * பாதசாரிகள் மூலம் நடைபெறும் குற்றங்கள்
    உ-ம்: வீதியொழுங்கு விதிகளை முறையாகப் பின்பற்றாமை, பாதசாரிகள் தங்களுக்குரிய நடைபாதையில் பயணம் செய்யாமை, கவனயீனம், வீதியை குறுக்காக கடக்கும் போது உரிய இடங்களைப் பயன்படுத்தாமை.

    * வீதிகளின் தரம்
    உ-ம்: வீதிகளை முறையாகப் பராமரிப்புச் செய்யாமை, வாகன எண்ணிக்கை அதிகரிப்புக்கேற்ப வீதிகள் அபிவிருத்தி அடையாமை.

    * வாகனங்களின் தரம்
    உ-ம்: பழுதடைந்த வாகனங்களை ஓட விடல், உரிய முறையில் வாகனங்களை பராமரிப்புக்காமை.

    * வேறு காரணிகள்
    உ-ம்: மரங்கள் விழல்/ பாறாங்கற்கள் விழல்/ விலங்குகளுடன் மோதல்

## வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்த வேண்டிய செயலொழுங்குகள்

- வீதியொழுங்கு விதிகளை உரிய முறையில் பின்பற்றல்.
- சாரதிகளையும் பிரயாணிகளையும் அறிவூட்டற் செய்தல்.
- வீதியொழுங்கு விதிகளைப் பின்பற்றுதல் தொடர்பாக பாதசாரிகளை அறிவூட்டற் செய்தல்.
- வீதிப் பராமரிப்பு தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவித்தல்.
- தகுதியற்ற வாகனங்களை அகற்றுதல்.
- முறையாகப் பயிற்சியளித்ததன் பின்பு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- சாரதி மற்றும் வாகனத் தகுதிகளை பரிசோதித்தல்.

## விபத்து நடைபெற்ற சந்தர்ப்பமொன்றில் நடந்து கொள்ளும் முறை

- சாரதிகள்
    * உடனே வாகனத்தை நிறுத்தல்.
    * காயமடைந்தோர் இருப்பின் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    * விபத்து தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்தல்.

- பிரயாணிகள் அல்லது பொதுமக்கள்
    * காயமடைந்தோர் இருப்பின் அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல உதவுதல்.
    * கண்ணால் கண்ட விடயங்களை மாத்திரம் சாட்சியாகச் சொல்லல்.
    * விபத்துக்குள்ளான வாகனத்தைச் சேதப்படுத்தாமல் இருத்தல்.
    * விபத்து தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைத்தல்.

- பொலிஸ்
    * பக்கச் சார்பின்றி நடந்து கொள்ளல்.
    * சந்தேக நபர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தல்.
    * இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## இரசாயனப் பொருள் பாவனை தொடர்பான விபத்துக்கள்

- வீட்டில் காணப்படும் எலி, நுளம்புகள் போன்றவற்றை அழித்தல்.
- மலசல கூட சுத்திகரிப்பு.
- வீட்டுத்தோட்ட நடவடிக்கையின் போது பீடை நாசினியாகப் பயன்படுத்தல்.
- விவசாய நடவடிக்கைகளின் போது வளமாக்கிகள், பீடை நாசினிகள், கிருமி நாசினி களைப் பயன்படுத்தல்.
- தொழிற்சாலையின் மூலப் பொருட்களைக் கையாளல்.

## இரசாயனப் பொருட்களினால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய முறைகள்

- வீட்டில்
    * பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தல்
    * உணவுப் பொருட்களுடன் ஒரே இடத்தில் களஞ்சியப்படுத்தல்.
    * பெயர்ச் சுட்டிகளை (Label) உரிய முறையில் காட்சிப்படுத்தாமை.
    * சிறிய பிள்ளைகளின் கைக்கு எட்டக்கூடிய இடத்தில் வைத்திருத்தல்.
- விவசாய நடவடிக்கைகளின்போது
    * பயன்படுத்துவது தொடர்பான உரிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமை.
    * உரிய முறையில் ஐதாக்காமை.
    * வெற்றுப் போத்தல்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை நீருடன்சேர்த்தல்.
- விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
    * விபத்துக்கான காரணிகளை உரிய முறையில் இனங்காணல்.
    * பொருத்தமான முறையில் முதலுதவிகளைச் செய்தல்.
    * கூடிய விரைவில் சிகிச்சை அளித்தல்.
- விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
    * பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தல்.
    * பிள்ளைகளின் கைக்கு எட்டாத இடங்களில் வைத்தல்.
    * பயன்படுத்தும் போது தேவையான பாதுகாப்பு உறைகளை அணிதல். உ-ம்: முக உறை, கையுறை
    * பயன்படுத்த முன்பு அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கி அதனை நடைமுறைப்படுத்தல்.
    * பயன்படுத்திய பின்பு கை, கால்களை கழுவிச் சுத்தம் செய்தல்
    * வெற்றுப் போத்தல்களை உரிய முறையில் அகற்றுதல்
    * இரசாயனப் பொருட்களை விசிறுதல் போன்ற காரியங்களுக்காக பயன்படுத்திய உபகரணங்களை நீர்த் தேக்கங்கள் ஆறுகள் போன்றவற்றில் கழுவாதிருத்தல்.

**தேர்ச்சி 8.4** : மக்களின் சுமுகமான வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகின்ற இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முனைப்புடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : அனர்த்தம் மற்றும் விபத்துக்களை இனங்கண்டு அவற்றை இழிநிலையாக்கிக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்வார்.

**செயற்பாடு 8.4.1** : "இயற்கை அன்னையைக் காப்போம் - அனர்த்தங்களைத் தவிர்ப்போம்"

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.4.1.1 (சுனாமி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்ற அனர்த்த நிலைமைகளை விளக்கும் படங்கள் அல்லது அறிக்கைகள்)
- எழுதும்தாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.4.1.1** :

- மேற்படி படங்களை அல்லது அறிக்கைகளைக் மாணவர்களுக்கு காண்பிக்கவும்.
- அது குறித்து மாணவர்களின் கருத்துக்களை கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரத்தக்க வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| • இயற்கையாகவே அனேக அனர்த்தங்கள் அல்லது விபத்துக்கள் ஏற்படுகின்றன.<br>• மனித நடவடிக்கைகள் காரணமாகவும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.<br>• இவ்வனர்த்தங்களும் விபத்துக்களும் மனிதனின் சுமுகமான வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. |

(10 நிமிடங்கள்)

**படி 8.4.1.2** :

- வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.
- பின்வரும் நான்கு தலைப்புக்களையும் நான்கு குழுக்களுக்கும் வழங்குங்கள்.
  1. சுனாமி    2. ஆற்றுப்பெருக்கெடுப்பு
  3. மண்சரிவு    4. சூறாவளி
- மேற்படி தலைப்புக்களின் கீழ் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க ஆலோசனை வழங்கவும்

1. இவ்வாறான அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட பாதகமான நிலைமைகள் எவை?

2. இவ்வனர்த்தங்களுக்குக் காரணமான மனித நடவடிக்கைகள் எவை?
3. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனிதர்கள் என்ற அடிப்படையில் நாம் செயற்பட வேண்டிய முறைகளை எழுதுக.
4. இயற்கை அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு நாம் நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டங்கள் எவை?

(20 நிமிடங்கள்)

**படி 8.4.1.3** :

- குழு அறிக்கைகளை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒரு குழு முன்வைத்தலைச் செய்தவுடன் குறை நிரப்புச் செய்யும் சந்தர்ப்பத்தை ஏனைய குழுக்களுக்கு வழங்கவும்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் வித்துக்கள் தொடர்பாக நாம் அறிதல் வேண்டும்.<br>• அவ்வாறான சந்தர்ப்பங்களில் தெளிவான சிந்தனையுடன் பாதிப்புற்றோருக்கான நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும்.<br>• சிறந்த பிரஜை என்ற வகையில் இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளை விளங்கி நிதமும் செயலாற்ற வேண்டும். |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- இயற்கை அனர்த்தங்கள் போலவே மனித நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் விபத்துக்கள் பற்றியும் விளக்குவார்.
- இவ்வாறான அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காக செயலாற்றுவது போலவே அனர்த்தங்கள் ஏற்படும் போது மனித உணர்வுகளுடன் செயலாற்ற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவும், அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் செயலாற்ற வேண்டிய முறைகளை எழுதிக் காட்டுவார்.
- மனிதனுக்கும் இயற்கைக்குமிடையேயுள்ள தொடர்புகளை அறிந்து செயலாற்றுவார்.
- அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற் காக செயற்படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தெளிந்த சிந்தனையுடன் உதவி ஒத்தாசை புரிவார்.

**தேர்ச்சி 8.4** : மக்களின் சமூகத்தின் பாதுகாப்புக்காக உயிரோட்டமாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : வீதிப் போக்குவரத்துச் சட்டதிட்டங்களை அனுசரித்து விபத்துக்களை இழிவளவாக்குவார்.

**செயற்பாடு 8.4.2** : ''வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்''

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 8.4.2.1 வீதிப் போக்குவரத்து சைகை அட்டவணை
- எழுதும்தாள்கள், பேனைகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 8.4.2.1** :

- இணைப்பு 8.4.2.1 இல் தரப்பட்டுள்ள சைகை அட்டையை வகுப்பில் காட்சிப்படுத்தி அதுபற்றி வினவுங்கள்.
- வீதிகளில் நாளாந்தம் காணும் வீதிப்போக்குவரத்துச் சைகைகள் பற்றி மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரத்தக்க வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| • வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வீதிப்போக்குவரத்துச் சைகைகளை அனுசரிப்பது முக்கியமானது.<br>• வாகனச் சாரதிகளும் பாதசாரிகளும் வீதிப்போக்குவரத் துச் சைகைகள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படல் வேண்டும்.<br>• வீதிப்போக்குவரத்துச் சைகைகளை அனுசரிக்காமை யால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட இடமுண்டு. |

(05 நிமிடங்கள்)

**படி 8.4.2.2** :

- வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் 5 வீதிப்போக்குவரத்துச் சைககள் வீதம் கிடைக்கும் வகையில் அவற்றைப் பகிர்ந்தளியுங்கள். (இணைப்பு 8.2.2.2)
- குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் படிவப்பிரதிகளையும் எழுதுபொருட்களையும் குழுக்களுக்குப் பகிர்ந்தளியுங்கள்.
- குழுக்களைத் தேடலில் ஈடுபடுத்துங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

**படி 8.4.2.3** :

- குழு அறிக்கைகளை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.
- முதலில் விரிவுபடுத்த அதே குழுவுக்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி தொகுப்புரை வழங்குங்கள்.

| |
|---|
| • சாரதிகளும் பாதசாரிகளும் வீதிப் போக்குவரத்துச் சைகைகளை அனுசரித்தல் அவசியமாகும்.<br>• வீதிப்போக்குவரத்துச் சைகைகளை அனுசரிக்காமையே பெரும்பாலான விபத்துக்களுக்குக் காரணமாகின்றது.<br>• வீதிப் போக்குவரத்துச் சைகைகள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.<br>• வாகனச் சாரதிகளும் பாதசாரிகளும் வீதிகளில் பயணஞ் செய்யும்போது மனித உயிர்களின் பெறுமானத்தை விளங்கி வீதிப்போக்குவரத்துச் சைகைகளை அனுசரித்துச் செயற்படுதல் அவசியமாகும். |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வீதிப்போக்குவரத்துச் சைகைகளை இனங்கண்டு, அவற்றை அனுசரிப்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்படுவார்.
- மனித உயிர்களின் பெறுமானத்தை வாகனச் சாரதிகளும் பாதசாரிகளும் விளங்கிச் செயற்படுதல் வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- வீதிப்போக்குவரத்துச் சைகைகளால் எடுத்துகாட்டப்படும் சட்டதிட்டங்களை எழுதிக்காட்டுவார்.
- வீதியில் பயணிக்கும் போது எப்போதும் வீதிப் போக்குவரத்துச் சட்டதிட்டங்களைப் பேணிச் செயற்படுவார்.
- தேவையான சகல சந்தர்ப்பங்களிலும் வீதிப் போக்குவரத்துச் சட்டதிட்டங்கள் தொடர்பாக ஏனையோருக்கு அறிவூட்டம் செய்து விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

## இணைப்பு 8.4.2.1



## இணைப்பு 8.4.2.2

### குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல்கள்


- உங்களது குழுவுக்குத் தரப்பட்டுள்ள வீதிப்போக்குவரத்துச் சைகைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- அவ்வொவ்வொரு வீதிப்போக்குவரத்துச் சைகையினாலும் காட்டப்படுபவற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.
- அவ்வீதிப்போக்குவரத்துச் சைகைகளை அனுசரிப்பதன் மூலம் வீதி விபத்துக்களை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதை எழுதுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் முன்வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

## இணைப்பு 8.4.2.3

*குழு 1*







*குழு 2*







*குழு 3*








*குழு 4*








# கணிப்பீடும் மதிப்பீடும்

# கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவு பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்குப் பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிவுகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள் மாணவரின் வெற்றிகரமான மட்டங்களின் ஊடே மாணவர் அண்மித்த தேர்ச்சி மட்டத்தை இனங்காணுதல், இதன் மூலம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதுடன் மாணவரும் ஆசிரியரும் உட்பட வேறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு மாணவரின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைதல் வேண்டும்.

உங்கள்முன் வைக்கப்படும் இப்பாடநெறி மாணவர் மைய (Student centered) தேர்ச்சி அடிப்படையிலான செயற்பாட்டை அடிப்படையாக் கொண்ட (Activity Oriented) அணுகுமுறையைக் கொண்டிருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயலின் மூலம் கற்றல் ஆசிரியரின் நிலைமாற்று வகிபங்கின் (Transformation Role) உள்ளார்த்தமுமாகும்.

ஆரம்பத்தில் விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரின் ஊடே செயற்படுத்தப்படும் இப்பாடநெறியில் கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீட்டுடன் ஒன்றிணைக்க முயற்சி செய்யப்பட்டு உள்ளது. அந்தந்த செயற்பாடுகளின் இரண்டாம் படிமுறையில் மாணவக் குழுக்கள் ஆய்வில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும் செயற்பாடுகளில் மூன்றாம் படிமுறையின் போது மாணவர் சுய கண்டறிதலைச் சமர்ப்பிக்கவும் விவரணம் செய்யவும் முனையும் போது அவர்களை மதிப்பீடு செய்ய முடியும். மாணவர்கள் ஆய்வில் ஈடுபடும் போது மாணவரிடையே நடமாடியவாறு அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானிக்கலாம். வகுப்பறையில் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இங்கு கலந்துரையாடித் தீர்த்து வைக்கலாம்.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக்

கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்பான நடத்தை மாற்றங்களை ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின் போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதால் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வரிவாக்கலாம். அதற்கென செயற்பாட்டுத் தொடர்ச்சி (ACTIVITY CONTINUM) ஊடாக மதிப்பீட்டு வாய்ப்புக்கள் பலவற்றை ஏற்படுத்த ஆசிரியருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுப் புள்ளிகளை (EVALUATION POINT) இனங்காண்பதற்கு இலவுகான வகையில் செயற்பாட்டுத் தொகுப்புக்கள் (ACTIVITY CLUSTER) பலவற்றுக்கு வேறாக்குவதன் மூலம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அர்த்தமுடையதாக ஆக்கலாம். எல்லாச் செயற்பாட்டுத் தொகுப்பின் ஆரம்பத்திலும் அவ்வந்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு கருவிகள் யாவை என மாணவருக்கு அறிவித்தல் அவசியமாகும்.

மதிப்பீட்டு வகைகளைத் தெரிவு செய்யும் போது மாணவரின் கற்றலின் தூண்டல் விரிவாக்கும் சுறுசுறுப்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தல் முக்கியமாகும். இதற்குரிய செயற்பாடுகளின் பட்டியல் அட்டவணை பின்வருமாறு.

எண்ணக்கரு படங்கள்
சுவர்ப்பத்திரிகை
வினாவிடை நூல்கள்
வினாவிடை நிகழ்ச்சி
மாணவர் செயலாற்றற் கோவை
மாணவர் கண்காட்சிகள்
விவாதங்கள்
உரையாடல் மன்றங்கள்
கருத்தரங்குகள்
திடீர் உரைகள்
நடிபங்குகள்
இலக்கிய மீளாய்வுச் சமர்ப்பணம்
களப்புத்தகம் (இயற்கை கற்கை நாளேடு)
செய்முறைச் சோதனைகள்

பாடநெறியின் மூன்றாம் பகுதியில் உத்தேச மதிப்பீட்டுப் புள்ளியாகவும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளும் இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக செயற்பாட்டின் மூலமும் அவற்றிடையேயும் மதிப்பீட்டையும் இருவிதமாக செய்வதனால் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கை மேலும் விரிவாக்கக்கூடியதுடன் உற்சாகமாக கற்றலில் ஈடுபடவும் மாணவர்களுக்கு இயலுமாகும்.
மாணவர்களுக்கான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குகளை நீடிக்கும் உபகரணங்களைத் தயார் செய்வது அடுத்த படிமுறையாக இருப்பதுடன் ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆரம்பத்தில் இவ்வுபகரணங்கள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தலும் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் பணியாகும். இதன்படி கற்றலையும் கற்பித்தலையும் நீடிப்பதற்காக ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சில வகைகள் பின்வருமாறு:-

- எண்ணக்கருப் படம் (Concept Maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall News Papers)
- அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயலடைவுக் கோவை (Portfolios)
- மாணவர் ஆக்கங்களின் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடன் பேச்சு
- வகிபாகமேற்றல் (Role Plays)
- இலக்கிய விமர்ச்சனம் (Presentation of Literature Reviews)
- களநூல், இயற்கை நாளேடு, பயிற்சிப் புத்தகம் (FieldBooks/ Nature Diaries)
- செய்முறைப் பரீட்சை (Practical Tests)

பாடத்திட்டத்தின் மூன்றாவது பகுதி கற்றல்-கற்பித்தல் நீடிப்புச் சந்தர்ப்பங்கள், அதற்காக தெரிவு செய்யக் கூடிய உபகரணங்கள் என்பவற்றை அறிமுகம் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பாட்டின் உள்ளேயும், அவற்றுக்கிடையையும் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இரண்டு வழிகளிலும் மேற்கொள்வதன் மூலம் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கு மேலும் விரிவடைவதுடன், ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்றலில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்கு முடியும்.

# கணிப்பீடும் மதிப்பீடும் (வாழ்க்கைத் தேர்ச்சிகள்)

## 1. சுய கணிப்பீடு

பாடத்துடன் தொடர்புடைய தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு சுய கணிப்பீடொன்றை திட்டமிடல், குறித்த பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்பதாக மாணவர் அது தொடர்பாக் கொண்டுள்ள கருத்து, கொள்கைகள், மனப்பாங்குகள் ஆகியவற்றை பாடத்தின் அல்லது தவணையின் இறுதியில் குறித்த தலைப்புக்கள் தொடர்பில் ஒப்பிட்டு கணிப்பிட முடியும். தமது பலங்களையும் பலவீனங்களையும் இத்தகைய சுய கணிப்பீட்டின் மூலம் விளங்கிக் கொள்ள வேண்டமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலையிலுள்ள மனிதப் பௌதிக வளங்களைக் கவனத்திற்கொண்டு ஆசிரியரின் விருப்பிற்கேற்ப கணிப்பிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் ஏற்ற நியதிகளை இனங்காணலாம்.

## 2. சகபாடிகளின் கணிப்பீடு

வேலையொன்றை ஒவ்வொரு குழுவிற்கும் ஒப்படைத்த பின்னர் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்ற மாணவர் காட்டும் (பங்களிப்பை, ஒழுங்கமைப்பை, ஆளிடைத் தொடர்புகளை திட்டமிடல்) ஆகிய பல்வேறு நியதிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகளை செய்ய முடியும். செயற்பாட்டினிறுதியில் குறித்த குழுக்களுக்கு மீள வலியுறுத்துதல் வழங்குவதற்காகப் பாராட்டுகள், பரிசுகள் ஆகியவற்றை வழங்குதல் முக்கியமாகும்.

## 3. செயல் அடைவுக் கோவையைப் பேணல்

- தவணையின் ஆரம்பத்திலேயே செயல் அடைவுக்கோவைகளைத் தயாரிப்பது பற்றிய தேவையான அறிவுறுத்தல்களை வழங்கல்.
- தவணையின் மத்தியில் குறித்த வேலைகளை பரிசோதித்து மீளூட்டங்களை வழங்கல்
- இறுதி மதிப்பீட்டுக்காக பின்வரும் நியதிகளை உபயோகித்தல் பொருத்தமானது
  - அறிவுரைகளைப் பின்பற்றல்
  - ஒழுங்கு முறைமை
  - ஆக்கபூர்வமான தன்மை
- குறித்த ண்ணக்கரு, தேர்ச்சி ஆகியவற்றை விளங்கிக் கொண்டள்ளனரா என்பதையும் இறுதியில் காட்சிப்படுத்தப்படுகின்றதா என்பதையும் தீர்மானித்தல்.

## 4. செயற்றிட்டத்தை மதிப்பிடல்

- தவணை முடிவில் சிறிய செயற்றிட்டமொன்றை தனியாகவோ குழுவாகவோ செயற்படுத்தல். இதற்கான நியதிகளை விருப்பமானவாறு தயாரிக்கலாம்.

## 5. முறைசார் மதிப்பீடு

வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள், கருத்துக்களை வினாக்கேட்டல் மூலம் பரீட்சிக்க வேண்டும். இவ்வினாக்கள் மூலம் அறிவு, திறன், எண்ணக்கரு பிரயோகம் ஆகியன தொடர்பாக பரீட்சித்தல் வேண்டும்.

# கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள்.

**தரம் : 08**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 01**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- நேர் வகை மனப்பாங்குடன் செயற்படுவார்.
- மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர்கொள்வார்.
- தமது வாழ்க்கையில் நன்மைக்காக காணப்படும் பொதுச் சேவைகளை விளைதிறனுடைய வயிலும் சரியாகவும் பயன்படுத்துவார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

- அன்றாட வாழ்வில் நல்ல எண்ணங்களை அடிப்எடையாகக் கொண்டு செயற்படுவார்.
- நல்ல எண்ணங்களைச் செழுமைப்படுத:தும் மூலங்களை இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்துவார்.
- அன்றாட வாழ்வில் தோன்றும் பல்வேறு மனவெழுச்சி நிலைமைகளை இனங்கண்டு பொருளுள்ள வகையில் துலங்குவார்.
- பொதுச் சேவைகளையும் பொதுச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களையும் இனங்கண்டு தமது வாழ்க்கையின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்துவார்.
- பொதுச் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் சார்பாக பிரசை என்ற வகையில் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார்.

**4.0 மதிப்பீட்டு கருவியின் தன்மை (மதிப்பீட்டுப்பேதம்)**

- சுய கற்கை

**5.0 நேரம்**

80 நிமிடங்கள்

**6.0 தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பில் தரப்பட்டுள்ள தேடியாய்வுப் படிவம்

**7.0 மதிப்பீட்டுக்கருவியின் தன்மை**

- நல்ல எண்ணங்களைப் போசிக்கும் மூலங்களுக்கு அமைவாக தீர்மானமெடுப்பார்.
- மனவெழுச்சிகளின் தன்மையை விளங்கி, பொருளுள்ள வகையில் துலங்குவார்.
- எளிமையான மன அழுத்தங்களுக்குக் காரணமாகும் மனவெழுச்சிகளை விளைதிறனுடையவாறு இசைவுபடுத்திக் கொள்வார்.
- பொதுச்சேவைகளையும் பொது வளங்களையும் விளைதிறனுடைய வகையிலும் சரியாகவும் பயன்படுத்துவார்.
- பொதுச் சேவைகள், வளங்கள் தொடர்பாக பிரசை என்ற வகையில் கடமைளையும் பொறுப்புக்களையும் ஆற்ற முன்வருவார்.

## 8.0 மதிப்பீட்டை நடத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- இது ஒவ்வொருவரும் தனித்தனியே செய்ய வேண்டிய ஒரு செயற்பாடாகும்.
- இம்மதிப்பீடு தொடர்பாக பாட ஆரம்பத்துலேயே மாணவருக்கு அறிவியுங்கள்.
- மாணவர் தொகைக்குப் போதுமான அளவுக்கு மதிப்பீட்டுப்படிவப் பிரதிகளைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.
- ஆளுக்கொரு மதிப்பீட்டுப்படிவம் வீதம் பகிர்ந்தளித்து மதிப்பீட்டு காலவரையறை பற்றிக் கூறுங்கள்.
- குறித்த காலப்பகுதியுள் மதிப்பீட்டைப் பூர்த்தி செய்யுங்கள்.
- மதிப்பீட்டை நடத்தி நியதிகளின்படி புள்ளி வழங்குங்கள்.

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஆசிரியரின் அறிவுறுத்தல்களின்படி செயற்படுங்கள்.

**பின்னூட்டல் - முன்முகவூட்டல் செயன்முறை:**

- தேர்ச்சி மட்டத்தை அடைந்த மாணவர்களது மதப்பீட்டுப்படிவங்களைக் கொண்டு முன்மாதிரியொன்றை உருவாக்கல்.

**மதிப்பீட்டுப்படிவம்**

- பின்வரும் பிரச்சினை சார்ந்த சம்பவங்களையும் கூற்றுக்களையும் நன்கு கவனியுங்கள். பின்வரும் வினாக்களுக்க விடையெழுதி உங்களது கருத்துக்களையும் பிரேரனைகளையும் எழுதுங்கள்.

**சம்பவம் 1**

நீங்கள் காலையில் வகுப்புக்கு வந்து பார்த்த போது உங்களது கதிரையை யாரோஒருவர் எடுத்துள்ளதாகவும் அதற்குப்பதிலாக ஒரு பழைய கதிரையை வைக்கப்பட்டுள்ளதையும் காண்கிறீர்கள். நீங்கள் அந்த மாணவனைக் இனங்கண்டு கொண்டதாகக் கருதுங்கள்.

I இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் செயற்படும் விதத்தைச் சுருக்கமாக எழுதுங்கள்.

II பழைய கதிரையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்பட்டதாகக் கருதி, அவ்வாறான சந்தர்ப்பத்தில் உங்களது மனதில் ஏற்படும் உணர்வுகளை எழுதுங்கள்.

III வகுப்பறையில் காணப்படும் மேசை கதிரைகள் பொதுச்சொத்துக்களாகும். பாடசாலையில் உள்ள அவ்வாறான ஏனைய பொது வளங்கள் என... குறிப்பிட்டு அவற்றைப் பயன்படுத்தல், பாதுகாத்தல் தொடர்பான உங்களது யோசனைகளைத் தருக.

**சம்பவம் 2**

உலகில் பிரபல்யம்மிக்க ஒருவர் தொடர்பான சிறு விவரனம் கீழே தரப்பட்டுள்ளது.

‘‘எனது வயது பதிமூன்று வருடங்களாக இருந்த காலத்தில் நான் மிகக் கவலைப்பட்டேன். என்னைப்பற்றிய ஓர் அச்சம் எனக்கு ஏற்பட்டது. வயதுடன் ஒப்பிடும்பொது நான் மிக மெலிந்து நிலிந்தும் காணப்பட்டேன். மற்றைய பிள்ளைகளை உயரமாக இருந்தபடியால் எனது மெலிவு தெளிவாகத் தெரிந்தது. எனது உடல் மிக நலிவாக இருந்தது. எனது வயதுப் பிள்ளைகளோடு விளையாட்டிலோ ஓட்டத்திலோ போட்டிபோட்டு வெற்றி பெற என்னால் முடியவில்லை. என்னை எல்லோரும் ஏளனமாகவே பார்த்தார்கள். சோம்பேறி என என்னைக் கிண்டல் செய்தனர். நான் மிகவும் கவலைப்பட்டேன். ஏனையோரின் முகத்தைப் பார்க்கவும் தயங்கினேன். எவரையும் சந்தித்துப் பேசக் கூச்சப்பட்டேன். நான் முக்கியமான ஒருவன் அல்லவெனும் உணர்வு எனதுமனதில் ஏற்பட்படது. நான் வாழக்கையில் விரக்தியடைந்தேன்.’’

I இந்த கதையைச் சொல்லும் பிள்ளையை உங்களது வகுப்பில் இருக்கும் ஒரு பிள்ளையாகக் கருதுங்கள். அப்பிள்ளை உங்கள் மீது நம்பிக்கை வைத்து இக்கதையை உங்களிடம் கூறியதாகவும் கருதுங்கள். அப்பிள்ளையின் மன அழுத்தத்தை நீக்கிக் கொள்வதற்காக நீங்கள் அப்பிள்ளைக்கு உதவும் விதத்தை விளக்குங்கள். (நீங்கள் வழங்கும் ஆலோசனைகள் உட்பட)

**சம்பவம் 3**

‘‘ஒருவர் இம்சை தவிர்த்து அகிம்சைவாதியாக இருப்பதற்கு பாரிய மனவலிமை இன்றியமையாதது. இம்சைக்கு இம்சையினால் பதிலளிப்பதிலும் பார்க்க இம்மைசக்கு அகிம்சையினால் பதிலளிப்பதால் எதிரி அதனை நேரடியாக உணர்ந்து கொள்வார் அன்பினும் வலிமை மிக்க ஆயுதம் கிடையவே கிடையாது.’’

-மகாத்மா காந்தி -

I மகாத்மா காந்தி தனது வாழ்வில் பல இன்னல்களுக்கு ஆளானவர். எந்த ஒருவருக்கும் இவ்வாறான பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இன்னல்களை எதிர்கொண்ட சந்தர்ப்பங்களை நினைவு கூர்ந்து எழுதுங்கள்.

II அச்சந்தர்ப்பங்களில் நீங்கள் எவ்வாறு செயற்பட்டீர்கள்? அச்சந்தர்ப்பங்களில் நீங்கள் அனுவிக்க வேண்டி ஏற்பட்ட விளைவுகள் யாவை?

III நீங்கள் மனவெழுச்சிகளின் அழுத்தத்துக்கு ஆளாகும் ஒரு சந்தர்ப்பத்தில் அதனை நேர்மையான வகையில் வெற்றி கொள்ளும் விதத்தை எழுதுங்கள்.

மேற்படி சந்தர்ப்பங்களின் ஊடாக, நன்மையையே நோக்கிச் செயற்படுதல், மனவெழுச்சி நிலைமைகளின் போது செயற்படுதல், பொதுச் சேவைகளுடன் தொடர்புடைய வகையில் செயற்படுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தினருக்குக் காட்சிபடுத்துவதற்காக மகுட வாசகங்கள் சிலவற்றை தயாரியுங்கள்.

**மதிப்பீட்டு நியதிகளும் புள்ளிவழங்கலும்**

| நியதிகள் | 4 | 3 | 2 | 1 |
|---|---|---|---|---|
| • பிரச்சினையை இனங்காணல், அதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களையும் தொடர்புகளையும் குறிப்பிடுதல். | | | | |
| • பிரச்சினையைப்பகுத்தாய்தல், ஆக்கபூர்வமாகத் தீர்வு யோசனைகளை முன்வைத்தலும் அவற்றின் பொருத்தப்பாடும். | | | | |
| • மூலாதாரங்களைப் பயன்படுத்தல், தகவல்களைச் சரியாக முன்வைத்தல், பொதுமான அளவு தகவல்களை முன்வைத்தல். | | | | |
| • குறித்த தீர்வு யோசனைகள் நடைமுறைச் சாத்தியமானவையாக இருத்தலும் அத்தீர்வுகளின் அடிப்படையில் செயற்படும் விதம் பொருத்தமானதாக இருத்தலும் | | | | |
| • நேரம் சரியாகப் பயன்படுதப்பட்டிருத்தல், முழுத் தன்மை | | | | |
| மொத்தம் | | | | |

# கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள்.

**தரம் : 08**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 02**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**
- கல்தேவைக்காகச் சமூகத்தின் பண்புகளைப் பகுப்பாய்வார்.
- கலாசாரப்பல்வகைமையுடன் ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படுவார்.
- கலாசாரப் பல்வகைமையை அபிவிருத்திச் செயன்முறைகக்காப் பயன்படுத்தத் தக்க விதத்தைத் தேடியாய்வார்.
- தலைமைத்துவத்தின் அவசியத்தை இனங்கண்டு ஒரு தலைவராகச் செயற்படுவார்.

**3.0 பாட உள்ளடக்கம்**
- பல்கலாசார மக்கட் சமூகத்தில் நல்லதொரு பிரசையாக வாழ்வார்.
- தலைமைத்துவத்தை மதித்து தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.

**4.0 மதிப்பீட்டு கருவியின் தன்மை (மதிப்பீட்டுப்பேதம்)**
- களப்பிரயாணம்

**5.0 நேரம்**
2 வாரங்கள்

**6.0 மதிப்பீட்டுக்கருவியின் குறிக்கோள்கள்**
- பல்கலாசார மக்கட் சமூகமொன்றின் பண்புகளை விளங்கி, பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவார்.
- தலைமைத்துவப் பண்புகளை இனங்கண்டு அவற்றை மதிப்பதன் முக்கியத்துவத்தை வலியறுத்துவார்.
- தலைவரொருவர் எதிர்நோக்கும் அறைகூவல்களை இனங்கண்டு, அவற்றை வெற்றி கொள்வதற்காக தன்னம்பிக்கை விருத்தி செய்து கொள்வார்.

**7.0 மதிப்பீட்டை நடத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்**

**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**
- பல்கலாசார இயல்புகள் உள்ளடங்கும் வகையில் உங்களது பிரதேசத்துக்கும் பாடசாலைக்கும் மாணவர்க்கும் மிகப் பொருத்மான மூன்று இடங்களையேனும் உள்ளடக்கும் வகையில் கல்விசார் களப்பிரயாணமொன்றினை ஒழுங்கு செய்யுங்கள்.

  உ-ம் : கோயில், தேவாலயம், பள்ளிவாசல், பன்சாலை போன்ற கலாசார முக்கியத்துவமுடைய சில இடங்கள்.
- பங்குபற்றும் மாணவரின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, அவர்களைக் குழுக்களாகப் பிரித்து, குழுத் தலைவர்களை நியமியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும் வகையில் கல்விசார் களப்பிரயாணத்துக் குரிய வேலைப்படிவமொன்றினைத் தயார்ப்படுத்தி ஆளுக்கொன்றாகப் பகிர்ந்தளியுங்கள்.

அவ்வேலைப்படிவத்தில் பின்வரும் விடயங்களை உள்ளடக்குங்கள்.

1. பார்வையிடும் இடம்
2. அந்த இடத்தின் வரலாறு முக்கியத்துவம்
3. கட்டடங்களிலும் கலைப்படைப்புகளிலும் காணப்படும் சிறப்பம்சங்கள் சிற்பம், செதுக்கு வேலைகள், சிலைகள்
4. சடங்குகள், சம்பிரதாயங்கள்
5. சமய முக்கியத்துவமுடைய இடங்களின் கலசாார சிறப்பம்சங்கள்.

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- ஆசிரியரால் அல்லது ஆசிரியையினால் உங்களது கழு அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட வேலைப்பவத்தைக் கவனமாக வாசியுங்கள்
- தரப்பட்ட தலைப்புக்களிலிருந்து ஆளுக்கு ஒரு தலைப்பு வீதம் தெரிவு செய்து கொள்ளுங்கள். அத்தலைப்பின் கீழ் தகவல் சேகரியுங்கள்.
- களப்பிரயாணம் முடிவடைந்த பின்னர் குழு அங்கத்தவர்கள் ஒன்று கூடி சேகரித தகவல்களைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- களப்பிரயாணத்தின்போது உங்களது குழுத்தலைவர் எதிர்நோக்கிய அறைகூவல்களையும் அவற்றை வெற்றி கொள்வதற்காக அவர் வெளிக்காட்டிய தலைமைத்துவப் பண்புகளையும் பட்டியற்படுத்துங்கள்.
- தலைமைத்துவப் பண்புகளை மதித்து, தலைமைத்துவத்தைப் பின்பற்றுவோர் செயற்பட வேண்டிய விதத்தை விளக்கி, கல்விசார் களப்பிரயாணம் தொடர்பான ஒரு சிறுநூலைத் தயாரித்து பாடசாலை நூலகத்தில் ஒப்படையுங்கள்.

**மதிப்பீட்டு நியதிகள்**

| நியதிகள் | புள்ளிவழங்கலும் | | | |
|---|---|---|---|---|
| | தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| | 4 | 3 | 2 | 1 |
| • களப்பிரயாணத்தின் கருப்பொருளையும் குறிக் கோள்களையும் தீர்மானித்து அவற்றுக்கும் விடயத்துக்கும் உரிய தொடர்பை விளக்குதல். | | | | |
| • திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் | | | | |
| • விஜயஞ் செய்ய/ பார்க்க எதிர்பார்க்கும் இடங்கள்/ பொருட்கள் தொடர்பான தகவல் களை சேகரிதல், இடங்களைப்பட்டியற் படுத்தல். | | | | |
| • அவதானிப்புக்களைப் பதிவு செய்தல்/ பருமட் டான படங்களை வரைதல்/ பருமட்டான தேசப் படங்களை வரைதல்/ புகைப்படங்கள் | | | | |
| • களப்பிரயாணத்தின் பின்னர், கலந்துரையாட லும் பதிவு செய்த தகவல்களைக் கொண்டு அறிக்கை தயாரித்தலும் | | | | |
| **மொத்தம்** | | | | |
| **இறுதிப்புள்ளி** $\frac{\text{மொத்தப்புள்ளி}}{2}$ | | | | |

# கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள்.

**தரம் : 08**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 03**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**
- வேலை உலகில் தொடர்புறல்

**3.0 பாட உள்ளடக்கம்**
- எதிர்கால வேலையுலகை வெற்றிகரமாக எதிர்கொள்ளத்தக்க ஒருவரை உருவாக்குதல்.

**4.0 மதிப்பீட்டு கருவியின் தன்மை (மதிப்பீட்டுப்பேதம்)**
- வேலையுலகுக்கோ விளைதிறன்மிக்க உழைப்பாளி ஒருவரை உருவாக்கு வதற்காக, வேலையுலகு தொடர்பான ஒரு தேடல்.

**5.0 மதிப்பீட்டுக்கருவியின் குறிக்கோள்கள்**
- வேலையுலகில் காணப்படும் தொழில் துறைகளை இனங்காணல்.
- வெவ்வேறு தொழில்களுக்குத் தேவையான தகைமைகள், பயிற்சிகள் ஆகியன தொடர்பாக அறிவூட்டம் பெறல்.
- தெரிவு செய்து கொள்ளும் தொழில்களுக்குப் பொருத்தமான விண்ணப்பப் படிவங்களைத் தயாரிப்பதிலும் பூர்த்தி செய்வதிலும் பரிச்சயம் பெறுவார்.
- வேலையுலகுக்கு இசைவடைய வேண்டிய விதம் தொடர்பான முன்னனுபவம் பெறுவார்.

**6.0 மதிப்பீட்டை நடத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்**
**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**
- வகுப்பு மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களுக்கு பின்வரும் செயற்பாடுகளை வழங்குங்கள்.

**குழு 1**
- தொழில்துறைகளை இயன்ற அளவுக்கு கண்டறிந்து பட்டியற்படுத்துங்கள். (பத்திரிகை விளம்பரங்கள், அரச நிறவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள், தொழினுட்பக் கல்லூரிகள், பிரதேச செயலாளர் அலுவலகங்கள், இளைஞர் சேவைகள் சபை, தேசிய பயிலுநர் சபை, ஜேர்மன் தொழினுட்பப்பயிற்சி நிறுவனம், அரச வர்த்தமானி போன்றவற்றினூடாகப் பெறலாம்.)

**குழு 2**
- வெவ்வேறு தொழில்களுக்குத் தேவையான தகைமைகளைத் தேடிப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு 3**
- வெவ்வேறு தொழில்களுக்குரிய மாதிரி விண்ணப்பப்படிவங்களைத் திரட்டிக் கோவைப்படுத்துங்கள்.

**குழு 4**
- எந்தவொரு தொழிலுக்கும் பொருத்தமான பொது ஒழுக்கக் கோவையொன்றினைத் தயாரியுங்கள்.

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- உங்களது ஆசிரியரின் அல்லது ஆசிரியையின் அறிவுறுத்தல்களின்படி பல்வேறு தொழில் வகைகளைக் கண்டறிந்து பட்டியற்படுத்துங்கள்.
- அத்தொழில்களுக்குத் தேவையான அடிப்படைத்தகைமைகளைக் கண்டறிந்து எழுதுங்கள். அந்தந்த தொழிலுக்குரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தேடிப் பெற்றுத் திரட்டுங்கள்.
- வெவ்வேறு தொழில்களுக்குப் பொருத்தமான ஒழுக்கங்கள் பற்றிக் கவனஞ் செலுத்தி ஒரு பொது ஒழுக்கக் கோவையைத் தயாரியுங்கள்.
- மேற்படி தகவல்களை ஆக்கபூர்வமாக முன்வைக்கத்தக்க விதம் தொடர்பாக கவனஞ் செலுத்துங்கள்.

**மதிப்பீட்டு நியதிகள்**

| நியதிகள் | புள்ளிவழங்கலும் | | | |
|---|---|---|---|---|
| | தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| | 4 | 3 | 2 | 1 |
| • ஆசிரியரது அறிவுறுத்தல்களின்படி போதுமான அளவு தகவல்கள் சேகரித்தலும் சேகரித்த தகவல்களின் பொருத்தப்பாடும். | | | | |
| • தகவல் சேகரிப்பதற்காக பொருத்தமான பல்வேறு மூலாதாரங்களைப் பயன்படுத்தல். | | | | |
| • பெற்ற தகவல்களைப் பொருத்தானபோது பட்டியற்படுத்தல், அட்டவணைப்படுத்தல், ஆக்கப் பூர்வமாக காட்சிப்படுத்தல். | | | | |
| • குறித்த வேலைகளின் உயிரோட்டமாக பங்குபற்றுதல். | | | | |
| • ஒற்றுமையாக, ஒத்துழைத்து செயற்பாட்டில் ஈடுபடுதல் | | | | |
| **மொத்தம்** | | | | |
| **இறுதிப்புள்ளி** | | | | |

**பின்னூட்டலும் முன்முகலூட்டலும்**

- தாம் விரும்பும் தொழில்துறைகளைத் தெரிவு செய்தல்.
- அத்தொழிலுக்குத் தேவையான தகைமைகள்
- அத்தொழிலுக்கு விண்ணப்பிப்பதற்குரிய விண்ணப்பத்தின் மாதிரி
- அத்தொழிலுக்குப் பொருத்தமான ஒழுக்கங்களை உள்ளடக்கிய ஓர் ஒழுக்கக் கோவை தயாரித்தல்.

# கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள்.

**தரம் : 08**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 04**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- வாழ்க்கைத் தேர்ச்சி வேலைத்திட்டம்

**3.0 பாட உள்ளடக்கம்**

- அன்றாட வாழ்வை நல்ல எண்ணங்களை அடிப்படையாக்க கொண்டு செயற்படுவார்.
- வெவ்வேறு மனவெழுச்சி நிலைமைகளை இனங்கண்டு பொருளுள்ள வகையில் துலங்குவார்.
- முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வார்.
- தலைமைத்துவத்தை மதித்து, தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.
- வேலையுலகில் தொழில் மகத்துவம் பேணிச் செயற்படுவார்.
- பொதுச்சேவைகள் வழங்கும் நிறவனங்கள் சார்ந்த பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவு செய்வதில் கவனஞ் செலுத்துவார்.
- சனநாயக வாழ்க்கை முறையூடாக நல்லதோர் சமூகத்தை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்வார்.
- பல் கலாசார மக்கட் சமூகத்தில் ஒரு நல்ல பிசையாக வாழ்வார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களை இனங்கண்டு அவற்றை இழிவாக்குவதில் பங்களிப்பார்.

**4.0 மதிப்பீட்டு கருவியின் தன்மை (மதிப்பீட்டுப்பேதம்)**

- வாழ்க்கைத் தேர்ச்சிச் செயலமர்வு

**5.0 மதிப்பீட்டை நடத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்**

**ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- வாழ்க்கைத் தேர்ச்சிகள் செயலமர்வு தொடர்பாக அதிபருக்கு அறிவியுங்கள்.
- மாணவருக்கும் அறிவியுங்கள்
- பெற்றோரின் உதவியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்
- செயலமர்வுக்காக மாணவர்களை ஆயத்தப்படுத்துங்கள் (பயிற்சி)
- செயலமர்வு நடத்தும் திகதியைத் தீர்மானியுங்கள். திட்டமிட்டு தேவையான ஒழுங்குகளைச் செய்து கொள்ளுங்கள்.
- மாணவர் மாணவியர் சகலரையும் உள்ளடக்கம் வகையில் வேலைகளை ஒப்படையுங்கள்.
- மாணவரது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

**வாழ்க்கைத் தேர்ச்சிகள் செயலமர்வின் சிறப்பம்சங்கள்**
**(3.0 இல் தரப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்துக்கு அமைவாக)**

- வளவாளர்களது உரைகள்
- விளையாட்டுக்கள், களிப்பூட்டும் செயற்பாடுகள்
- அழகியற் செயற்பாடுகள்
- பாடல்கள், கவிதைகள், குறு நாடகங்கள் படைத்தல் (மாணவரது ஆக்கங்கள்)
- பாட்டுப்பாடுதல், கவிதை வாசித்தல்

- விவாதம், குழுக் கலந்துரையாடல்
- சுவரொட்டி ஆக்கல்
- வகிபாகமேற்று நடித்தல்
- நடனம்
- வினா - விடை நிகழ்ச்சி
- தொழிற்சந்தை
- முதலுதவி வேலைத்திட்டம்
- பல்கலாசார அம்சங்கள் அடங்கும் செயற்பாடுகள்
- பிற

ஆசிரியரது விருப்பப்படி மேற்படி அம்சங்கள் எல்லாவற்றையுமோ சிலதையோ தெரவு செய்து கொள்ளலாம். இவை தவிர வேறு புதியதாக அம்சங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**மதிப்பீட்டு நியதிகள்**

| நியதிகள் | புள்ளிவழங்கலும் | | | |
|---|---|---|---|---|
| | தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| | 4 | 3 | 2 | 1 |
| • ஆசிரியரது அறிவுறுத்தல்களின்படி போதுமான அளவு தகவல்கள் சேகரித்தலும் சேகரித்த தகவல்களின் பொருத்தப்பாடும். | | | | |
| • தகவல் சேகரிப்பதற்காக பொருத்தமான பல்வேறு மூலாதாரங்களைப் பயன்படுத்தல். | | | | |
| • பெற்ற தகவல்களைப் பொருத்தானபோது பட்டியற்படுத்தல், அட்டவணைப்படுத்தல், ஆக்கப் பூர்வமாக காட்சிப்படுத்தல். | | | | |
| • குறித்த வேலைகளின் உயிரோட்டமாக பங்குபற்றுதல். | | | | |
| • ஒற்றுமையாக, ஒத்துழைத்து செயற்பாட்டில் ஈடுபடுதல் | | | | |
| **மொத்தம்** | | | | |
| **இறுதிப்புள்ளி** | | | | |

## இணைப்பு - அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் முகப்புரை

மனித குடும்பத்தினைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும் அவர்களின் சமமான, பாரதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளதாலும்.

மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும் மனித்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தும் காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கை சுதந்திரம், அச்சத்திலிருந்தும் விடுதலை ஆகியனவற்றை மனிதன் பூரணமாகத் துய்க்கத்தக்க ஒரு உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாகும்.

கொடுங்கோன்மைக்கும் அடக்கு முறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்வதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப்படாமலிருக்க வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சியால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியம்.

நாடுகளிடையே நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதனை மேம்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளது.

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சகல மக்களும் பட்டயத்திலே அடிப்படை மனித உரிமைகளிலும் ஒவ்வொரு மனிதப்பிறவியினதும் கௌரவம்/ பெறுமதி/ ஆண்/ பெண் சம உரிமை என்பனவற்றிலுமான தமது நம்பிக்கையை மீளவலியுறுத்தி, அதிசுதந்திரச் சூழலில் சமூக முன்னேற்றம், உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தத் துணிந்துள்ளனராதல் வேண்டும்.

மனித உரிமைகளுக்கும் அடிப்படை சுதந்திரங்களுக்குமான உலகன் மதிப்பையும் கடைப்பிடித்தலையும் மேம்படுத்தலை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முற்றுமுழுதாகச் செயல் நிலைப்படுத்த அங்கத்துவ நாடுகள் உறுதி கொண்டுள்ளன.

இப்பிரகடனத்தை பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய பொது விளக்கமிரத்தல் முக்கியமானதாகும்.

பொதுச் சபையானது இப்பொழுது,

சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் இப்பிரகடனத்தை இடையறாது மனத்திலிருந்தி இவ்வுரிமைகள் சுதந்திரங்களுக்கான மதிப்பினை மேம்படுத்துவதற்குக் முயற்சித்தல் மூலமும் கல்வி மூலமும் தேசிய, சர்வதேசிய நடவடிக்கைகள் மூலமும் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் மக்களிடையேயும் அத்துடன் தங்கள் நியாயதிக்கத்தின் கீழ்வரும் ஆள்புலத்து மக்களிடையேயும் இவ்வுரிமைகள், சுதந்திரங்கள் முழு மொத்தமாக வலுவும் பயனுறுதிப்பாடுமுடைய முறையில் ஏற்கப் பெற்று அனுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்துவதற்காகவும் சகல மக்களும் நாட்டினங்களும் தத்தமது சாதனையிலக்கின் பொது நியமமாகக் கொள்ளத்தக்க இந்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை வெளிப்படுத்துகின்றது.

**உறுப்புரை 1 :**

மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள், அவர்களுடன் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

**உறுப்புரை 2 :**

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை. தேசிய அல்லது சமூகத் தோற்றம் - ஆதனம் பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவார்.

மேலும் எவருக்கும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயதிக்க அல்லது நாட்டின் அந்தஸ்தின் அடிப்படையில் - அது தனியாட்சி நாடாக - நம்பிக்கைபொறுப்பு நாடாக - தன்னாட்சியற்ற நாடாக அல்லது வேறேதேனும் வகையில் இறைமைமட்டுப்படுத்ததப்பட்ட நாடடாக இருப்பினும் சரி - வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

**உறுப்புரை 3** :

வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

**உறுப்புரை 4** :

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அலலது அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகையிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 5** :

எவரும் சித்திரைவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

**உறுப்புரை 6** :

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

**உறுப்புரை 7** :

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள். இப்பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

**உறுப்புரை 8** :

அவ்வந்நாட்டின் அரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காகத் தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

**உறுப்புரை 9** :

ஒரு தலைப்பட்சமாக கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுத்தல், நாடுகடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படுதலாகாது.

**உறுப்புரை10** :

தமது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் தமக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுகள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான நடுநிலை தவறாத நியாய சபையினால் மேற்கொள்ளப்படும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

**உறுப்புரை 11:**

(1) தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கு இணங்க அவர்கள் குற்றவாளிகளெனக் காண்பிக்கப்படும் வரை-சுத்தவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அவ்விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

(2) தேசிய சர்வதேச சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாகக் கொள்ளப்படாதிருந்த

பொழுது புரியப்பட்ட அச்செயல் அல்லது செய்யாமை காரணமாக எவரும் ஏதேனும் தண்டனைக்குரிய தவறுக்கான குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன் தண்டனைக்குரிய தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாகவிருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படுதலாகாது.

**உறுப்புரை 12:**

எவரும் அவரது அந்தரங்கம், குடும்பம் -வீடு அல்லது கடிதப்போக்குவரத்து என்பவை சம்பந்தமாக ஒருதலைப்பட்சமான தலையீட்டிற்கோ அல்லது அவரது மரியாதை - நன்மதிப்பு என்பவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தப்படுதலாகாது. அத்தகைய தலையீட்டிற்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக ஒவ்வொருவரும் சட்டப்பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

**உறுப்புரை 13:**

(1) ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்வதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) தனது சொந்த நாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும் தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 14:**

(1) வேறு நாடுகளுக்குச் செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து தத்துவங்களுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொடுப்புக்கள் சம்பந்தமாக இவ்வுரிமை கேட்டுப் பெறப்படலாகாது.

(2) அரசியல் குற்றங்கள் சம்பந்தமாக அல்லது ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொடுப்புக்கள் சம்பந்தமாக இவ்வுரிமை கேட்டுப் பெறப்படுதலாகாது.

**உறுப்புரை 15:**

(1) ஒரு தேசிய இனத்தவராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

(2) எவரதும் தேசிய இனத்துவம் பறிக்கப்படுதலோ தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

**உறுப்புரை 16:**

(1) வயதுவந்த ஆண்களும் பெண்களும் இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பவை காரணமாக கட்டுப்பாடெதுவுமின்றி திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணம் செய்யும்பொழுதும் திருமணமாகி வாழும் பொழுதும் திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுண்டு.

(2) தம்பதிகளாக வாழ இருப்போரது சுயாதீனமானதும் முழுமையானதுமான சம்மதத்தடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம்.

(3) குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

**உறுப்புரை 17:**

(1) தனியாகவும் வேரொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவரினதும் ஆதனம் ஒரு தலைப்பட்சமாக பறிக்கப்படுதல் ஆகாது.

**உறுப்புரை 18:**

சிந்தனை சுதந்திரம் - மனச்சாட்சி சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பனவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு, அனுட்டானம் என்பன மூலம் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும் வேறொருவருடன் கூட்டாகவும் பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.

**உறுப்புரை 19:**

கருத்துச் சுதந்திரத்திற்கும் பேச்சுச் சுதத்திரத்திற்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றிக் கருத்துக்களை கொண்டிருப்பதற்கும் எவ்வழிவகைகள் மூலமும் எல்லைகளைப் பொருட்படுத்தாமலும் தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும் பெறுவதற்கும் பரப்புவதற்கும் உள்ள சுதந்திரத்தையும் உள்ளடக்கும்.

**உறுப்புரை 20:**

(1) எவருக்கும் சமாதான முறையில் ஒன்று கூடுவதற்கும் ஒருங்கு சேர்வதற்கும் உரிமையுண்டு.

(2) ஒரு கழகத்தினை சேர்ந்தவராயிருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.

**உறுப்புரை 21:**

(1) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கு பெறுவதற்கு உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

(3) மக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பமானது காலததிற்கு காலம் நடைபெறும் மெய்யான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இத்தேர்தல் பொதுவானதும் சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன் இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச் சமமான சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

**உறுப்புரை 22:**

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேச நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும் ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்ததம் மதிப்புக்கும் தத்தம் ஆளுமையை சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும் - இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

**உறுப்புரை 23:**

(1) ஒவ்வொருவரும் தொழில் செய்வதற்கும் அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கும் - செய்யுந்தொழிலில் நியாயமானதும் அனுகூலமுடையதுமான தொழில் நிபந்தனைக்கு உரியோராயிருப்பதற்கும், தொழிலின்மைக்கெதிரான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உரியவர் ஆவார்.

(2) ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(3) வேலை செய்யும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியைபான ஒரு வாழ்க்கையை நடாத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும் அனுகூலமுடையதுமான ஊதியத்திற்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.
(4) ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களை பாதுகாப்பதற்கென தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றிற் சேர்வதற்குமான உரிமையுண்டு.

**உறுப்புரை 24:**

இளைப்பாறுகைக்கும் ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவர். இதனுள் வேலை செய்யும் மணித்தியால வரையறை சம்பளத்துடனான விடுமுறைகள் அடங்கும்.

**உறுப்புரை 25:**

(1) ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக்கவனிப்பு அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமதும் தமது குடும்பத்தினதும் நலத்துக்கும் - நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை - இயலாமை - கைம்மை - முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.
(2) தாய்மை நிலையும் குழந்தைப்பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும் அவை திருமண உறவினுட் பிறந்தவையாயினும் சரி அத்தகைய உறவின்றிப் பிறந்தவையாயினும் சரி சமமான சமூகப் பாதுகாப்பினைத் துய்க்கும் உரிமையுடையன.

**உறுப்புரை 26:**

(1) ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு குறைந்தது தொடக்க அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாயிருத்தல் வேண்டும். தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்படுதல்வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் உயர் தொழிற்கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக்கனவாயிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவருக்கும் திறமையின் அடிப்படையில் சமமான முறையில் கிடைக்கக்கூடியதாக இருத்தலும் வேண்டும்.
(2) கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்யும் மனித உரிமைகளுக்கும் அடிப்படை சுதத்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்தவும் கூடியதாக ஆற்றுப்படுத்தல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும் இன அல்லது மதக் குழுவினருக்கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுமை, தோழமை ஆகியவற்றை மேம்படுத்தல் வேண்டுமென்பதுடன் சமாதானத்தை பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்லுவதற்குதவவும் வேண்டும்.
(3) தமது குழந்தைகளுக்குப் புகட்டபட வேண்டிய கல்வியின் வகை - தன்மையை முதலிலேயே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

**உறுப்புரை 27:**

(1) சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும் கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

(2) அறிவியல், இலக்கிய - கலைப்படைப்பினை ஆக்கிய கர்த்தா என்ற வகையில் அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்கநெறி, கருப்பொருள் நலன்களின் பாதுகாப்பிற்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

**உறுப்புரை 28:**

இப்பிரகடனத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக் கூடிய சமூக -சர்வதேச நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

**உறுப்புரை 29:**

(1) எந்த ஒரு சமூகத்திலும் தமது ஆளுமையின் கட்டற்ற - பரிணாம வளர்ச்சி சாத்தியமாக விருக்குமோ அந்த சமூகத்தின் பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு.

(2) ஒவ்வொருவரும் தனது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும்பொழுது இன்னொருவரின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்குமுரிய அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்திற்காகவும் சனநாயக சமுதாய மொன்றிலே ஒழுக்கசீலம், பொதுமக்கள் ஒழுங்கமைதி பொதுச்மேநலன் எனும் நீதி முறையான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும் நோக்கத்திற்காகவும் தனித்து சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு மாத்திரமே கட்டுப்படுபவராயமைதல் வேண்டும்.

(3) இவ்வுரிமைகளும் சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் முரணாக எச்சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்கப்படலாகாது.

**உறுப்புரை 30:**

இப்பிரகடனத்திலுள்ள எவையும் இதன் கண், எடுத்துக்காட்டப்பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றுள் எவற்றையும் அழிக்கும் நோக்கத்தையுடைய ஏதேனும் முயற்சியில் ஈடுபடுவதற்கு அல்லது செயலெதனையும் புரிவதற்கு எந்த ஒரு நாட்டுக்கோ குழுவுக்கோ அல்லது ஒருவருக்கோ யாதேனும் உரிமையை அளிக்கும் உட்கிடையைக் கொண்டுள்ளதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.